சுதந்திரத்

# தமிழ் இலக்கணமும் உரை நடையாக்கமும்




தமிழ் வளர்ந்த மதுரை

பண்டித: எஸ். கேசவராமசாமி....
பண்டித: நா. லெட்சுமிநரசிம்மன்....

T17548
R005K03
T.17548

ஐந்தாம் பாரம்

இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன்
.. மதுரை ........ சென்னை .....

# SUDHANTHIRA
# TAMIL GRAMMAR
# &
# COMPOSITION

## FORM V

(Prepared according to the Finalized Syllabus—1948]

Pandit. S. KESAVARAMASAMY

&

Pandit N. LAKSHMINARASIMHAN

E. M. GOPALAKRISHNA KONE

MADURAI :: :: MADRAS

Rights Reserved] 1953 [Price Rs. 1-4-0.

First Edition -1949.
Second Edition-1953.

# நான்முகம்

சுதந்திரத் தமிழ் இலக்கணமும் உரைநடையாக்கமும் என்ற பெயர்கொண்ட இலக்கண நூல் வரிசையில் இது ஐந்தாம் புத்தகமாகும். இது அரசியலார் அண்மையில் வெளியிட்ட புதிய பாடத்திட்டப்படி எழுதப்பெற்றது.

மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத இலக்கணம், மாணவர்க்கு வெறுப்பை விளைப்பது இயல்பாக இருக்கிறது. அவ்வாறு வெறுப்பு விளையாதவாறு எளிய இனிய நடையில் தெளிவாக இது எழுதப்பட்டுள்ளது. இலக்கணப் பகுதி தகுந்த உதாரணங்களுடனும் முடிவில் பயிற்சி வினாக்களுடனும் அமைந்துள்ளது. மொழிப் பயிற்சி புதியமுறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. கட்டுரைப் பகுதி பலவகைத் தலைப்புக்களும், தலைப்புக்களுக்குரிய விளக்கங்களும், மாதிரிக் கட்டுரைகளும், ஒவ்வொரு பயிற்சிக் கட்டுரை வகைக்கும் இன்றியமையாத நூல்களின் பெயர்களும் சேர்த்து மாணவரது இயற்கையறிவு மொழிப் பயிற்சியில் வளர்ச்சி பெறும் வழியில் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது.

இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்களும், தலைமையாசிரியர்களும் தங்கள் தங்கள் கலாசாலைகளில் பாடமாக வைத்து எம்மை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

ஆசிரியர்கள்.

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை— '53.

# உள்ளுறை

## இலக்கணம்


பொருள் — பக்கம்

### பொது

I. எழுத்து

1. குற்றியலுகரம் ... 1
2. முற்றியலுகரம் ... 2
3. குற்றியலிகரம் ... 3
4. அளபெடை (உயிரளபெடை) ... ,,
5. ஒற்றளபெடை ... 4

II. சொல்

A. பெயர்ச்சொல்:

1. காரணப் பெயர், இடுகுறிப் பெயர் ... 5
காரண இடுகுறிப்பெயர், பொதுப் பெயர்
சிறப்புப் பெயர் ... 6
2. ஆகுபெயர் ... ,,
2. வேற்றுமை ஏற்கும்போது வேறுபடும் பெயர்கள் ... 8

B. வினைச்சொல்:

1. பகுபத இலக்கணம் ... 10
2. வினைமுற்று வகைகள் ... 11
ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று ... 13
3. முற்றெச்சம் ... 14

C. இடைச்சொல்:

1. ஏகாரம், ஓகாரம் ... 15
2. உம்மை, கொல் ... 17

D. உரிச்சொல்:

4. சால, உறு, தவ, நனி ... 18

III. பொது

வழக்கு: இயல்பு-தகுதி ... 19

## IV. புணர்ச்சி


1. மூவகை விகாரங்கள் ... 21
2. குற்றுகரப் புணர்ச்சி ... 22
3. பண்புத் தொகைப் புணர்ச்சி ... 23


## V. யாப்பு


வெண்பா, ஆசிரியப்பா ... 25


## VI. அணி


சிலேடை, மடக்கு ... 27


# மொழிப் பயிற்சி


I வாக்கிய வகைகள் ... 29
II வாக்கிய மாற்றம் ... ,,
1. செய்வினை, செயப்பாட்டு வாக்கியங்கள் ... ,,
2. உடன்பாட்டு, எதிர்மறை வாக்கியங்கள் ... 30
3. நேர் கூற்றும் அயற்கூற்றும் ... 31
III வாக்கியப் பிழைகளும் திருத்தமும் ... 32
IV வழூஉச் சொற்களும் திருத்தமும் ... ,,
V சொற் பொருத்தம் ... 33
VI சொற்றொடர், மரபுத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல் ... 37
VII உவமைகளையும் பழமொழிகளையும் வாக்கியத்தில் அமைத்தல் ... 38
VIII நிறுத்தக் குறிகள் (பழையன திருப்புதல், கீழ்க்கோடு இடுதல்) ... 41
இடைப்பிறவைப்புக் குறி ... 42
IX வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் ... 43


# சிறப்பு

## I. எழுத்து


1. எழுத்துக்களின் பொதுச்சிறப்பு ... 48
2. உடனிலை, வேற்றுநிலை மயக்கம் ... ,,

## II சொல்

### 1. பெயர்ச்சொல் :


| | | |
|---|---|---|
| (i) | விளியேலாப்பெயர்கள் | ... 50 |
| (ii) | விளியேற்கும்போது மாறுபடும் முறை | ... 51 |
| (iii) | ஆகுபெயர் | ... 53 |


### 2. வினைச்சொல் :


| | | |
|---|---|---|
| 1. | செய்யும் என்னும் முற்று | ... 55 |
| 2. | பொது வினைகள் | ... 56 |
| 3. | எச்சத் திரிபு | ... ,, |
| 4. | உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று | ... 57 |


### 3. இடைச்சொல் :


| | |
|---|---|
| மன் | ... 58 |
| என, தில் | ... 59 |
| அம்ம, மோ, மதி, மாது, போலும், ஆம், தான், தாம் | ... 60 |


### 4. உரிச்சொல் :


| | |
|---|---|
| கெழு, மல்லல், கூர், கழி, தட, கை | ,, |


## III. பொது


| | | |
|---|---|---|
| 1. | தொகையில் பொருள் சிறந்து நிற்குமிடம் | ... 61 |
| 2. | மரபு | ... 62 |
| 3. | வழுவமைதிகள் - கால, மரபு வழுவமைதிகள் | ... 63 |
| 4. | ஒரு பொருட் பன்மொழி, இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர் | ... 65 |
| 5. | உப லட்சணம் | ... 66 |


## IV. புணர்ச்சி


| | | |
|---|---|---|
| 1. | உயர்திணை, பெயர்ப்புணர்ச்சி | ... ,, |
| 2. | உயரீற்றில் இயல்பாக நிற்பவை | ... 67 |


## V. யாப்பு


| | | |
|---|---|---|
| 1. | சீர்பிரித்து வாய்பாடு கூறுதல் | ... ,, |
| 2. | தளையின் பொது இலக்கணமும் வகையும் | ... 68 |
| 3. | வெண்டளையின் இலக்கணம் | ... 69 |

4. வெண்பா வகை ... 69
ஆசிரியப்பா வகை ... 70
5. ஆசிரிய விருத்த இலக்கணம் ... 71

## VI. அணி

வேற்றுமையணி, வஞ்சப் புகழ்ச்சியணி,
நிரல்நிறையணி ... 72

## VII. பொருள் இலக்கணம்

1. அகப்பொருள் ... 73
2. புறப்பொருள் ... 74

## உரைநடை யாக்கம்

1. கட்டுரை வரைதல் ... 75
2. கட்டுரை வகை ... 81
வருணனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை,
சிந்தனைக் கட்டுரை ... 82
கதைக் கட்டுரை ... 83
வரலாற்றுக் கட்டுரை, சமூகக் கட்டுரை ... 84
பொருளியல் கட்டுரை ... 85
கல்வி யறிவியல் கட்டுரை ... 86
இளைஞர் இயக்கம் குறிப்பு விளக்கம் ... 87
நூல்களைப் படித்துக் குறிப்புகளைத் தயாரித்தலும்
கட்டுரை வரைதலும் ... 88
பத்திரிகைச் செய்தி எழுதும் முறை ... 89
பல்வகைக் கட்டுரைகள் ... 91

## ஐந்தாம்பாரக் கட்டுரைப் பகுதி

1. உரையாடல் ... 124
2. மதிப்புரை ... 131
3. இலக்கியப் பாராட்டுக் கட்டுரை ... 135
4. தீர்மானங்களைத் தயாரித்தல் ... 138
5. வரவேற்புரை ... 140
6. வேண்டுகோள் ... 144

சுதந்திரத்

# தமிழ் இலக்கணம்

## ஐந்தாம் பாரம்

---

## பொது

## I எழுத்து

### பழம் பாடப் பயிற்சி வினாக்கள்

1 எழுத்தென்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
2 முதலெழுத்துக்கள் யாவை?
3 சார்பெழுத்துக்களின் வகைகள் யாவை?
4 உயிரெழுத்தின் வகைகள் யாவை?
5 மெய்யெழுத்தின் பிரிவுகள் யாவை?
6 சுட்டெழுத்தென்றால் என்ன? அவை யாவை?
7 வினாவெழுத்தென்றால் என்ன? அவை யாவை?
8 மொழிமுதலெழுத்துக்கள் யாவை?
9 போலி எழுத்து என்றால் என்ன?
10 மூவிடப் போலிகட்கும் உதாரணம் தருக.

## 1. குற்றியலுகரம்

தனி நெட்டெழுத்தின் பின்னும், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிற எழுத்துக்களின் பின்னும், சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறி வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரை யளவிற் குறைந்து வரும். அவ்வாறு வரும் உகாத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர்.

நாடு — தனி நெடிலின் பின் வந்தது.
அழகு — இரண்டு எழுத்துக்களுக்குப் பின் வந்தது.
சிறப்பு — மூன்று எழுத்துக்களுக்குப் பின் வந்தது.

## குற்றியலுகர வகை

குற்றியலுகரம் தான் ஏறிநின்ற ஈற்றெழுத்தின் அயலெழுத்தை நோக்க ஆறு வகைப்படும்.

பட்டு — வல்லெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது வன்றொடர்க் குற்றியலுகரம்.

அன்பு — மெல்லெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது மென்றொடர்க் குற்றியலுகரம்.

மார்பு — இடை யெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

நாடு — தனி நெட்டெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

அஃது — ஆய்தவெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

அழ(ழ் + அ)கு — உயிர்மெய் யெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

ழ என்ற உயிர்மெய்யிலுள்ள அ என்ற உயிர் குற்றியலுகரத்திற்கு அடுத்த எழுத்தாவதால் உயிர்த்தொடர் என்று வழங்கப்படும்.

இவ்வாறு குற்றியலுகரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம் என ஆறுவகைப்படும்.

ந-சூ. நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலிஇடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.

## 2. முற்றியலுகரம்

உகரம் தனக்குரிய ஒரு மாத்திரை யளவிற் குறையாது ஒலிக்குமாயின் அது முற்றியலுகரம் எனப்படும். தனிக்குற்றெழுத்தை யடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறி வரும் உகரமும், மெல்லின மெய்யின்மேலும் இடையின மெய்யின் மேலும் ஏறி வரும்

உகரங்களும், தனித்துவரும் உகரங்களும் முற்றிய லுகாங்களாம்.

அது, பசு, கொடு — தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து வல்லின மெய்யின்மேல் வந்தன.

மன்னு, தாணு, தும்மு— மெல்லின மெய்யின் மேல் வந்தன.
வாழ்வு, துள்ளு, எழு — இடையின மெய்யின் மேல் வந்தன.
உ, கு, மு, யு — தனித்து வந்தன.

## 3 குற்றியலிகரம்

நிலைமொழி யிறுதியில் நிற்கும் குற்றிய லுகாத்தின் முன் வருமொழி முதலில் யகரம் வருமாயின், குற்றிய லுகரம் இகரமாகத் திரியும். அவ்வாறு திரிந்த இகரமும் 'மியா' என்னும் அசைச் சொல்லின் முதலில் நின்ற இகரமும் குற்றியலிகரங்கள் ஆம்.

நாடு + யாது — நாடியாது
நான்கு + யானை — நான்கியானை
கேள் + மியா — கேண்மியா

ந-சூ. யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய.

## 4. உயிரளபெடை

அளபெடை என்பது எழுத்துக்கள் தம் அளவைக் கடந்து நீண்டொலித்தல் எனப் பொருள்படும். விளித்தல், பண்டமாற்றல், புலம்பல், இன்னிசை முதலிய சந்தர்ப்பங்களில் எழுத்துக்கள் அளவு கடந்து ஒலிக்கப்படுமாயினும் உலக வழக்கில் அளபெடையைக் கையாள்வது இல்லை. செய்யுள் வழக்கில் அளபெடை பயின்றுவரும்.

செய்யுள் அமைக்கும்பொழுது (அசை) ஓசை குறைந்தால், ஓசை குறைந்த சொல்லிலுள்ள நெட்டெழுத்தை அதற்குரிய இரண்டு மாத்திரையளவைக் காட்டிலும் நீண்டு ஒலிக்குமாறு அமைப்பதுண்டு. அவ்வாறு அமைந்த நெட்டெழுத்தை அறிவதற்

தனிக்குறியாக அதன்பிறகு அதற்கினமான குற்றெழுத்து எழுதப் படும். எனவே, உயிரளபெடையில் நெட்டெழுத்தேழும் மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் அளபெடுத்து வரும்.

உதாரணம்

'ஓஒதல் வேண்டும்' ('ஓதல் என்னும் சொல்லின் முதலிலுள்ள ஓகாரம் அளபெடுத்துத் தன்னினமான ஒகரக் குறிலை அடையாளமாகக் கொண்டு நிற்கிறது.)

'தெய்வம் தொழாஅள்' ('தொழாள்" என்னும் சொல்லின் நடுவிலுள்ள நெட்டெழுத்து அளபெடுத்தது.)

'நல்ல படாஅபறை' ('படா' என்னும் சொல்லின் இறுதியிலுள்ள நெட்டெழுத்து அளபெடுத்தது)

ந-ரு. இசை கெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.

## 5. ஒற்றளபெடை

மெய்யெழுத்து நீண்டொலிப்பது ஒற்றளபெடை எனப்படும். செய்யுளில் ஓசை குறைந்த இடத்து ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், என்ற மெய்யெழுத்துக்களும், ஆய்தவெழுத்தும், தமக்குரிய அரை மாத்திரையைக் கடந்து நீண்டொலிக்கும். அவ்வாறு ஒலிக்கும்பொழுது அதே எழுத்து அடையாளமாக அடுத்து எழுதப்பெறும்.

உதாரணம்

'இலங்ங்கு வெண்பிறை' - ங் அளபெடுத்தது.
'எஃஃ கிலங்கிய கையர்' - ஆய்தம் அளபெடுத்தது.

பயிற்சி

குற்றியலுகர முற்றியலுகரங்களைக் கூறுக:

| | | | |
|---|---|---|---|
| அழகு, | கதவு, | திரு, | நன்று, |
| வாழ்வு, | வாழ்த்து, | பொழுது, | தொழு, |
| பசு, | பாடு, | பட்டு, | வண்டு, |
| உறுமு, | அறிவு, | அரிது, | அஃது. |

பயிற்சி

இன்ன தொடர்க் குற்றியலுகரம் எனக் கூறுக:

| | | | |
|---|---|---|---|
| அஃது, | அழகு, | பட்டு, | வண்டு, |
| நாடு, | அரிது, | படகு, | அன்பு. |

## பயிற்சி வினாக்கள்

1 குற்றியலுகரம் என்றால் என்ன ?
2 குற்றியலுகரம் எத்தனை வகைப்படும் ?
9 இன்ன தொடர்க் குற்றியலுகரம் என்பது எவ்வாறு கண்டறியப் படும் ?
4 குற்றிய லிகரமாவது யாது ?
5 அளபெடை என்றால் என்ன ?
6 உயிரளபெடை எவ்வாறு வரும் ?
7 ஒற்றளபெடை எவ்வாறு வரும் ?

# II சொல்

ஒரு எழுத்தேனும், இரண்டு முதலிய பல எழுத்துக்கள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை அறிவிப்பது சொல் எனப்படும்.

## சொல் வகை

அச்சொல் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், என நான்கு வகைப்படும்.

## I பெயர்ச்சொல்

ஒன்றன் பெயராக வருவது பெயர்ச்சொல்லாம். (இதன் வகைகள் சிலவற்றை முன் வகுப்பிற் படித்தீர்கள். இவ் வகுப்பில் இன்னும் சில விவரங்கள் கூறப்படும்).

### i காரணப் பெயர்

ஏதேனும் ஒரு காரணத்தையொட்டிப் பொருள்களுக்குப் பெயராக வழங்குவது காரணப் பெயராம்.

உதாரணம்

நாற்காலி—நான்கு கால்களை யுடையது.
காற்றாடி—காற்றில் ஆடுவது.

### இடுகுறிப் பெயர்

காரணம் புலப்படாமற் பெரியோர்களால் இடப்பட்ட குறியாக வழங்கிவரும் பெயர் இடுகுறிப் பெயராம்.

உதாரணம்

மரம், கல், மாடு—இச் சொற்களின் காரணம் புலப்படவில்லை,

## காரண இடுகுறிப் பெயர்

காரணம் கருதும்பொழுது அக் காரணத்தையுடைய பல பொருள்கட்குப் பெயராக வழங்குமாயினும், அவ்வாறின்றி அக் காரணத்தையுடைய ஒரு பொருளுக்கே இடுகுறியளவுப் பெயராக வழங்கிவருவது காரண இடுகுறிப் பெயர் ஆம்.

### உதாரணம்

முள்ளி. இப் பெயர் முள்ளையுடைய எல்லாச் செடிகட்கும் பெயராகாது ஒருவகைச் செடிக்கே பெயராய் வருதலால், இது காரணமும் இடுகுறியும் கலந்த காரண இடுகுறிப் பெயர்.

முக்கண்ணன்—இது மூன்று கண்களையுடைய எல்லாக் கடவுளர்க்கும் பெயராகாது, சிவனுக்குப் பெயராக வருவதாற் காரண இடுகுறிப் பெயராயிற்று.

## பொதுப் பெயர்—சிறப்புப் பெயர்

பல பொருள்கட்கும் பொதுவாக வழங்குபவை **பொதுப் பெயர்கள்** ஆம். ஒரு பொருளை குறித்துச் சிறப்பாக வழங்கும் பெயர் **சிறப்புப் பெயர்** ஆம்.

மரம்-விலங்கு-பறவை—பொதுப் பெயர்கள்.

தென்னை-யானை-கிளி—சிறப்புப் பெயர்கள்.

### பயிற்சி

(1) பின்வருவனவற்றில் இடுகுறிப் பெயர், காரண இடுகுறிப் பெயர் இவையெனக் கூறுக:

பறவை, காடு, பொன்னன், அணி, பூ, மலர், முக்காலி, செடி, குரங்கு, அந்தணன், முக்கண்ணன்.

(2) பின்வருவனவற்றுள் பொதுப் பெயர், சிறப்புப் பெயர் இவையெனக் கூறுக:

மரம், பறவை, கருடன், வாழை, விலங்கு, பசு, நாடு, தமிழகம், நதி, வையை, மலை, இமயம்.

## ii ஆகுபெயர்

ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராக வழங்கு

வரும் ஆகுபெயர் என்பதை முன் வகுப்பிற் படித்திருப்பீர்கள்.

அவ்வாகுபெயர் 1. பொருளாகுபெயர். 2. இடவாகுபெயர். 3. காலவாகுபெயர். 4. சினையாகுபெயர். 5. குணவாகுபெயர். 6. தொழிலாகுபெயர். முதலாகப் பல வகைப்படும்.

குளத்தில் தாமரை படர்ந்துள்ளது. இங்கே தாமரை என்னும் பெயர் கொடி, இலை, பூ, எல்லாவற்றையும் குறிக்கும் முதற் பொருளின் பெயர்.

1. தாமரை போன்ற முகம். இங்கே தாமரை என்பது பூவை (சினையை) மட்டும் குறித்து வருகிறது இவ்வாறு வருவது பொருளாகு பெயர்.

நமது நாடு பழமையானது. இங்கே 'நாடு' என்பது இடத்தின் பெயராக வருகிறது.

2. நாடு புகழும் நல்லவர், இங்கே 'நாடு' என்பது நாட்டிலுள்ள மக்களைக் குறித்து வருதலால் இடவாகு பெயர்.

கோடை கடுமையானது. இங்கே 'கோடை' என்பது ஒரு காலத்தைக் குறிக்கும் பெயராதலாற் காலப் பெயர்.

3. கோடை விளைந்தது. இங்கே 'கோடை' என்பது கோடைக்காலத்தில் விளையும் பயிரை உணர்த்துதலால் இது காலவாகு பெயர்.

தலையில் மூளை இருக்கிறது. இங்கே 'தலை' என்பது ஒரு உறுப்பின் பெயராதலாற் சினைப் பெயர்.

4. தலைக்குப் பத்து ரூபாய் கொடு. இங்கே 'தலை' என்பது மனிதனைக் குறித்தலாற் சினையாகு பெயர்.

கொக்கின் நிறம் வெள்ளை. இங்கே 'வெள்ளை' என்பது நிறத்தைக் குறித்தலாற் குணப் பெயர்.

5. வயலில் வெள்ளை உழுதது. இங்கே 'வெள்ளை' என்பது வெள்ளை நிறமுள்ள மாட்டைக் குறித்தலாற் குணவாகு பெயர்.

வற்றல் மரம். இங்கே 'வற்றல்' என்பது வற்றுதல் என்ற தொழிலைக் குறிப்பதாற் றொழிற் பெயர்.

6. வற்றல் உண்டான். இங்கே 'வற்றல்' என்பது அத் தொழிலையடைந்த பொருளைக் குறித்தலாற் றொழிலாகு பெயர்.

காளை ஓடுகிறது. இங்கே காளை என்பது மாட்டைக் குறித்த லால் இது ஒரு பொருட் பெயர்.

7. காளை வந்தான். இங்கே 'காளை' என்பது காளைபோல்வா ராகிய ஒரு ஆண்மகனைக் குறித்து வருகிறது. காளை என்பது ஆண்மகனுக்கு உவமை. அந்த உவமையே அவ் வாண்மகனுக்குப் பெயராக வருதலால் இது உவமையாகு பெயர்.

## பயிற்சி

*பின்வருவனவற்றுள் ஆகுபெயர்களைக் கூறி, இன்ன ஆகுபெயரென் றும் கூறுக :*

*உலகம் மகிழ்ந்தது, நீலம் சூடினான், பொங்கலுண்டான், பாவை பாடினாள், வெற்றிலை நட்டான், கார் விளைந்தது, வெள்ளையடித் தான்.*

## III. வேற்றுமை யேற்கும்போது வேறுபடும் பெயர்கள்

வேற்றுமை என்றால் என்ன என்பது பற்றியும், அதன் வகைகளைப் பற்றியும், உருபுகளையும், பொருள் வகைகளையும் முன் வகுப்பிற் படித்திருப்பீர்கள். இங்குச் சில பெயர்கள் உருபேற்கும் போது மாறுபடுவது பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.

நான், யான் என்ற ஒருமைப் பெயர்கள் வேற்றுமை யுரு பேற்கும்பொழுது என் என மாறும். நாம் என்ற தன்மைப் பன்மை பெயர் நம் என்றும், யாம் என்ற தன்மைப் பன்மைப் பெயர் எம் என்றும் மாறும். நீ என்ற முன்னிலை யொருமைப் பெயர் நின் அல்லது உன் என்று மாறும். நீர், நீவிர் என்ற முன்னி லைப் பன்மைப் பெயர்கள் நும் அல்லது உம் என்று மாறும். தான் என்ற படர்க்கை யொருமை தன் எனவும் தாம் என்ற படர்க்கைப் பன்மைப் பெயர் தம் எனவும் மாறும்.

## உதாரணம்

நான்

என்னை - என்னால் - எனக்கு - என்னின் - எனது என்னிடம்.

நாம்

நம்மை - நம்மால் - நமக்கு - நம்மின் - நமது - நம்மிடம்.

யாம்

எம்மை - எம்மால் - எமக்கு - எம்மின் - எமது - எம்மிடம்,

நீ

உன்னை - உன்னால் - உனக்கு - உன்னின் - உனது - உன்னிடம்
நின்னை - நின்னால் - நினக்கு - நின்னின் - நினது - நின்னிடம்.

நீர் — நீவிர்

உம்மை - உம்மால் -உமக்கு - உம்மின் - உமது - உம்மிடம்.

தான்

தன்னை - தன்னால் - தனக்கு - தன்னின் - தனது - தன்னிடம்.

தாம்

தம்மை - தம்மால் - தமக்கு - தமது - தம்மிடம்.

## பயிற்சி வினாக்கள்

1. இடுகுறிப் பெயரென்றால் என்ன?
2. காரணப் பெயராவது யாது?
3. காரண இடுகுறிப் பெயரென்றால் என்ன?
4. பொதுப்பெயர், சிறப்புப் பெயர்களை உதாரணம் காட்டி விளக்குக.
5. ஆகு பெயர் என்றால் என்ன?
6. ஆகுபெயரின் வகைகள் யாவை?
7. வேற்றுமை என்றால் என்ன?
8. வேற்றுமை எத்தனை? அவற்றின் உருபும், பொருளும் யாவை?
9. நீ, நான், நாம் இவற்றுடன் ஆறு வேற்றுமை யுருபுகளையும் சேர்த்துக் கூறுக.

## 2 வினைச் சொல்

ஒரு பொருளின் தொழில் நிகழ்ச்சியை உணர்த்தும் சொல் வினைச்சொல். இதைப் பற்றிய சில விவரங்களை முன்வகுப்பிற் படித்திருப்பீர்கள். இவ் வினைச்சொல்லிலும் பெயர்ச்சொல்லிலும் சில, பகுபதங்களாகப் பிரிக்கப்படும். சில பிரிக்கப்படாமல் பகாப்பதங்களாக இருக்கும். ஆகவே பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் பகுபதம், பகாப்பதம் என இருவகைப்படும்.

உதாரணம்

பொன், செல் — பகாப்பதம்

பொன்னன், செல்வான் — பகுபதம்.

### i பகுபத இலக்கணம்

பகுபதங்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறு உறுப்புக்களாகப் பிரிக்கப்படும். இவற்றிற் பகுதியும் விகுதியும் எல்லாப் பகுபதங்களிலும் வரும். பிற வுறுப்புக்கள் பகுபதங்களுக்கு ஏற்றபடி வரும். இவற்றுட் பகுதி பகுபதத்தின் முதலிலும், விகுதி இறுதியிலும், இடைநிலை நடுவிலும், சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலும், சந்தி பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவிலும், விகாரம் சொல் விகாரமடைந்த இடத்திலும் நிற்கும். பகுதி முதலில் நிற்பதால் முதனிலை என்றும், விகுதி கடைசியில் நிற்பதால் இறுதிநிலை என்றும் வழங்கப்பெறும். நடுவில் நிற்கும் உறுப்புக்கு இடைநிலை என்றே பெயர். இவ் வாறு உறுப்புக்களைத் தவிர எதிர்மறைச் சொல்லாயின் எதிர்மறை இடைநிலை அல்லது விகுதியும், சிறுபான்மை எழுத்துப்பேறு என்ற வுறுப்பும் சேர்ந்து வருதலும் உண்டு.

வினைச் சொல்லிற் பகுதி தொழிலையும், விகுதி திணை, பால் எண், இடங்களையும், இடைநிலை காலத்தையும் உணர்த்தும்.

உதாரணம்

| | பகுதி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|
| சொல்வான் — | சொல் | + | வ் | + | ஆன் |

| | பகுதி | | சந்தி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|---|---|
| படித்தான் — | படி | + | த் | + | த் | + | ஆன் |

| | | |
|---|---|---|
| | | பகுதி இடைநிலை சாரியை விகுதி |
| உண்டனர் | — | உண் + ட் + அன் + அர் |
| | | பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி |
| எழுந்தனன் | — | எழு + த்(ந்) + த் + அன் + அன் |
| | | (த்—ந் ஆனது விகாரம்). |
| | | பகுதி இடைநிலை விகுதி |
| கண்டான் | — | காண் + ட் + ஆன் |
| | | பகுதி எதிர்மறைஇடைநிலை விகுதி |
| செய்யற்க | — | செய் + அல் + க |
| | | பகுதி எதிர்மறை விகுதி |
| உண்ணா | — | உண் + ஆ |
| | | பகுதி எழுத்துப்பேறு விகுதி |
| கூறுதி | — | கூறு + த் + இ |

### பயிற்சி

பின் வரும் சொற்களுக்கு உறுப்பிலக்கணம் கூறுக:

நடந்தேன், ஓடுகின்றன, செல்வோம், பாடினாள், கொண்டான், வந்தனர், வாழ்ந்தான், கற்றான்.

## ii வினைமுற்று வகை

வினைச்சொல் முற்று, எச்சம் என இருவகைப்படும் என்பதையும், எச்சவினை பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும் என்பதையும் முன் வகுப்பிற் படித்திருப்பீர்கள். இங்கு வினைமுற்றுக்களிற் சில சில வகைகளைப் படிப்பீர்கள்.

வினைமுற்று, இடவகையால் தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று என மூன்று வகைப்படும். தன்மை வினைமுற்றும் முன்னிலை வினைமுற்றும் ஒருமை, பன்மை என்ற எண் வகையால் இருவகைப்படும். படர்க்கை வினைமுற்று பால்வகையால் ஐந்து வகைப்படும். அவற்றையே திணைவகையால் இரண்டாகக் கூறலாம். தன்மையும் முன்னிலையும் இருதிணை ஐம் பால்களுக்கும் பொது.

## உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| வந்தனென் | — | என் | தன்மை யொருமை |
| வந்தேன் | — | ஏன் | |
| வருவன் | — | அன் | |
| வருவல் | — | அல் | |
| காண்பெம் | — | எம் | தன்மைப் பன்மை |
| காண்பேம் | — | ஏம் | |
| காண்பம் | — | அம் | |
| காண்பாம் | — | ஆம் | |
| காண்போம் | — | ஓம் | |
| கண்டனை | — | ஐ | முன்னிலை யொருமை |
| கண்டாய் | — | ஆய் | |
| காண்டி | — | இ | |
| கண்டனிர் | — | இர் | முன்னிலைப் பன்மை |
| கண்டீர் | — | ஈர் | |
| வந்தனன் | — | அன் | ஆண்பாற் படர்க்கை |
| வந்தான் | — | ஆன் | |
| வந்தனள் | — | அள் | பெண்பாற் படர்க்கை |
| வந்தாள் | — | ஆள் | |
| வந்தனர் | — | அர் | பலர்பாற் படர்க்கை |
| வந்தார் | — | ஆர் | |
| உண்மார் | — | மார் | |
| உண்ப | — | ப | |
| வந்தது | — | து | ஒன்றன்பாற் படர்க்கை |
| போயிற்று | — | று | |
| பொருட்டு | — | டு | |
| வந்தன | — | அ | பலவின்பாற் படர்க்கை |
| வாரா | — | ஆ | |

## பயிற்சி

மூவிட வினைமுற்றுக்களையும் தனித்தனி கூறுக :

| | | | |
|---|---|---|---|
| வந்தேன். | சென்றது. | உண்டாய். | படித்தோம். |
| பாடினான் | பிறந்தன. | பார்த்தார். | கூறுக |
| வருவீர். | ஓடிற்று. | வளர்ந்தன. | கூறு. |

## ஏவல் வினைமுற்று

கட்டளைப் பொருளை யுணர்த்தி வரும் வினைமுற்று **ஏவல் வினைமுற்று** எனப்படும். முன்னின்றானையே கட்டளை யிடுதலால் ஏவல்வினை முன்னிலையிடத்தில்மட்டுமே வரும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| வாராய் | — ஆய் | ஏவல் ஒருமை |
| வருவை | — ஐ | |
| வருதி | — இ | |
| வாரீர் | — ஈர் | ஏவற் பன்மை |
| வாரும் | — உம் | |
| வம்மின் | — மின் | |

**குறிப்பு :**—'வாரும்' என்ற முன்னிலை யேவற்பன்மையில் 'உம்' விகுதியுடன் 'கள்' விகுதியும் சேர்ந்து வாருங்கள் என வருதலு முண்டு.

## வியங்கோள் வினைமுற்று

ஏவல், வாழ்த்து, வசை, வேண்டுதல் முதலிய பல பொருள்களில் இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாக ஒருமை பன்மை வேற்றுமையின்றி வரும் வினைமுற்று **வியங்கோள் வினைமுற்றாகும்.** இது பெரும்பாலும் 'க' என்ற விகுதி பெற்று வரும்.

| | | | |
|---|---|---|---|
| நீ செய்க. | வாழ்க. | வீழ்க. | தருக. |
| நான் செய்க. | வாழ்க. | வீழ்க. | தருக. |
| அவன் செய்க | வாழ்க. | வீழ்க. | தருக. |

## ஏவல்—வியங்கோள் வேறுபாடு

### ஏவல்

1. கட்டளைப் பொருளில் மட்டிலும் வரும்.
2. முன்னிலையில் மட்டும் வரும்.
3. ஒருமை பன்மை வேறுபாடு உண்டு.

### வியங்கோள்

1. வாழ்த்து, வசை முதலிய பல பொருள்களில் வரும்.
2. ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.
3. ஒருமை பன்மை வேற்றுமை இல்லை.

## பயிற்சி

பின் வருவனவற்றில் ஏவல் வினைகளும் வியங்கோள் வினைகளும் இவையெனக் கூறுக :

1 வாழ்க நீ எம்மான் !
2 உண்மை சொல்வாய் !
3 தாயின் மணிக்கொடி பாரீர் !
4 பையா பாடம் படி !
5 நீ அங்குச் செல்க !
6 மறம் மடிவுறுக !
7 ஈண்டு அமர்மின் !
8 ஐயா, எனக்கு உணவு தருக !

## iii முற்றெச்சம்

வினைமுற்று எச்சப்பொருளில் வருமாயின், அது முற்றெச்சம் எனப்படும். பெரும்பாலும் தெரிநிலை வினைமுற்று வினையெச்சப் பொருளிலும், சிறுபான்மை குறிப்பு வினைமுற்று, பெயரெச்சப் பொருளிலும் வினையெச்சப் பொருளிலும் வருதலு முண்டு. இம் முற்றெச்சம் பெரும்பாலும் செய்யுளிலேயே பயின்றுவரும்.

### உதாரணம்

கண்டனன் கதறி விழுந்தான்.
தேடினன் கண்டான்.

'கண்டனன்' 'தேடினன்' என்ற தெரிநிலை வினைமுற்றுக்கள் 'கண்டு' 'தேடி' என்ற வினையெச்சப் பொருளில் வந்தன.

வேலினன் முருகன் வந்தான்.

இங்கு 'வேலினன்' என்ற குறிப்பு வினைமுற்று 'வேலையுடைய' என்ற பெயரெச்சப் பொருளில் வந்தது.

பொய்யில் உள்ளத்தன் புகலலுற்றான்.

'உள்ளத்தன்' என்னும் குறிப்பு வினைமுற்று உள்ளத்தனாய் என்ற வினையெச்சப் பொருளில் வந்தது.

## பயிற்சி

பின் வருவனவற்றில் முற்றெச்சம் இவையெனக் கூறுக :

1 உவந்தனன் கொடுத்தான்.
2 இசைத்தனன் ஈந்தான்.
3 தொழுதனர் அகன்றார்
4 கண்டனன் மகிழ்ந்தான்.
5 ஆடினிர் பாடினிர் செல்க.
6 மகிழ்ந்தனன் கொடுப்பான்.
7 பார்த்தனள் நின்றாள்.
8. உறங்கினர் கிடந்தார்.

## பயிற்சி வினாக்கள்

1 பகுபத வுறுப்புக்கள் யாவை ?
2 அவை சொல்லில் இருக்கும் இடங்கள் யாவை ?
3 வினைப் பகுபதங்களிற் பகுதியும் விகுதியும் இடைநிலையும் உணர்த்துவன யாவை ?
4 வினைமுற்றின் வகைகள் யாவை ?
5 ஏவல் வினைமுற்று என்றால் என்ன ?
6 வியங்கோள் வினைமுற்று என்றால் என்ன ?
7 ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடென்ன ?
8 முற்றெச்சம் என்றால் என்ன ?

## 3. இடைச்சொல்

இடைச்சொல் என்பது தனித்து நில்லாமல் பெயரையாவது வினையையாவது சார்ந்து நின்று ஏதேனும் ஒரு பொருளைத் தருவது என்றும், அது வேற்றுமையுருபு, விகுதிகள், சாரியைகள், உவமையுருபு, இசைநிறை, அசைநிலை, குறிப்புப்பொருள் தருவன, ஏ, ஓ, உம், கொல் முதலிய தம் பொருள் தருவனவாகப் பல வகைப்படும் என்றும் முன் வகுப்பிற் படித்தீர்கள். இறுதியிற் கூறிய அவ்விடைச் சொற்கள் எவ்வெப் பொருளில் வரும் என்பதைக் கவனியுங்கள்.

## i ஏகார இடைச்சொல்

ஏகாரம் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை முதலிய பல பொருட்களில் வரும்.

### உதாரணம்

இக்காலக் கவிஞருட் பாரதியாரே முதல்வர். இங்கு ஏகாரம் கவிஞர் பலருட் பாரதியாரைப் பிரித்துக் காட்டுவதாற் பிரிநிலை.

நீயே செய்தாய்? இங்கு ஏகாரம் 'நீயா' என வினாப்பொருளைத் தருதலால் வினா.

நிலனே நீரே தீயே வளியே—இங்கு ஏகாரம் நிலனும் நீரும் தீயும் காற்றும் என எண்ணுப் பொருள் தருதலால் எண்.

நன்கியம்புவன் எழுத்தே—இங்கு ஏகாரம் ஒரு பொருளும் தாராது இறுதியில் நிற்றலால் ஈற்றசை.

உண்மையே வெல்லும்—இங்கு ஏகாரம் உண்மைதான் வெல்லும் என உறுதிப்பொருளில் வருதலால் தேற்றம்.

ஏயே இவளொருத்தி காண் — இங்கு ஏகாரம் வேறு பொருளின்றி இசை நிறைத்து நிற்றலால் இசைநிறை.

## ii ஓகார இடைச்சொல்

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, பிரிநிலை, அசைநிலை முதலிய பல பொருள்களை உணர்த்தும். இவற்றுட் சிறப்பு என்னும் பொருள் உயர்வைச் சிறப்பித்தலால் உயர்வு சிறப்பு என்றும், இழிவைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பு என்றும் இருவகைப்படும்.

### உதாரணம்

'நீ வேலையோ பார்க்கிறாய்' — இதில் 'வேலை பார்க்காமல் விளையாடிக்கொண்டிருக்கின்றாய்' என்றபொருளைத்தருதலால் ஓகாரம்ஒழியிசை.

'நீ பாடுவாயோ?' — இதில் ஓகாரம் கேள்விப் பொருளைத் தருதலால் வினா.

'ஓ ஓ இவர் பெரியவர்' — இதில் ஓகாரம் உயர்வைக் காட்டுதலால் உயர்வு சிறப்பு.

'ஓ ஓ கொடியன்' — இதில் ஓகாரம் இழிவைக் காட்டுதலால் இழிவு சிறப்பு.

'வெறுத்தாலும் போமோ விதி—இங்கு ஓகாரம் போகாது என்னும் பொருளைத் தருதலால் எதிர்மறை.

'இவர்களுள் கண்ணனோ இது செய்தவன்'—இங்குஓகாரம் ஒருவனைப் பிரித்துக்காட்டுதலாற் பிரிநிலை.

'காண்மினோ! காண்மினோ!—இங்கு ஓகாரம் ஒரு பொருளையும் உணர்த்தாமல் நிற்பதால் அசைநிலை.

## iii 'உம்' என்னும் இடைச்சொல்

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண் முதலிய பல பொருள்களில் வரும். இவற்றுள் எச்சப் பொருள், நிகழ்ந்ததைத் தழுவுமாகில் இறந்தது தழுவிய எச்சமென்றும், நிகழப்போவதைத் தழுவுமாகில் எதிரது தழுவிய எச்சமென்றும் இருவகைப்படும்.

### உதாரணம்

கந்தன் வருவதற்கும் உரியன்—இங்குக் கந்தன் வாராதிருத்தற்கும் உரியன் எனப் பொருள் தருதலால் எதிர்மறை.

'நாயும் தின்னாத சோறு'—இங்கு, சோற்றின் இழிவை மிகைப்படுத்தலால் இழிவு சிறப்பு.

'கூற்றும் அஞ்சும் ஆற்றல்'—இங்கு ஆற்றலின் சிறப்பை மிகுத்துணர்த்தலால் உயர்வுசிறப்பு.

'பத்தாயினும் எட்டாயினும் கொடு'—இங்கு ஒன்றைத் துணிந்துரையாமையால் ஐயம்.

'அரசனும் வந்தான்'—இங்கு அமைச்சன் முன்னமே வந்ததை உணர்த்துமாயின் இறந்தது தழுவிய எச்சவும்மை.

'தமிழும் படித்தான்'—இனி ஆங்கிலமும் படிப்பான் எனப் பொருள் கொள்ளின் எதிரது தழுவிய எச்சவும்மை.

'மூவரும் வந்தனர்'—மூவரையும் என்பது ஒருங்கே குறிப்பதால் முற்று.

'சேரனும் சோழனும் பாண்டியனும்'—இங்கு அரசரை எண்ணி நிற்றலால் எண்.

## iv 'கொல்' என்னும் இடைச்சொல்

'கொல் என்னும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் பொருள்களை உணர்த்தும்.

### உதாரணம்

'அங்கு நிற்பது பாவைகொல் பெண்கொல்'—இங்குப் பாவையோ பெண்ணோ எனத் துணிந்து உரையாமையால் ஐயம்

'கற்றதனால் ஆய பயனென்கொல்'—இங்கு ஒரு பொருளும் இன்றி நிற்றலால் அசைநிலை.

### பயிற்சி

பின்வருவனவற்றினுள்ள இடைச்சொற்கள் இன்ன பொருளுணர்த்துவன எனக் கூறுக.

1 நஞ்சினும் கொடிய வஞ்சகன்.

2 நீயோ அவனோ யார் இது செய்தார்?

3 யாவரும் வருக.

4 அறமே வெல்லும்.

5 அவருள் இவரே பெரியார்.

6 குறவரும் மருளும் குன்றம்.

7 வருவர்கொல் வாரார்கொல்.

8 எய்த வருமோ இருநிதியம்.

## 4. உரிச்சொல்

**பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்து, அவற்றின் பண்பை விளக்க உரிமைபூண்டு நிற்கும் சொல் உரிச்சொல்லாம்.**

சால, உறு, தவ, நனி என்ற உரிச்சொற்கள் மிகுதியென்னும் ஒரே பண்பை உணர்த்தும் ஒரு குணம் தழுவிய உரிச்சொற்களாம்.

### உதாரணம்

சாலப் பேசினான்.

உறு துன்பம்.

தவ உயர்ந்தது.

நனி தின்றான்.

### பயிற்சி வினுக்கள்

1 இடைச்சொல் என்றால் என்ன?

2 இடைச்சொற்களாக வருவன எவை?

3 ஏ, ஓ, உம், கொல் இவை எவ்வெப் பொருள்களை யுணர்த்தும்?

4 உரிச்சொல் என்றால் என்ன?

5 ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் யாவை?

## III. போது

### வழக்கு:இயல்பு-தகுதி

வழக்கு என்பது சொற்கள் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வழங்கப்படும் முறை. இது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

### இயல்பு வழக்கு

மக்களால் இயல்பாகப் பேசப்படுவது இயல்பு வழக்காகும். பெரும்பாலும் இலக்கண வரம்புடையனவாகவும், சிறுபான்மை சொற்கள் முன் பின்னாக மாறியும், மிகச் சிறுபான்மை நீண்ட சொல் வடிவங்கள் குறுகியும் வழங்கும். இவ்வாறு குறுகி வழங்குவதையும், முன் பின்னாக மாறி வழங்குவதையும், இயல்பாகக்கொண்டனர். ஆகவே, இயல்பு வழக்கானது இலக்கண முடையது, இலக்கணப் போலி, மரூஉ என மூவகைப்படும்.

உதாரணம்

கண்ணன், வந்தான்—இலக்கண முடையது

| | | |
|---|---|---|
| இல்முன் | —முன்றில் | இலக்கணப் போலி |
| இல்வாய் | —வாயில் | |
| நகர்ப்புறம் | —புறநகர் | |
| அருமருந்தன்ன | — அருமந்த | மரூஉ |
| தஞ்சாவூர் | —தஞ்சை | |
| எம் தந்தை | —எந்தை | |
| என் தம்பி | —எம்பி | |

குறிப்பு:—இலக்கணப் போலி முன்பின் மாறிவருவது; எழுத்துப் போலி, ஒரு சொல்லில் முதல், இடை, கடை என்ற இடங்களிற் பொருள் மாறாமல் ஒரு எழுத்துக்குப் பதிலாக வேறோரெழுத்து வருவது. ஆகவே, இலக்கணப் போலி வேறு; எழுத்துப் போலி வேறு.

## ii தகுதி வழக்கு

ஒரு செய்தியை இவ்வாறு கூறுதலே தகுதியுடையது எனக் கற்றோரால் வழங்கப்படுவது தகுதி வழக்கு ஆகும். பலர் கூடிய இடத்திற் சொல்லத்தகாத ஒன்றைச் சொல்லத்தகும் முறையில் மறைத்துச் சொல்லுதலும், அமங்கலமான செய்தியை மங்கலச்சொல்லாக மாற்றிக் கூறுதலும், பலர்க்குத் தெரியாமல் ஒரு சிலரே அறிந்துகொள்ளுமாறு கூறிக்கொள்ளுதலும் இத் தகுதிவழக்கின் பாற்படும். ஆகவே, தகுதி வழக்கானது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

### உதாரணம்

'கால் கழுவச் சென்றான்'—இங்கு மலம்கழுவ என்பதை மறைத்துக் கூறுவதால் இடக்கரடக்கல்.

'அவர் துஞ்சினார்'—இங்கு இறந்தார் என்னும் அமங்கலச் சொல்லை மாற்றிக் கூறுதலால் இது மங்கலம்.

'பறி எடுத்துவா'—பொற்கொல்லர் பொன்னைப் பறி என்பதால் இது குழூஉக்குறி.

### பயிற்சி

பின்வருவனவற்றில் அறுவகை வழக்கிற்கும் உதாரணம் தருக :

1 நன்காடு கண்டான்.
2 புதுவை சென்றேன்.
3 வைகாசி மாதம்.
4 எம்பியைக் கண்டேன்.
5 வெள்ளாடு ஓடிற்று.
6 குழந்தை வெளிக்குப் போய்விட்டது.
7 வெள்ளைக்குதிரை ஏறினான்.
8 நான் பாடம் படித்தேன்.

### வினாக்கள்

1 வழக்கு என்றால் என்ன ?
2 அது எத்தனை வகைப்படும் ?
3 இயல்பு வழக்கின் பிரிவுகள் யாவை ?
4 இலக்கணப் போலிக்கும் எழுத்துப் போலிக்கும் வேறுபாடு என்ன ?

5 தகுதி வழக்கு என்றால் என்ன ?

6 இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி இவற்றை உதாரணம் கூறி விளக்குக.

## IV புணர்ச்சி

நிலைமொழியீறும் வருமொழி முதலும் வேற்றுமைத் தொடரிலாயினும் அல்வழித் தொடரிலாயினும், இயல்பாகவேனும் விகாரமாகவேனும் ஒன்றுபடப் புணர்வது **புணர்ச்சி** எனப்படும்.

உதாரணம்

பொன் + மலை = பொன்மலை — இயல்பு.
மரம் + வேர் = மரவேர் — விகாரம்.

### i மூவகை விகாரங்கள்

**விகாரப் புணர்ச்சி** தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும். நிலைமொழி வருமொழிகள் புணரும்பொழுது இல்லாத எழுத்து மிகுதல் தோன்றலாம்; நிலைமொழி யிறுதியிலோ வருமொழி முதலிலோ உள்ள எழுத்து மற்றோரெழுத்தாக மாறுவது திரிதலாம்; உள்ள எழுத்துக் குறைவது கெடுதலாம்.

உதாரணம்

வாழை + பழம் = வாழைப்பழம் — ப் } தோன்றல்
வெள்ளரி + காய் = வெள்ளரிக்காய் — க் }

மண் + குடம் = மட்குடம் — ண் — ட் }
முள் + செடி = முட்செடி — ள் — ட் } திரிதல்.
கல் + பாறை = கற்பாறை — ல் — ற் }
அல் + திணை = அஃறிணை — ல்த் — ஃற் }

மரம் + வேர் = மரவேர் — ம் } கெடுதல்
வெண்மை + பட்டு = வெண்பட்டு — மை }

பனை + காய் = பனங்காய் — ஐ கெட்டது. அம் தோன்றியது.

'அம்' என்ற சாரியையின் மகரம் ஙகரமாகத் திரிந்தது. இங்கு மூன்று விகாரங்களும் வந்தன.

#### பயிற்சி

பின்வரும் தொடர்கள் இன்ன விகார மடைந்தனவெனக் கூறுக :

வாட்போர், அறநெறி, மலர்ப்பாதம், மரக்கிளை, தாய்ப்பசு, மனநிலை, கட்புலன், சொற்பொருள், பொற்பதக்கம்.

## ii குற்றியலுகரப் புணர்ச்சி—வகை

குற்றியலுகரம் என்றால் என்ன என்பதையும், அது ஆறு வகைப்படும் என்பதையும் முன்னர்ப் படித்தீர்களல்லவா? இனிக் குற்றியலுகரத்தின் முன் உயிர், வலி, மெலி, இடை என்ற நால்வகை எழுத்தும் வர எவ்வாறு புணரும் என்பதைத் தெரிந்துகொள்வீர்கள்.

### குற்றியலுகரத்தின் முன் உயிர்

குற்றியலுகரத்தின் முன் உயிர் வரின் பெரும்பாலும் குற்றியலுகரம் கெடும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| நாடு | + | ஆண்டான் | = | நாடாண்டான் |
| அழகு | + | இல்லை | = | அழகில்லை |
| அஃது | + | எங்கே | = | அஃதெங்கே |
| பட்டு | + | ஆடை | = | பட்டாடை |
| கண்டு | + | எடு | = | கண்டெடு |
| சார்பு | + | எழுத்து | = | சார்பெழுத்து |

### குற்றியலுகரத்தின் முன் யகரம்

குற்றியலுகரத்தின் முன் யகரம் வருமாயின் குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரியும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| நான்கு | + | யானை | = | நான்கியானை |
| நாடு | + | யாது | = | நாடியாது |
| உனக்கு | + | யான் | = | உனக்கியான் |

### முற்றியலுகரப் புணர்ச்சி

முற்றியலுகரங்களும் சில இடங்களில் உயிர்வரிற் கெடும்: யகரம் வரின் இகரமாகத் திரியும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| அறிவு | + | அதிகம் | = | அறிவதிகம் |
| செலவு | + | ஆயிற்று | = | செலவாயிற்று |
| கதவு | + | யாது | = | கதவியாது |
| வாழ்வு | + | யாது | = | வாழ்வியாது |

நு. சூ. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்;
யவ்வரின் இய்யாம்; முற்றும் அற் றேரோ வழி.

## குற்றியலுகரத்தின் முன் வல்லினம் புணர்தல்

குற்றியலுகரங்களில் வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மட்டும் பெரும்பாலும் மிகும். மென்றொடர் முதலிய பிற தொடர்க் குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் அவ்வாறு மிகா. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் அல்வழித் தொடரிலாயினும் மிகும். மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் அல்வழித் தொடராயின் மிகாது இயல்பாகும். நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த் தொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் இருவகைத் தொடர்களிலும் இயல்பாம்.

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| பட்டு + சட்டை | = பட்டுச் சட்டை | — | வேற்றுமை. |
| பட்டு + கிழிந்தது | = பட்டுக் கிழிந்தது | — | அல்வழி. |
| குரங்கு + தலை | = குரங்குத் தலை | — | வேற்றுமை. |
| குரங்கு + பெரிது | = குரங்கு பெரிது | — | அல்வழி. |
| நாடு + கொடுத்தான் | = நாடுகொடுத்தான் | - | வேற்றுமை. |
| நாடு + பெரிது | = நாடு பெரிது | — | அல்வழி. |
| அஃது + கொடு | = அஃதுகொடு | — | வேற்றுமை. |
| அஃது + சிறிது | = அஃதுசிறிது | — | அல்வழி. |
| கயிறு + திரி | = கயிறுதிரி | — | வேற்றுமை. |
| வயிறு + பெரிது | = வயிறு பெரிது | — | அல்வழி. |
| போழ்து + கூறு | = போழ்துகூறு | — | வேற்றுமை. |
| போழ்து + சிறிது | = போழ்து சிறிது | — | அல்வழி. |

நு. சூ :—வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி.

## iii பண்புத்தொகைப் புணர்ச்சி

செம்மை, சிறுமை, நன்மை முதலிய பண்புப் பெயர்கள் நிலைமொழியாக நின்று, வருமொழியுடன் புணரும் பொழுது பலவகை மாறுபாடுகளை அடையும். அவை வருமாறு :—

1 நிலைமொழியிறுதியிலுள்ள மை விகுதி கெடும்.
2 நிலைமொழியின் இடையிலுள்ள உகரம் இகரமாகத் திரியும்.
3 நிலைமொழியின் முதலில் உள்ள அகரம் ஐகாரமாகும்.
4 நிலைமொழி முதலெழுத்து நீளும்.
5 நிலைமொழியின் இடையிலுள்ள மெய்யெழுத்து இரட்டிக்கும்.
6 நிலைமொழியில் மை விகுதிக்கு முன்னால் உள்ள மெய்யெழுத்து வேறு மெய்யெழுத்தாகத் திரியும்.
7 வருமொழியின் முதலிலுள்ள வல்லெழுத்துக்கு இனவெழுத்து மிகும்.

## உதாரணம்

வெண்மை + பட்டு = வெண்பட்டு.
மை - கெட்டது.
சிறுமை + இலை = சிறியிலை
மை கெட்டு உகரம் இகரமாகத் திரிந்தது.
முதுமை + ஊர் = மூதூர்.
மை கெட்டு முதல் நீண்டது.
பசுமை + தார்-பசு-ப-பை = பைந்தார்.
மை கெட்ட (பசு) பைசு என மாறி, சுகெட்டு, இனவெழுத்து மிக்கது.
சிறுமை + ஊர் = சிற்றூர்.
மை கெட்டு மெய் இரட்டித்தது.
செம்மை + ஆம்பல் = சேதாம்பல்.
மை கெட்டு, முதல் நீண்டு, மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

ந-சூ :—ஈறு போதல் இடையுகரம் இ யாதல்
ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்
தன் ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனம் மிகல் இனையவும் பண்பிற் கியல்பே.

## பயிற்சி

பின்வருவன எவ்வாறு புணர்ந்தன எனக் கூறுக :

வீடுற்றான், வண்டுக்கால், அழகன்று, செந்தமிழ், சேவடி, பைம்பொழில், சிற்றன்னை, பணிந்தெழுந்தான், பட்டுப்பூச்சி, எட்டுத்தொகை, இருப்புப்பூண், ஆருயிர்.

## வினாக்கள்

1 புணர்ச்சி என்றால் என்ன ?

2 இயல்பு புணர்ச்சி யாவது யாது ?

3 விகாரப் புணர்ச்சியின் வகைகள் யாவை ?

4 மூவகை விகாரங்களையும் உதாரணங் கூறி விளக்குக.

5 குற்றியலுகரம் எத்தனை வகைப்படும் ?

6 குற்றியலுகரத்தின் முன் உயிர்வரின் எவ்வாறு புணரும் ?

7 வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் வரின் எவ்வாறு புணரும் ?

8 குற்றியலுகரத்தின் முன் யகரம் வரின் எவ்வாறு புணரும் ?

9 முற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் வர எவ்வாறு புணரும்?

10 பண்புப்பெயர்கள் பிற சொற்களுடன் புணரும்பொழுது அடையும் விகாரங்கள் யாவை ?

## V யாப்பு

**யாப்பு** என்றால் கட்டுதல் என்பது பொருள். கட்டுதல் என்ற பொருளையுடைய 'யாப்பு' என்னும் சொல் கட்டப்படும் பாவுக்குப் பெயராக வருகின்றது. யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள், பா, கவி என்பன ஒரு பொருட்சொற்கள். நம் உடம்பு தோல், எலும்பு, கொழுப்பு, நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்டிருப்பதால், அதற்கு யாக்கை என்றொரு பெயர் உண்டு.

அதுபோல் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய உறுப்புக்களால் யாக்கப்படுவது செய்யுளாம். இவ்வாறு கட்டப்படும் செய்யுள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். இங்கு வெண்பா, ஆசிரியம் என்ற இரண்டு பாக்களின் பொது இலக்கணத்தைக் கூறுவோம்.

### 1 வெண்பா

வெண்பாவில் இரண்டடி முதல் பன்னிரண்டடி வரை இருக்கும். பெரும்பாலும் இரண்டடிகளும் நான்கு அடிகளும் உடை

யனவாகவே வரும். வெண்பாவின் கடைசி அடி மட்டும் மூன்று சீர்களையுடையதாகவும், பிற அடிகள் நான்கு சீர்களையுடையனவாகவும் இருக்கும். இரண்டடிகளையுடைய வெண்பாவுக்குக் குறள் வெண்பா என்று பெயர். நான்கடிகளையுடைய வெண்பாக்களை நேரிசை வெண்பா என்றும் இன்னிசை வெண்பா என்றும் கூறுவர். நான்கடிகளாலாகிய வெண்பாவில் இரண்டாம் அடியில் நான்காம் சீர் தனிச்சீராக, முதல் இரண்டடிகளின் எதுகையைப் பெற்று வருவது நேரிசை வெண்பா. அவ்வாறின்றி முதல் மூன்று அடிகளும் ஒரே மாதிரியாக நான்கு சீர்களையுடையதாக வருவது இன்னிசை வெண்பா.

திருக்குறள் நூலிலுள்ள பாக்களெல்லாம் குறள் வெண்பாக்களாம். நாலடியார், திரிகடுகம், இனியவை நாற்பது, இன்னா நாற்பது முதலிய நூல்களிலுள்ள பாக்கள் இன்னிசை வெண்பாக்களாகவும் நேரிசை வெண்பாக்களாகவும் வரும். நளவெண்பா, பாரத வெண்பா, நீதி வெண்பா, நல்வழி, களவழி முதலிய நூல்களிலுள்ள பாக்களெல்லாம் பெரும்பாலும் நேரிசை வெண்பாக்களாம்.

உதாரணம்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. —குறள்வெண்பா.

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின். —நேரிசைவெண்பா.

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். —இன்னிசைவெண்பா.

## 2 ஆசிரியப்பா

அடிதோறும் நாற்சீர்களை யுடையதாகி ஈற்றடிக்கு முந்திய அடிமட்டும் முச்சீர்களையுடையதாக வருவது நேரிசை யாசிரியப்பா எனப்படும். எல்லா அடிகளுமே நாற்சீர்களை யுடையனவாக வருதலு முண்டு. மூன்றடி முதல் நூற்றுக் கணக்கான அடிகளை

யுடையதாக வரும். இதனை அகவற்பா என்றும் கூறுவர்.

உதாரணம்

“ தாமரை புரையும் காமர் சேவடி
பவளத்தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவற் கொடியோன் காப்ப
ஏமம் வைகல் எய்தின்றால் உலகே.”

# VI அணி

செய்யுளுக்கு அழகு தந்து நிற்பது அணி என்பபடும். இவ்வணி உவமை, உருவகம், சிலேடை, மடக்கு முதலாகப் பலவகைப்படும். நீங்கள் உவமையணியையும் உருவக வணியையும் பற்றிச் சென்ற வகுப்பிற் படித்திருப்பீர்கள். இவ்வகுப்பிற் சிலேடை அணியையும் மடக்கணியையும் பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.

## 1 சிலேடை

ஒரு சொல்லோ சொற்றொடரோ இரு பொருள் படக் கூறுவது சிலேடையணியாகும். ‘மாசம்பத்து’ என்னும் தொடரை ‘மாசம் பத்து’ என்றும், ‘மா சம்பத்து’ என்றும் பிரித்து மாதத்திற்குப் பத்து என்றும், மிகுந்த செல்வம் என்றும் பொருள் கொள்வது ஒரு வகைச் சிலேடை. இது பிரிமொழிச் சிலேடை எனப்படும். ‘இரவு’ என்ற சொல்லிற்கு ‘இராத்திரி’ என்றும் ‘யாசகம்’ என்றும் சொல்லைப் பிரிக்காமலே இருபொருள் கொள்வது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

உதாரணம்

இல்லக் குறத்தியரும் யாக்கைநிலை வேட்டவரும்
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே—நல்ல
புதுப்பூவை வண்ணத்தான் போர்முகத்துச் செவ்வாய்
மதுப் பூவை வண்ணத்தான் வாழ்வு.

கிழங்கு எடுக்கும், கிழம் கெடுக்கும் என்றும், பூவை வண்ணத்தான், பூவை வள் நத்தான் என்றும் பிரித்து இருபொருள் கொள்ளுவதாற் பிரிமொழிச் சிலேடை.

சென்னைக்கு வந்து சிவமாகி னேன்நல்ல
அன்னமது காணு தவனாகி—மன்னுசிரங்
கைக்கொண் டரைச்சோமன் கட்டிச் சடைமுடித்து
மெய்க்கொண்ட நீறணிந்து மே.

அன்னம்-சோறு, அன்னப்பறவை, அரைச் சோமன்-பாதி ஆடை, அரைச் சந்திரன், சடை-சடைமுடி, சடைபோன்ற பின்னிய முடி, நீறு-திருநீறு, உடல் வெளுப்பு இவ்வாறு சொற்கள் பிரிக்கப்படாமல் இருபொருள் தருதலால் செம்மொழிச் சிலேடை.

## 2. மடக்கு

செய்யுளிற் சொற்கள் தொடர்ந்தும் இடையிட்டும் திரும்பத் திரும்ப வந்து வேறுபொருளை விளைப்பது மடக்கணியாகும்.

### உதாரணம்

அஞ்சும் அஞ்சும் ஐயனே
நஞ்சு நஞ்சு முண்டபோல்.

ஐம்புலன்களும் பயப்படும் என்றும், நைந்து விஷத்தை யுண்டது போல் என்றும் பொருள் தந்து ஒரே சொல் அடுக்கி வருதலால் இது மடக்கு.

### பயிற்சி

பின்வருவனவற்றிற் சிலேடைப் பொருளை விளக்குக:

சிவப்புத்தேள், காசாலேசா, மாதங்கம், பிண்ணாக்கு, பலகை வேண்டும், அந்தமான்.

### வினாக்கள்

1 அணி என்றால் என்ன ?

2 உவமையணியை உதாரணம் கூறி விளக்குக.

3 உருவகம் என்றால் என்ன ?

4 சிலேடையணி என்றால் என்ன ?

5 பிரிமொழிச் சிலேடைக்கு உதாரணம் தருக.

6 மடக்கணி என்றால் என்ன ?

# மொழிப் பயிற்சி

## வாக்கிய வகைகள்

பொருள் முடிவுபெற்று நிற்கும் சொற்றொடர் வாக்கியம் எனப்படும். இவ் வாக்கியம் செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம், வினு வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் எனப் பலவகைப்படும். ஒரு செய்தியைத் தெரிவிப்பதாக வருவது செய்தி வாக்கியமாகும். கட்டளையிடுவதாகவுள்ளது கட்டளை வாக்கியமாகும். வினுப் பொருளைத் தருவது வினு வாக்கியமாகும். வியப்பு, மகிழ்ச்சி, அச்சம், துக்கம், கோபம், இரக்கம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியமாகும்.

### உதாரணம்

*நாம் பாடம் படித்தோம்.* —செய்தி.
*நீ பாடம் படி.* —கட்டளை.
*நீ புத்தகம் வாங்கினுயா?* —வினு.
*ஆ! இது எவ்வளவு அழகாக இருக்கிறது!* —உணர்ச்சி.

### பயிற்சி

*பின்வருவனவற்றில் நால்வகை வாக்கியங்களையும் கூறுக:*

1 *கடமையைச் செய்க.*
2 *நீயா இதைச் செய்தாய்?*
3 *அந்தோ! ஏழைபடும் பாட்டைப் பாருங்கள்!*
4 *ஒற்றுமையாய் வாழ்வீர்களாக.*
5 *நாம் மகாத்மாவை வாழ்த்துவோம்.*
6 *திருக்குறள் படித்தாயா?*
7 *ஜவஹர் வருகிருர்.*
8 *மயில் எவ்வளவு அழகாக ஆடுகிறது!*

## II வாக்கிய மாற்றம்

### 1 செய்வினை-செயப்பாட்டுவினை வாக்கியங்கள்

'கண்ணன் பாடம் படித்தான்' என்ற வாக்கியத்திற் படித்தவன் கண்ணன். ஆகவே, படித்தான் என்ற வினை அவ் வாக்கியத்தில் எழுவாயாகிய கண்ணன் செய்த வினை. இவ்வாறு எழுவாய்

செய்த வினையையே பயனிலையாகக் கொண்ட வாக்கியம் செய்வினை வாக்கியம் எனப்படும்.

அவ் வாக்கியத்தைப் 'பாடம் கண்ணனால் படிக்கப்பட்டது' என்று எழுதினால் எழுவாய் மூன்றாம் வேற்றுமையாகவும், செயப்படு பொருளாகிய பாடம் எழுவாயாகவும், பயனிலை மாறிய எழுவாய்க் கேற்ப மாறுதலடைந்து 'படு' என்ற விகுதி புணர்ந்தும் வந்துள்ளன. இவ்வாறு வருவது செயப்பாட்டுவினை வாக்கியமாகும்.

### உதாரணம்

கரிகாலன் பகைவரை வென்றான்—செய்வினை.
பகைவர் கரிகாலனால் வெல்லப்பட்டனர்—செயப்பாட்டுவினை வாக்கியம்

### பயிற்சி

பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாகவும், செயப்பாட்டுவினைகளைச் செய்வினைகளாகவும் மாற்றுக :

1 நான் திருக்குறள் வாங்கினேன்.
2 சென்னை யரசாங்கம் மதுவை ஒழித்தது.
3 கந்தன் மரம் வளர்த்தான்.
4 அரசன் நாட்டை ஆண்டான்.
5 கண்ணன் கந்தனை வாழ்த்தினான்.
6 அவன் வீட்டைக் கட்டினான்.
7 ஜவஹராற் கொடி எற்றப்பட்டது.
8 காவலராற் கள்வர் அடிக்கப்பட்டனர்.
9 தேசீய கீதம் மாணவராற் பாடப்பட்டது.
10 பாண்டியனால் தமிழ் வளர்க்கப்பட்டது.

## 2. உடன்பாட்டு—எதிர்மறை வாக்கியங்கள்

தொழிலின் நிகழ்ச்சியைக் குறிக்கும் வாக்கியம் உடன்பாட்டு வாக்கியம். தொழில் நிகழாமையைக் குறிப்பது எதிர்மறை வாக்கியமாகும்.

### உதாரணம்

கண்ணன் படித்தான்—உடன்பாடு.
கண்ணன் படித்திலன்—எதிர்மறை.

### பயிற்சி

உடன்பாட்டை எதிர்மறையாகவும், எதிர்மறையை உடன்பாடாகவும் மாற்றுக :

1 நான் அங்குச் செல்வேன்.
2 நீ விளையாடவேண்டும்.
3 கண்ணன் வந்திலன்.
4 வாங்காமற் சென்றான்.
5 உண்மையே பேசுவான்.
6 பறவைகள் பறந்தன.
7 நான் பாடம் படித்திலேன்.
8 அவர் வந்தாரா?

## 3. நேர்கூற்றும் அயற்கூற்றும்

'கண்ணா பாடம் படி' என்றார் ஆசிரியர். இவ் வாக்கியத்தில் மேற்கோட் குறிக்குள் இருப்பது ஆசிரியர் நேரே கூறிய கூற்று. இவ்வாறு வருவது நேர்கூற்று வாக்கியம். இவ் வாக்கியத்தைக் 'கண்ணனைப் பாடம் படிக்கச் சொன்னார் ஆசிரியர்' என்று 'கண்ணா' என்ற முன்னிலையைப் படர்க்கையாக்கிப் 'படி' என்ற கட்டளையை அப்படியே சொல்லாமற் 'படிக்க' என எச்சமாக்கிக் கூறியிருக்கிறது. இதில் நேர்கூற்று இல்லை. இவ்வாறு கூறுவது அயற்கூற்று ஆகும்.

### பயிற்சி

நேர்கூற்றை அயற்கூற்றாகவும், அயற்கூற்றை நேர்கூற்றாகவும் மாற்றுக?

1 'இன்றுபோய் நாளைவா' என்றான் இராமன்.
2 'காய்கறி வாங்கிவா' என்றார் தந்தை.
3 திருக்குறட் புத்தகம் வாங்கிவரச் சொன்னான் நண்பன்.
4 சுதந்திரத்தைப் பிறப்புரிமையாகக் கொள்ளச் சொன்னார் திலகர்.
5 தாய்மொழிப் பற்றுடன் வாழச் சொன்னார் தலைவர்.
6 கண்ணன் 'நான் சென்று வருகிறேன்' என்றான்.
7 என்னைப் பாட்டுப் பாடச் சொன்னார் ஆசிரியர்.
8 'சுதந்திரம் பெற்றோம்' என்று மகிழ்ந்தனர்.

## III வாக்கியப் பிழைகளும் திருத்தமும்

வாக்கியங்களில் எழுவாய், பயனிலைப் பொருத்தமின்றி எழுதுவதால் ஏற்படும் பிழைகளைத் தவிர வேறு பல பிழைகளும் ஏற்படுவதுண்டு. முற்கூறிய இலக்கணப் பயிற்சியாலும் பொருளுணர்ச்சியாலும் அத்தகைய பிழைகள் நேரிடாவாறு எழுத வேண்டும்.

உதாரணம்

1. 'ஒவ்வொரு ஊர்களிலும் வானொலி வைக்கப்படவேண்டும்'—இதில் 'ஒவ்வொரு' என்பதைத் தொடர்ந்து ஊர்கள் என்ற சொல் பன்மை எண்ணில் வந்திருக்கிறது. இவ்வாறு வருவது பிழை. 'ஒவ்வொரு' என்பதை அடுத்து ஒருமை எண்ணில்தான் எழுதவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் என்று வரும்.

2 'கந்தனால் புத்தகத்தை வாங்கப்பட்டது?—செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றும்பொழுது செயப்படுபொருளாய் நின்ற சொல், எழுவாயாக மாறுமாதலால் உருபை நீக்கிவிடவேண்டும். இங்குப் 'புத்தகம்' என்று எழுதவேண்டும்.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:

1 நகரங்கள் சிறிதாய் இருந்தன.
2 அவர் தன்னிடம் இருப்பதாகச் சொன்னார்.
3 அங்கே ஒரு சிறிய கால்வாய் ஒன்று ஓடுகிறது.
4 கல்வியாவது அல்லது கைத்தொழிலாவது வேண்டும்
5 கந்தனால் மரத்தை வளர்க்கப்பட்டது.
6 பஞ்சத்தின் காரணம் மழை பெய்யாததால்.
7 இதற்கு மின்சாரம் எனப்படும்.
8 இங்கே புத்தகங்கள் கிடையாது.

## IV வழுச் சொற்களும் திருத்தமும்

சொற்களைப் பிழையில்லாமல் எழுதவேண்டும். பிழைபட எழுதினாற் பொருள் வேறுபடுவதன்றிப் பொருளே தெரியாமலும் போகும். சொற்களை எழுத்துப் பிழைகள் இன்றியும்

எழுத வேண்டும். 'தவலை போயிற்று' என்பதைத் 'தலை போயிற்று' என்று எழுதினால் என்னவாகும்? 'மழை பெய்தது' என்பதை 'மலை பெய்தது' என்று எழுதினால் எவ்வளவு பெரும் பிழையாகும்? ஆகவே, சொற்பொருளை யுணர்ந்து கவனித்து எழுதவேண்டும்.

உதாரணம்

| பிழை | திருத்தம் |
|---|---|
| சுவற்றில் எழுதாதே | சுவரில் எழுதாதே |
| ஒண்டியாய்ச் சென்றான் | ஒன்றியாய்ச் சென்றான் |
| தொந்திரவு செய்தான் | தொந்தரவு செய்தான் |
| சிகப்பாயிருக்கிறது | சிவப்பாயிருக்கிறது |
| நல்லெண்ணை வாங்கி வா | நல்லெண்ணெய் வாங்கி வா |
| கோர்வை செய் | கோவை செய் |
| ஒரு கினாக் கண்டேன் | ஒரு கனாக் கண்டேன் |
| வயற்றுப்பசி அதிகம் | வயிற்றுப்பசி அதிகம் |
| ரொம்பக் கொடுத்தான் | நிரம்பக் கொடுத்தான் |
| ஒருவள் வந்தாள் | ஒருத்தி வந்தாள் |

## பயிற்சி

பிழைகளைத் திருத்தி எழுதுக :

1 மோந்து பார்த்தான்.
2 ஒரேவாயில் முழுங்கினான்.
3 திரேகம் நன்றாயுள்ளது.
4 ஒருவன் ஒண்டியாய்ச் சென்றான்.
5 அகண்ட திண்ணை.
6 ஆடை வெகு நிகளம்.
7 வரவுக்குமிஞ்சிச் சிலவு செய்யாதே.
8 வெட்டிப் பேச்சு.

# V சொற் பொருத்தம்

வாக்கியத்திற் சொற்களை திணை, பால், எண், இடம், காலம், மரபு, வினா, விடை இவற்றில் முன்னுக்குப் பின் பொருத்தமாக எழுதவேண்டும் அவ்வாறு பொருத்தமாக எழுதவில்லையாயின் வழுவாம்.

## (1) திணைப் பொருத்தம்

தந்தை வந்தது.
முருகன் சென்றது.

இவை உயர்திணை எழுவாய்கட்கு அஃறிணைப் பயனிலைகள் கொடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறுவது திணை வழு.

தந்தை வந்தார்.
முருகன் வந்தான்.

இவ்வாறு எழுதுவதே திணைப் பொருத்தமாகும்.

## (2) பாற் பொருத்தம்

அவன் வந்தார்.
தம்பி வந்தாள்.

இவை, ஆண்பால் எழுவாய்களுக்குப் பலர்பாற் பயனிலையும் பெண்பாற் பயனிலையும் வந்துள்ளனவாதலின் பால் வழு.

அவன் வந்தான்.
தம்பி வந்தான்.

இவ்வாறு வருவதே பாற் பொருத்தம்.

## (3) எண் பொருத்தம்

அது சென்றன.
அவை சென்றது.

ஒருமை எழுவாய்க்குப் பன்மைப் பயனிலையும், பன்மை எழுவாய்க்கு ஒருமைப் பயனிலையும், கொடுத்து எழுதுவது எண் வழு.

அது சென்றது.
அவை சென்றன.

இவ்வாறு வருவதே எண் பொருத்தம்.

## (4) இடப்பொருத்தம்

நான் சென்றான்.
நீ வந்தேன்.
அவன் வந்தாய்.

இங்கு, தன்மைக்குப் படர்க்கையும், முன்னிலைக்குத் தன்மையும் படர்க்கைக்கு முன்னிலையும் பயனிலையாக வந்திருப்பது இடவழு.

நான் சென்றேன்.
நீ வந்தாய்.
அவன் வந்தான்.

இவ்வாறு வருவதே இடப்பொருத்தம்.

## (5) காலப்பொருத்தம்

நேற்று வருவான்.
அதோ வந்தான்.
நாளை வருகின்றான்.

இங்கு இறந்தகால எழுவாய்க்கு எதிர்காலப் பயனிலையும், நிகழ்ச்சியைக் குறித்துக் காட்டும் 'அதோ' என்ற சொல்லிற்கு இறந்தகாலப் பயனிலையும், எதிர்கால எழுவாய்க்கு நிகழ்காலப் பயனிலையும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை கால வழு.

நேற்று வந்தான்.
அதோ வருகின்றான்.
நாளை வருவான்.

இவ்வாறு எழுதுவதே காலப்பொருத்தம்.

## (6) வினாப்பொருத்தம்

கறக்கின்ற பசு பாலோ, சினையோ?

இங்கு, 'கறக்கின்ற பசு' என்பதனாலேயே அது பாற் பசு என்பது பெறப்படுகிறது. சினையாயிருந்தால் பால் கறவாது. அப்படியிருக்கப் 'பாலோ சினையோ' என்று கேட்பது வினாவழு.

இப் பசு பாலோ, சினையோ ?

இவ்வாறு கேட்பதே வினாப் பொருத்தம்.

## (7) விடை வழு

| | |
|---|---|
| இரும்பு எங்கே கிடைக்கிறது? | —வினா |
| கரும்பு விலை ஒரு அணா. | —விடை |
| சிதம்பரத்திற்கு வழி எது? | —வினா |
| செவலைக் காளை முப்பது பணம். | —விடை |
| வீட்டுக்கு வழி எது? | —வினா |
| காட்டிலே விறகொடிக்கலாம். | —விடை |

இவ்வாறு கேள்வி ஒன்றிருக்க அதனுடன் தொடர்பில்லாமல் விடை கூறுவது விடை வழு. நேரான விடையை அறிந்து சொல்வதே விடைப் பொருத்தம்.

## (8) மரபுப் பொருத்தம்

| | |
|---|---|
| நான் பால் உண்டேன். | நான் வெற்றிலை தின்றேன். |
| நான் வாழைப்பழம் மென்றேன். | நான் சோறு குடித்தேன். |
| குதிரை கத்துகிறது. | சிங்கம் கனைக்கிறது. |
| கழுதை கர்ஜிக்கிறது. | தவளைக் குட்டி. |
| தென்னங்கன்று. | மாம்பிள்ளை. |
| சிங்கக் குஞ்சு. | தென்னந் தோட்டம். |
| வாழைத் தோப்பு. | கரும்புத் தோப்பு |

இவை தமிழ்மொழியில் வழக்கமாய் வழங்கிவரும் முறைக்கு மாறாகவுள்ளன. வழக்கமாக வழங்கும் முறை மரபு எனப்படும். பால் குடித்தற்குரியது. வெற்றிலை மெல்லக்கூடியது. பழம் தின்னற்குரியது. சோறு உண்ணுதற்குரியது.

| | |
|---|---|
| நான் பால் குடித்தேன். | நான் வெற்றிலை மென்றேன். |
| நான் வழைப்பழம் தின்றேன். | நான் சோறு உண்டேன். |
| குதிரை கனைக்கிறது. | சிங்கம் கர்ஜிக்கிறது. |
| கழுதை கனைக்கிறது. | தவளைக்குஞ்சு. |
| தென்னம்பிள்ளை. | மாங்கன்று. |

சிங்கக் குட்டி. தென்னந் தோப்பு.
வாழைத் தோட்டம். கரும்புத் தோட்டம்.
இவ்வாறு எழுதுவதே மரபுப் பொருத்தமாம்.

## பயிற்சி

பொருத்தமற்ற சொற்களை விலக்கிப் பொருத்தமான சொற்களைச் சேர்த்தெழுதுக:

1 பாடலைச் சொன்னான். 2 பாடத்தைப்படி என்று கேட்டார்.
3 ஆடை சூடினான். 4 சிங்கம் கத்தியது.
5 பூந்தோப்பிற்குச் சென்றான். 6 அப்பம் மென்றான்.
7 யானை உறுமுகிறது. 8 கோழிக் குட்டி.

# VI சொற்றொடர்களையும் மரபுத்தொடர்களையும் வாக்கியத்தில் அமைத்தல்

## (1) சொற்றொடர்

இரண்டு சொற்கள் ஒன்று சேர்ந்து வருவது சொற்றொடர். எந்த இரண்டு சொற்களையும் சேர்த்துச் சொற்றொடராக எழுதி விடலாம். ஆனால், எல்லாச் சொற்றொடர்களும் அழகும் ஓசையினிமையும் பொருட்செறிவும் உடையனவாய் இரா. அழகும், ஓசையின்பமும, பொருட் செறிவுமுடைய தொடர்களே சிறந்த சொற்றொடர்களாம். அவற்றை வாக்கியத்தில் அமைத்தெழுதுவது சிறந்த பயிற்சியாகும். நீங்கள் எழுதும் கட்டுரைகளிற் சிறந்த சொற்றொடரை அமைத்து எழுதினால் உங்கள் கட்டுரை சிறப்புற்று விளங்கும்.

### உதாரணம்

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்.
கற்பனை மிகுந்த அற்புதக் கவிதை.
கசடறக் கற்றான்.
சென்ற இடமெல்லாம் சிறப்பு.
அமிழ்தினும் இனிய தமிழ் மொழி.
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி.
கனியிருப்பக் காய் கவர்தல்.
உடல் பொருள் ஆவி.
ஐயம் திரிபறக் கற்றான்.
காற்றினும் கடிக.

## (2) மரபுத்தொடர்

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவரும் தொடர்கள் பலவுண்டு. இவற்றிற்கு மரபுத்தொடர்கள் என்று பெயர். இம் மரபுத்தொடர்கள் தமிழிற் போலவே எல்லா மொழிகளிலும் உண்டு. இவை பொருட் பொலிவுடையவை. இவற்றை மாற்றியோ, வேறு சொற்களால் அமைத்தோ எழுதினால் அத்தகைய சிறப்பில்லை.

### உதாரணம்

அல்லும் பகலும்.

இதைப் 'பகலும் அல்லும்' என்றோ 'இரவும் நாளும்' என்றோ, எழுதினால் அத்துணைப் பொருட்பொலிவு பெறுவதில்லை.

கண்ணீரும் கம்பலையுமாக. கடல்மடை திறந்தாற்போல.
தட்டுத் தடங்கலின்றி. கங்கு கரை யின்றி.
தட்டவெப்ப நிலை. நடையுடை பாவனை.
ஒப்புயர்வற்று. கைதேர்ந்த சிற்பி.

### பயிற்சி

பின்வரும் மரபுத் தொடர்களையும் சொற்றொடர்களையும் வைத்து வாக்கியங்கள் அமைக்க :

ஏற்றத் தாழ்வு, கணக்கு வழக்கின்றி, அடியற்ற மரம் போல்; ஆறாத் துயரம், கண்ணும் கருத்துமாய், அமிழ்தினும் இனிய, தலைகால் புரியாமல், வாயார வாழ்த்தி, வாழையடி வாழையாய், வெள்ளிடை மலை, நெற்றி வேர்வை நிலத்தில்விழ, ஈடும் எடுப்பும், அடி முதல் முடிவரை, அழுத கண்ணும் சிந்திய மூக்கும், உள்ளும் புறமும், வாயில் மண்ணைப் போட்டு, கைகட்டி வாய்புதைத்து, கருவிலே திருவுடையார், இரு தலைக் கொள்ளி, கிள்ளுக் கீரையாக, குரங்குப் பிடியாக.

# VII உவமைகளையும் பழமொழிகளையும் வாக்கியத்தில் அமைத்தல்

## 1. உவமைகள்

சாதாரணமாக ஒருவரோடொருவர் பேசும் பொழுது, அழகாகப் பேசவேண்டும் என்று எண்ணினாலும், சொல்லும் விஷயத்தைக் கேட்பவர் மனத்தில் பதியும் வண்ணம்

சொல்ல வேண்டும் என்று நினைத்தாலும், உவமைகளைக் கலந்து பேசுவது வழக்கமாயிருக்கிறது. பேச்சுக்கே உவமைகள் அழகு செய்யுமாயின், எழுதுவதில் அவ்வுவமைகளைக் கையாண்டால் எவ்வளவு அழகாயிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். 'கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொன்னான்' என்பதைக் 'கேட்பவர் உள்ளத்திற் பசு மரத்தாணிபோலப் பதியுமாறு சொன்னான்' என்று சொல்வது அழகாயிருக்கிறதல்லவா? ஆனால் இவ்வுவமைகளின் பொருளை உணர்ந்து இடமறிந்து சொல்லவேண்டும்.

### உதாரணம்

1 அத்தி பூத்தாற் போல
2 ஆண்டிகள் மடம் கட்டினாற்போல
3 இலவுகாத்த கிளி போல
4 உள்ளங்கை நெல்லிக்கனிபோல
5 எள்ளில் எண்ணெய் போல
6 கடன்கொண்டார் நெஞ்சம்போல
7 கருடனைக் கண்ட பாம்பு போல
8 புற்றீசல் போல
9 உகிர்ச் சுற்றில் உலக்கை விழுந்தாற் போல
10 கடல் மடை திறந்தாற் போல
11 மலரும் மணமும் போல
12 வேடர் வலையிற் பட்ட மான்போல

## 2. பழமொழிகள்

எழுத்திலும் பேச்சிலும் உவமைகளைக் கையாள்வது எப்படி அழகு தருவதோ அப்படியே பழமொழிகளை இடையிடையே கூறுவதும் அழகு தருவனவாகும். அரிய பெரிய கருத்துக்களைச் சுருங்கிய வடிவில் அழகாகக் கூறுவதற்கு முன்னோர்கள் கூறிவரும் தொடர்களே பழமொழிகளாம். நம் நாட்டில் வழங்கும் பழமொழிகள் பல. அவை அவை அவ்வக்கால நாகரிகத்தை விளக்கும் அனுபவ மொழிகளாம். இங்குச் சில பழமொழிகளைப் பாருங்கள்.

1 அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2 ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.
3 உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

4 பதறாத காரியம் சிதறாது.

5 ஆனைக்கும் அடி சறுக்கும்.

6 ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

7 நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

8 தன் வினை தன்னைச் சுடும்.

9 சிறு துரும்பும் பற் குத்த உதவும்.

10 கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?

11 கூழானாலும் குளித்துக் குடி.

12 கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

## பழமொழிகளை வாக்கியத்தில் அமைக்கும் விதம்

சிறு துரும்பும் பல் குத்த உதவும்; ஆதலால் எதனையும் அற்பமென்று இகழலாகாது.

ஆனைக்கும் அடி சறுக்கும்; ஆதலாற் கவனத்துடன் எக்காரியத்தையும் செய்ய வேண்டும்.

### பயிற்சி

பின்வரும் உவமைகளை அமைத்து வாக்கியம் எழுதுக:

1 வேலியே பயிரை மேய்ந்தாற்போல

2 இலவு காத்த கிளிபோல

3 விழலுக்கிறைத்த நீர் போல

4 புலியைக் கண்ட மான் போல

5 மழை முகம் காணாப் பயிர் போல

6 இருதலைக் கொள்ளி எறும்பு போல

7 வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல

பின்வரும் பழமொழிகளை அமைத்து வாக்கியம் எழுதுக:

1 வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

2 எண்ணிய கருமம் எண்ணித்துணி.

3 உண்ட வீட்டிற் கிரண்டகம் செய்யாதே.

4 உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

5 அவலை நினைத்து உரலை இடியாதே.

6 பணமென்றாற் பிணமும் வாய்திறக்கும்.

7. உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி.

8. பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்.

# VIII நிறுத்தக் குறிகள்

## 1 பழையன திருப்புதல்

நாம் பேசும்பொழுது கருத்து விளங்கும்படி குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பேசுவதுபோல, நிறுத்தியும் நிறுத்தாதும் பேசுகின்றோம் அவ்வாறே எழுதும்பொழுதும் நிறுத்தவேண்டிய இடங்களும், நமது உணர்ச்சிகளும் விளங்கும்படிச் சில குறிகளை இட்டு எழுதவேண்டும். அப்பொழுதுதான் பிறர்க்கு விளங்கும்படிப் படித்தல் இயலும். இவ்வாறு படித்தற்கு உதவியாக இடப்படும் குறிகளுக்கு நிறுத்தற் குறிகள் என்று பெயர். முன் வகுப்புகளில், , காற்புள்ளி ; அரைப்புள்ளி : முக்காற்புள்ளி . முற்றுப்புள்ளி ? வினாக்குறி ! உணர்ச்சிக்குறி " " மேற்கோட் குறிகள் முதலிய சில நிறுத்தக் குறிகளையும் அவை இடப்படும் இடங்களையும் பார்த்துப் படித்தீர்கள். இவ் வகுப்பில் இன்னும் சில நிறுத்தக் குறிகளைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### பழம்பாடப்பயிற்சி

ஏற்ற இடங்களிற் பொருத்தமான நிறுத்தக்குறிகளை யிடுக :

பாலாஜி இதைக் கண்டு சற்று யோசித்து வெளியே போன இருவரையுங் கூப்பிடச் செய்து பிரதிவாதி கையில் இருந்த தடியை வாங்கி வாதி கையிற் கொடுத்து வாதியை நோக்கி ஐயா நீர் உம் பணத்தையடைந்து விட்டீர் போகலாம் என்றான் வாதி தலைவரை இஃதென்ன இத் தடி ஐம்பது ரூபாய் பெறுமா எனக் கேட்டான் கொலு மண்டபத்தில் அமர்ந்திருந்தோர் அனைவரும் அதைக்கேட்டு அதிசயித்தனர் அப்பொழுது பாலாஜி ஒரு வேலையாளைக் கூப்பிட்டு அத்தடியை வாங்கி உடைத்துப்பார் அதற்குள் ரூபாய்கள் இருக்கவேண்டும் அப்படியில்லாமற் போனால் என்னைப் போன்ற மடையன் வேறு எவனும் இல்லையென யான் சொல்வேன் என்றான்.

## 2 கீழ்க் கோடு இடுதல்

படிப்பவர்க்குத் தெளிவாகத் தெரியவேண்டும் என்று கருதுகிற சொற்களையும், சொற்றொடர்களையும், விளக்கம் வேண்டும்

சொற்களையும் வற்புறுத்தக் கருதும் முக்கியமான சொற்களையும் கீழே கோடிட்டுக் காட்டவேண்டும். இதற்குக் கீழ்க் கோடிடல் என்று பெயர்.

உதாரணம்

1 மகாத்மா காந்தி உலகப் பெரியார்.

2 தம்பி! வாழ்வில் எவ்வளவோ ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது இயல்பு. நீயும் பல உலக அனுபவங்களைப் பெறக்கூடும். எந்தநிலையிலும் ஒழுக்கத்தைக் கைவிடாதே. இதனை மறவாது உள்ளத்திற் கொண்டு வாழ்வாயாக.

3. நன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

கோடிட்ட சொற்களுக்கு இலக்கணம் கூறுக :

4 பின் வருவனவற்றுள் நான்கிற்கு விடை தருக :

## 3 இடைப் பிறவைப்புக் குறி

ஒரு முடிந்த கருத்துடன் கூடிய வாக்கியத்தின் இடையில், அக் கருத்தை நன்கு விளக்குதற் பொருட்டு, அவ்வாக்கியத்துடன் தொடர்பில்லாத தனிக்கூற்றை அடக்கி எழுதுகையில், அத்தனிக் கூற்றைப் பிரித்துக் காட்ட அதன் இருபுறத்தும் இடப்படும் குறி இடைப் பிறவைப்புக் குறியாகும். இடைப் பிறவைப்புக்குறி : — — — —இம்மாதிரி கோடுகளாகவும் (     ) இம்மாதிரி பிறைக் குறிகளாகவும் [     ] இம்மாதிரி இருதலைப் பகரவளைவுகளாகவும் எழுதப்படும்.

உதாரணம்

மானம் கெடவரின்—வானகமே பரிசாகக் கிடைத்தாலும்—வாழார் விழுமியோர்.

வீரன் முன்வைத்த காலை (உயிரே போவதாயினும்) பின் வைக்கமாட்டான்.

மகாத்மாவை நம் நாடு முழுதும் (என்? உலகம் முழுதும்) புகழ்கின்றது.

நீ உன் நண்பனிடம் [நான் நேரிற் சொல்லிய வண்ணம்] நடந்து கொள்வாயாக.

# IX வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும்

## 1 வல்லினம் மிகும் இடங்கள்

1 அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களின் முன்னும்,

2 எகர வினாவெழுத்தின் முன்னும்,

3 அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்களின் முன்னும்,

4 இரண்டாம் வேற்றுமை யுருபின் முன்னும், நான்காம் வேற்றுமை யுருபின் முன்னும்,

5 இயல்பாகவும் வேறொரு விதியாலும் நிலைமொழி யிறுதியில் நின்ற உயிரெழுத்துக்களின் முன்னும்,

6 இகர யகர அகர வீற்று வினையெச்சங்களின் முன்னும்,

7 வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்னும்,

8 யகர ரகர ழகர வீற்றுப் பெயர்களின் முன்னும் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்று சென்ற வகுப்புக்களிற் படித்திருப்பீர்கள். அவற்றிற்கு உதாரணங்களைப் பார்த்து நினைவிற்குக் கொண்டு வாருங்கள்.

| | |
|---|---|
| அப்பொருள்<br>இப்பொருள்<br>உப்பொருள் | சுட்டின்முன் வலிமிக்கன. |
| எப்பொருள் | — எகரவினாமுன் வலிமிக்கது. |

அந்தப் புத்தகம் இந்தப் பக்கம், எந்தத் திசை.
அங்குச் செல், இங்குப் பார், எங்குச் சென்றான்.
அப்படிச் செய், இப்படிப் போ, எப்படிச் சொன்னான்.
கண்ணனைக் கண்டேன், தம்பிக்குக் கொடுத்தேன்.

முல்லைக் கொடி மரக்கிளை.
ஓடிப் போ, போய்ப் பார்.
உண்ணச் செல், பட்டுத் துணி.
நாய்க்கால், தேர்த் தட்டு.
தமிழ்ப் புலவர்.

இனி இன்னும் சில வல்லினம் மிகும் இடங்களைப் படியுங்கள்.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வரும் வல்லினம் மிகும்.

உதாரணம்

செல்லாக்காசு, கல்லாச் சிறுவர்.
ஓடாக் குதிரை, கூறாப் பொருள்.

ஒற்றிரட்டித்த நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களின்முன் வரும் வல்லினம் மிகும்.

ஆறு + பெருக்கு = ஆற்றுப் பெருக்கு.
நாடு + பற்று = நாட்டுப் பற்று.
வயிறு + பசி = வயிற்றுப் பசி.
குருடு + கண் = குருட்டுக் கண்.

வேற்றுமைத் தொடரில் மென்றொடர்க் குற்றியலுகரங்கட்கு முன்வரும் வல்லினம் மிகும்.

குரங்கு + கால் குரங்குக் கால்.
அன்பு + பணி அன்புப் பணி.

செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் மிகும்.

உதாரணம்

தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டு ஊன்றா.
பெய்யாக் கொடுக்கும்.

ஐகாரச் சாரியை பெற்ற குற்றியலுகரங்களின்முன் வரும் வல்லினம் மிகும்.

பண்டை + காலம் = பண்டைக் காலம்
அன்றை + பொழுது = அன்றைப் பொழுது.
இரட்டை + பிள்ளை = இரட்டைப் பிள்ளை.
ஒற்றை + கண் = ஒற்றைக் கண்.

## 2. வல்லினம் மிகா இடங்கள்

சொல்லின் இறுதியில் வரும் வினா வெழுத்துக்களின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

நானா + சொன்னேன் = நானா சொன்னேன்.
நீயோ + சென்றாய் = நீயோ சென்றாய்.
நானே + கூறினன் = நானே கூறினன்.

விளிப் பெயர்களின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

தம்பி + செல் = தம்பி செல்.
கண்ணா + பார் = கண்ணா பார்.
பிள்ளாய் + படி = பிள்ளாய் படி.

மூன்றாம், ஆறாம் வேற்றுமை யுருபுகளின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

தம்பியொடு + சென்றான் = தம்பியொடு சென்றான்.
எனது + புத்தகம் = எனது புத்தகம்.

பெயரெச்சங்களின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

படித்த + பையன் = படித்த பையன்.
ஓடிய + குதிரை = ஓடிய குதிரை.
பாடுகின்ற + பெண் = பாடுகின்ற பெண்.

உயிரீற்று வினைமுற்றுக்களின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

சென்றன + பசுக்கள் = சென்றன பசுக்கள்.
பறந்தன + பறவைகள் = பறந்தன பறவைகள்.

அது, இது, எது என்ற சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

அது + தந்தான் = அது தந்தான்.
இது + பெற்றான் = இது பெற்றான்.
எது + கண்டான் = எது கண்டான்?

சில வினையெச்சங்களின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

கண்டு + சொன்னான் = கண்டு சொன்னான்.
வந்து + சென்றான் = வந்து சென்றான்.

எழுவாய்த் தொடரில் உயிரீற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

கிளி + சென்றது = கிளி சென்றது.
மழை + பெய்தது = மழை பெய்தது.

இரண்டாம் வேற்றுமைத் தொகையில் உயிரீற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

கனி + தின்றான் = கனி தின்றான்.

பல, சில என்ற சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

பல + தந்தான் = பல தந்தான்.
சில + பெற்றான் = சில பெற்றான்.

நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத் தொடர்க் குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் அல்வழியிலும் வேற்றுமையிலும் இயல்பாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காடு | + | பெரிது | = | காடு பெரிது. | அல்வழி |
| எஃகு | + | கடிது | = | எஃகு கடிது. | |
| படகு | + | பெரிது | = | படகு பெரிது. | |
| சால்பு | + | சிறந்தது | = | சால்பு சிறந்தது. | |
| காடு | + | புக்கான் | = | காடு புக்கான். | வேற்றுமை |
| அஃது | + | பார் | = | அஃது பார். | |
| கயிறு | + | திரி | = | கயிறு திரி. | |
| சால்பு | + | கொள் | = | சால்பு கொள். | |

மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் அல்வழித் தொடரில் இயல்பாம்.

வண்டு + சிறிது = வண்டு சிறிது.
அன்பு + பெரிது = அன்பு பெரிது.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது என்ற எண்ணுப் பெயர்களின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

ஒன்று + கொடு = ஒன்று கொடு.
இரண்டு + கண் = இரண்டு கண்.
மூன்று + பொருள் = மூன்று பொருள்.
நான்கு + திசை = நான்கு திசை.
ஐந்து + தொழில் = ஐந்து தொழில்.
ஆறு + சுவை = ஆறு சுவை.
ஏழு + புவி = ஏழு புவி.
ஒன்பது + சுவை = ஒன்பது சுவை.

ஆ, மா என்னும் பெயர்களுக்கு முன்னும்; மியா என்னும் முன்னிலை யசைச் சொல்லுக்கு முன்னும் வரும் வல்லினம் மிகாது இயல்பாம்.

ஆ + பெரிது = ஆ பெரிது.
மா + கொடியது = மா கொடியது.
கேண்மியா + கண்ணே = கேண்மியா கண்ணே!

வினைத்தொகையில் வருமொழி முதலில் வரும் வல்லினம் இயல்பாம்.

அடு + போர் = அடு போர்.
விளை + புலம் = விளை புலம்.
எழு + சுடர் = எழு சுடர்.
கொள் + கலம் = கொள் கலம்.

நீ என்னும் முன்னிலைப் பெயரின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

நீ + செல் நீ செல்.
நீ + படி நீ படி.

## பயிற்சி

பின்வரும் தொடர்களைச் சேர்த்தெழுதி எவ்வாறு புணர்ந்தன எனக் கூறுக:

| | |
|---|---|
| பத்து + பாட்டு. | போய் + சொன்னான். |
| அந்த + பெண். | உண்ண + சென்றான். |
| தாய் + பசு. | வேர் + பலா. |
| பலா + பழம். | அறம் + கடல். |

பின்வரும் தொடர்களைப் பிரித்தெழுதுக:

| | |
|---|---|
| நீ சொல். | பல காலம். |
| எட்டுத் தொகை. | ஆற்றுப் பாலம். |
| கயிற்றுக் கட்டில். | தமிழ்ப்பாடம். |
| அலைகடல். | எனது கண். |

(பிறப்பு)

## 1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு

எழுத்துக்கள் அளவால் வேறுபட்டிருப்பதேயன்றி ஒலியாலும் வேறுபட்டிருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் எழுத்துக்களின் பிறப்பிடம் வேறுபடுவதே. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் கழுத்திலும், மெய்யெழுத்துக்களில் வல்லினம் மார்பிலும், மெல்லினம் மூக்கிலும், இடையினம் உயிரெழுத்துக்களைப்போலவே கழுத்திலும், ஆய்தம் தலையிலும் பிறக்கும். ஆய்தம் தவிரப் பிற சார்பெழுத்துக்கள் அவ்வவற்றின் முதலெழுத்துக்களின் பிறப்பிடத்தையே பிறப்பிடமாக வுடையன

## 2. உடனிலை—வேற்று நிலை மயக்கம்

ஒரு சொல்லின் இடையில் மெய்யெழுத்துக்களோடு மெய்யெழுத்துக்கள் ஒத்துநிற்பதைக் கூறுவது மெய்ம்மயக்கமாகும். தனிமெய்யை அடுத்துவரும் மெய்யைப்பற்றிக் கூறுவதில்தான் சில வரையறைகள் உண்டேயன்றி, உயிர்மெய்களை அடுத்துவரும் மெய்களையோ உயிர்மெய்களையோ பற்றிய வரையறை ஏதும் இல்லை.

### I. உடனிலை மெய்ம் மயக்கம்

ரகரமும் ழகரமும் ஒழிந்த பதினாறு மெய்களும் தம்மொடு தாம் கூடும் கூட்டத்திற்கு உடனிலை மெய்ம்மயக்கம் என்று பெயர். ரகரமும் ழகரமும் அவ்வாறு இரட்டித்து நில்லா.

உதாரணம்

பக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், பட்டம், திண்ணம், அத்தன், வெந்நீர், அப்பம், அம்மா, வெய்யர், நல்லன், தெவ்வர், பள்ளம், வெற்றி, மன்னன்.

### II. வேற்று நிலை மெய்ம் மயக்கம்

க், ச், த், ப் என்ற நான்கு மெய்களும் ஒழிந்த மற்றைப் பதினான்கு மெய்களும் பிற மெய்களோடும் கூடும் கூட்டம் வேற்று நிலை மெய்ம்மயக்கமாகும்.

ங் என்ற மெய்யுடன் ககரவுயிர்மெய் சேரும்.

உதாரணம்

தங்கம், எங்கே.

ஞ் என்ற மெய்யுடன் சகரமும் யகரமும் சேரும்.

உதாரணம்

பஞ்சு, உரிஞ்யாது.

ட், ற் என்ற மெய்களுடன் க, ச, ப இம்மூன்று உயிர்மெய்களும் சேர்ந்து வரும்.

உதாரணம்

வெட்கம், வெட்சி, தட்பம், கற்சிலை, வெற்பு.

ண் என்ற மெய்யுடன் ட, க, ச, ஞ, ப, ம, ய, வ என்ற உயிர்மெய்கள் சேர்ந்து வரும்.

உதாரணம்

வண்டு, வெண்கலம், எண்சீர், விண்ஞாயிறு, பண்பு,
வெண்மணல், மண்யாது, கண்வலி.

ந் என்ற மெய்யுடன் த, ய என்ற உயிர்மெய்கள் சேர்ந்து வரும்.

உதாரணம்

கந்தன், பொருந்யாது.

ம் என்ற மெய்யுடன் ப, ய, வ என்ற உயிர்மெய்கள் சேர்ந்து வரும்.

உதாரணம்

கம்பர், மரம்யாது, மரம்வலிது.

ய், ர், ழ், என்ற மெய்களுடன் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்ற ஒன்பது உயிர்மெய்களும் சேர்ந்து வரும்.

(உ-ம்) பெய்க, காய்சினம், செய்தான் ; தாய்நாடு, செய்பு,
பாய்மா, ஆய்வர், வெய்ஞான்றது.
சேர்க, சீர்சால், அவர்தாம், நீர்நிலை, மார்பு, நேர்மை.
பார்வை, நீர்யார், சேர்ஞாயிறு.
வாழ்க, வீழ்சுடர், தவழ்தல், வாழ்நாள், வாழ்பவர்,
பாழ்மனம், வாழ்வர், வீழ்யாது, புகழ்ஞாயிறு.

வ் என்ற மெய்யுடன் யகரவுயிர்மெய் சேர்ந்துவரும்.

(உ-ம்) தெவ்யாது.

ல், ள், என்ற மெய்களுடன் க, ச, ப, வ, ய, என்ற உயிர்மெய்கள் சேர்ந்துவரும்.

(உ-ம்) வெல்க, வல்சி, சொல்ப, செல்வ, நால்யாது.
கொள்க, நாள்சிறிது, வாள்பார், கள்வர், வாள்யாது.

**ன்** என்ற மெய்யுடன் **ற, க, ச, ஞ, ப, ம, ய, வ** என்ற உயிர்மெய்கள் சேர்ந்துவரும்.

உதாரணம்

நன்றி, புன்கண், புன்செய், புன்ஞமலி, அன்பு,
நன்மை, பொன்யாது, பொன்வலிது.

**குறிப்பு** :—க, ச, த, ப இந் நான்கும் உடனிலை மயக்கத்தில் மட்டும் வரும். ர, ழ இவ் விரண்டும் வேற்றுநிலை மயக்கத்திற்கே வரும். இவ்வாறும் ஒழிந்த பன்னிரண்டு மெய்களும் உடனிலை மயக்கத்திற்கும் வேற்றுநிலை மயக்கத்திற்கும் வரும்.

## பயிற்சி

*பின்வருவனவற்றுள் உடனிலை மயக்கம், வேற்றுநிலை மயக்கம் இவை யெனக் கூறுக :*

| | | | |
|---|---|---|---|
| பண்பு, | வெற்றி, | தன்மை, | தண்ணீர். |
| வாழ், | பட்டு, | சங்கம், | மிக்க. |

## விஞக்கள்

1 உடனிலை மயக்கமென்றால் என்ன ?
2 வேற்றுநிலை மயக்கமென்றால் என்ன ?
3 உடனிலை மயக்கத்திற்கு மட்டும் வரும் மெய்கள் யாவை ?
4 வேற்றுநிலை மயக்கத்திற்கு மட்டும் வரும் மெய்கள் யாவை ?
5 இருவகையிலும் மயங்கும் எழுத்துக்கள் யாவை ?

# II சொல்

## 1. பெயர்ச்சொல்

### i விளியேலாப் பெயர்கள்

**நுமன், நுமள், நுமர்,** என்ற பெயர்களும் **எவன், எவள், எவர், எது, எவை,** என்ற விஞப் பெயர்களும், **அவன், அவள், அவர், அது, அவை** என்ற சுட்டுப் பெயர்களும், **நான், யான், நாம், யாம்,** என்ற தன்மைப் பெயர்களும், **நீ, நீர்** என்ற முன்னிலைப் பெயர்களும், **தான்** என்ற பொதுப் பெயரும், **பிறன், பிறள், பிறர்** என்ற சொற்களும் விளியேற்ப தில்லை. இவை **விளியேலாப் பெயர்**களாம்.

## ii விளி ஏற்கும்போது மாறுபடும் முறை

சொற்கள் விளியேற்றுவரும் பொழுது அச்சொற்களின் ஈற்றிலுள்ள எழுத்து வேறோரெழுத்தாகத் திரிந்தும், ஈற்றிலுள்ள எழுத்துக் கெட்டும், ஈற்றில் ஏ, ஓ என்ற எழுத்துக்கள் மிக்கும், எவ்வகை விகாரமும் இன்றி இயல்பாயும், ஈற்றயல் திரிந்தும் வரும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| பிள்ளை | பிள்ளாய் படி ! | ஈறு திரிந்தது. |
| நண்பன் | நண்ப வருக ! | ஈறுகெட்டது. |
| தாய் | தாயே வருக ! | ஏ மிக்கது. |
| சிறுவர் | சிறுவரோ வருக ! | ஓ மிக்கது. |
| மக்கள் | மக்காள் வாரீர் ! | ஈற்றயல் திரிந்தது. |

ஐகார ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும்போது 'ஆய்' எனத் திரியும்.

உதாரணம்

அன்னை — அன்னாய் வருக !
பிள்ளை — பிள்ளாய் படி !

னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும்போது அளபெடுத்தும், ஈறுகெட்டும், ஈற்றயல் நீண்டும் அவ்வாறு நீண்டு ஈறு கெட்டும், அவற்றோடு ஓகாரம் சேர்ந்தும், னகரம் யகரமாகத் திரிந்தும், அதனோடு அயல்திரிந்து ஏகாரம் மிகுந்தும், இறுதி கெட்டு அயல் நின்ற அகரம் ஏகாரமாகியும் வரும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| கிழவன் | —கிழாஅன் வருக ! | அளபெடுத்தது. |
| நண்பன் | —நண்ப வருக ! | - ஈறு கெட்டது. |
| பெருமன் | —பெருமான் வருக ! | - ஈற்றயல் நீண்டது. |
| மன்னன் | —மன்னா வருக ! | - ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டது. |
| அண்ணன் | —அண்ணாவோ வருக! | - ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டு ஓகாரமாயிற்று. |
| வாயிலான் | —வாயிலாய் கேள் ! | - இறுதி யகரமாயிற்று. |
| வாயிலான் | —வாயிலோயே கேள்! | - ஈறு கெட்டு ஈற்றயல் திரிந்து ஏகாரம் மிக்கது. |

முருகன் —முருகே வருக! - ஈறுகெட்டு அயலில் உள்ள [அகரம் எகாரமாயிற்று.

ளகரவீற்றுயர்திணைப் பெயர்கள் விளியேற்கும்போது அளபெடுத்தும், ஈறுகெட்டும், அயல்நீண்டும், இறுதி ளகரம் யகரவொற்றாகத் திரிந்தும், ஈற்றயல் அகரம் எகாரமாகியும் வரும்.

உதாரணம்

வேள் — வேஎள் வருக! — அளபெடுத்தது.
எல்லாள் — எல்லா வருக! — ஈறு கெட்டது.
நமர்கள் — நமர்காள் கேண்மின்— ஈற்றயல் நீண்டது.
வாயிலாள் — வாயிலாய் கேள்! — யகரமாகத் திரிந்தது.
அடிகள் — அடிகேள் வருக! — ஈற்றயல் அகரம் எகாரமாகத் திரிந்தது.

ரகரவீற்றுயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் போது அளபெடுத்தும், ஈற்றயல் அகரம் இகரமும் ஈகாரமும் ஆகியும், ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகியும், அதனோடு ஏகாரம் சேர்ந்தும், இறுதிமிக்கு அயலிலுள்ள யா கெட்டும் அதனயல் நீண்டும், இறுதியில் 'ஈர்' என்பது சேர்ந்தும் வரும்.

சிறுவர் — சிறுஅர் வருக! — அளபெடுத்தது.
தெவ்வர் — தெவ்விர் செல்க! — அகரம் இகரமாயிற்று.
வணிகர் — வணிகீர் வருக! — அகரம் ஈகாரமாயிற்று.
சான்றோர் — சான்றீரே வருக! — ஆகாரம் ஈகாரமாகி [ஏகாரம் பெற்றது.
தோழியார்—தோழீரே வருக! — இறுதி மிக்கு அயல்யா [கெட்டு அதன் அயல் நீண்டது.
எமர் — எமரீர் கேண்மின்! — இறுதியில் ஈர் வந்தது.

## பயிற்சி

பின்வருவன எவ்வாறு விளியேற்றன எனக் கூறுக:

பிள்ளைகாள்! கிழவோய்! வேந்தீர், நண்பீர்
நல்லோய். கொடியோய், சிறுவ! நண்பா,

## iii ஆகுபெயர் வகைகள்

ஒரு பொருளின் பெயர் அதனோடு இயைபுடைய **பிறிதொரு** பொருளுக்குத் தொன்று தொட்டு வழங்கி வருவது ஆகுபெயர் என்று முன் வகுப்பிற் படித்திருப்பீர்கள்: அதன் வகைகள் சில வற்றையும் படித்திருப்பீர்கள். இங்கு அவற்றுடன் இன்னும் சில வகைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆகுபெயராவது **பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், குணவாகு பெயர், தொழிலாகு பெயர், அளவையாகு பெயர், சொல்லாகு பெயர், தானியாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர்** எனப் பலவகைப்படும்.

1. **தாமரை** முகம். இங்கு, 'தாமரை' என்ற முழுப்பொருளின் பெயர் அதன் சினையாகிய பூவை மட்டும் உணர்த்தலால் **இது பொருளாகு பெயர்.** இதனை **முதலாகு பெயர்** என்றும் கூறுவர்.

2. **ஊர்** சிரித்தது. இங்கு, 'ஊர்' என்னும் இடப் பெயர் ஊரிலுள்ள மக்களைக் குறித்தலால் **இடவாகு பெயர்.**

3. **கோடை** விளைந்தது. இங்கு, 'கோடை' என்னும் காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் பயிரை உணர்த்தலால் **இது காலவாகு பெயர்.**

4. **தலை**க்குப் பத்துப் பணம் கொடு. இங்கு, 'தலை' என்னும் சினைப்பெயர். 'மனிதன்'. என்ற முதற் பொருளை உணர்த்தலால் **சினையாகு பெயர்.** முதலாகு பெயரும் சினையாகு பெயரும் தம்முள் மாறி வருவது காண்க.

5. **வெள்ளை** உழுதது. இங்கு 'வெள்ளை' என்னும் குணப்பெயர் அந்நிறத்தினைக் கொண்ட மாட்டை உணர்த்துதலால் **குணவாகு பெயர்.**

6. **பொங்கல்** உண்டான். இங்கு, 'பொங்கல்' என்னும் தொழிற்பெயர், பொங்கிய சோற்றை உணர்த்துதலால் **தொழிலாகு பெயர்.**

7. i. **எண்பது கோடி** நினைந்தெண்ணுவன. இங்கு 'எண்பது கோடி' என்னும் எண்ணலளவையின் பெயர், அவ்வளவினை

யுடைய நினைவுகளை யுணர்த்தி நிற்றலால் **எண்ணலளவை யாகு பெயர்.**

ii. **நான்கு விசை வாங்கு.** இங்கு 'நான்கு வீசை' என்னும் எடுத்தலளவைப் பெயர். அவ்வளவினைக் கொண்ட பொருளை யுணர்த்துதலால் **எடுத்தலளவை யாகுபெயர்.**

iii. உண்பது **நாழி.** இங்கு 'நாழி' என்னும் முகத்தலளவைப் பெயர். அவ்வளவினை யுடைய உணவைக் குறித்தலால் இது **முகத்தலளவை யாகுபெயர்.**

iv. **உடுப்பது நான்கு முழம்.** இங்கு 'முழம்' என்னும் நீட்டலளவைப் பெயர். அவ்வளவினைக் கொண்ட துணியை உணர்த்துதலால் **நீட்டலளவை யாகுபெயர்.**

8. இப்பாட்டுக்கு **உரை** கூறுக. இங்கு 'உரை' என்னும் சொல்லின் பெயர். அதன் பொருளை உணர்த்தி நிற்றலால் **சொல்லாகுபெயர்.**

9. **விளக்கு** உடைந்தது. இங்கு 'விளக்கு' என்னும் இடத்திலுள்ள பொருளின் (தானியின்) பெயர். அதன் இடமாகிய பொருளை உணர்த்தி நிற்றலால் **தானியாகுபெயர்.**

இடவாகு பெயரும் தானியாகு பெயரும் தம்முள் மாறுபட்டதைக் காண்க

10. **யாழ்** கேட்டான். இங்கு 'யாழ்' என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய இசையை உணர்த்துதலால் **கருவியாகு பெயர்.**

11. **அலங்காரம்** படி. இங்கு 'அலங்காரம்' என்னும் காரியத்தின் பெயர் அதனை யுணர்தற்குக் கருவியான நூலை யுணர்த்துதலால் **காரிய வாகுபெயர்.** கருவியாகுபெயரும் காரியவாகுபெயரும் தம்முள் மாறுபடுவது காண்க.

12. **கம்பனைப்** படித்தான். இங்குக் 'கம்பன்' என்ற கருத்தாவின் பெயர் அவனால் இயற்றப்பட்ட நூலை யுணர்த்துதலால் **கருத்தா வாகுபெயர்.**

13. **பாவை** வந்தாள். இங்கு, 'பாவை' என்னும் உவமானம் பாவைபோல்வாளாகிய பெண்ணை உணர்த்துதலால் **உவமை யாகு பெயர்.**

நூ-சூ. பொருள்முத லாறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே.

## பயிற்சி

*பின்வருவனவற்றில் ஆகுபெயர்களை எடுத்துக்கூறி இன்ன ஆகுபெயரெனவும் கூறுக :*

1 *உலகம் மகிழ்கிறது.*
2 *நீலம் சூடினாள்.*
3 *சுண்டல் கொடுத்தார்.*
4 *கார் அறுத்தான்.*
5 *நன்மை செய்தான்.*
6 *திருவள்ளுவர் மிகச் சிறந்த நூல்.*
7 *வெற்றிலை நட்டான்.*
8 *ஐந்தும் ஒடுங்கினான்.*

*பின்வரும் பெயர்களை இயற்பெயர்களாகவும், ஆகுபெயர்களாகவும் வைத்து வாக்கியம் அமைக்க :*

*மதுரை, வாழ்த்து, காலை, நான்கு, ஒருபடி, ஞாயிற்றுக்கிழமை.*

## வினாக்கள்

1 *விளியேலாப் பெயர்கள் யாவை ?*
2 *விளியேற்கும்போது பெயர்கள் எவ்வாறு மாறும் ?*
3 *னகர ளகர ரகர வீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் போது எவ்வாறு மாறும் ?*
4 *ஆகுபெயர் என்றால் என்ன ?*
5 *அதன் வகைகள் யாவை ?*
6 *ஒவ்வொரு வகையையும் விளக்கி உதாரணம் தருக.*
7 *ஒன்றிற்கொன்று மாறுபடும் ஆகுபெயர்கள் யாவை ?*

## 2 வினைச்சொல்

### i செய்யுமென்னும் முற்று

‘ **செய்யும்** ’ *என்ற உம்மீற்று வினைமுற்று, படர்க்கையில் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணையொன்றன்பால்*

பலவின்பால் என நான்கு பால்களிலும் வரும். தன்மையிடத்திலும், முன்னிலையிடத்திலும், படர்க்கையில் பலர்பாலிலும் வராது.

உதாரணம்

அவன் வரும் (வருவான்).
அவள் பாடும் (பாடுவாள்).
அது பறக்கும்.
அவை ஓடும்.

நூ.சூ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

## ii பொது வினைகள்

வேறு, இல்லை, உண்டு, வேண்டும், தகும் என்னும் வினைகள் இருதிணை, ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகவுள்ள வினைகளாம். பலவற்றிற்கும் பொதுவாக வருதலால் இவை **பொது வினை** எனப்படும்.

நான் வேறு, நாம் வேறு, நீ வேறு, நீர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு.

இவ்வாறே நான், நாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை என்பவற்றோடு இல்லை, உண்டு, வேண்டும், தரும், படும் என்பவற்றையும் சேர்த்துக்கொள்க.

நான் வாழ்க, நாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க.

## iii எச்சத்திரிபு

### (அ) பெயரெச்சத்திரிபு

செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் ஈற்றயல் உயிர்மெய் கெட்டும், செய்யுளில் ' உம் ' என்னும் ' விகுதி ' உந்து ' எனத்திரிந்தும் வரும்.

உதாரணம்

ஆகும் பொருள் — ஆம் பொருள்
போகும் போது— போம் போது
பாயும் பரி — பாயுந்து பரி

### (ஆ) வினையெச்சத்திரிபு

வினையெச்சம் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்பிய, செய்யியர், வான், பான், பாக்கு

என்ற பன்னிரண்டு வாய்பாடுகளையுடையதாக வரும். இவற்றுள் முதல் ஐந்தும் இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள். 'செய' என்ற ஒன்று மட்டும் நிகழ்காலவினையெச்ச வாய்பாடு. எஞ்சிய ஆறும் எதிர்கால வினையெச்ச வாய்பாடுகள். இவற்றுள் முதலிலுள்ள நான்கு வாய்பாடுகளும் இறுதியிலுள்ள மூன்று வாய்பாடுகளும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும். அவ் வினையெச்ச வாய்பாடுகள் அவ்வாறு தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியாமல், பிற கருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்தால் அவ்விடங்களில் பிற கருத்தாவின் வினைகொண்டு முடிதற்கேற்ற வினையெச்சங்கள் திரிந்தன எனச் சொல்ல வேண்டும்.

உதாரணம்

மழை பெய்து நெல் விளைந்தது—இங்கே பெய்து என்பது பெய்ய என்பதன் திரிபு.

அறிவான் உணர்த்தினான்—இங்கு அறிவான் என்பது அறிய என்பதன் திரிபு.

இல்லாகி யாங்கு—இங்கு இல்லாகி என்பது இல்லையானால் என்பதன் திரிபு.

## IV உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று

### (அ) தன்மைப் பன்மை

தன்மை எழுவாயுடன் முன்னிலையோ, படர்க்கையோ, இவ்விரண்டுமோ சேர்ந்துவரின் பயனிலை தன்மைப்பன்மையிலேயே முடியும். இவ் வினைமுற்று **உளப்பாட்டுத் தன்மைப் பன்மை** வினைமுற்று எனப்படும்.

தன்மையொடு முன்னிலை சேரும் பொழுது **அம், ஆம்** என்ற விகுதிகளையுடைய வினைமுற்றுக்களைப் பெற்றுவரும். தன்மையொடு படர்க்கை சேருமிடத்து **எம், ஏம், ஓம்** என்ற விகுதிகளையுடைய வினைமுற்றுக்களைப் பெற்றுவரும். தன்மையொடு முன்னிலையும் படர்க்கையும் சேருமிடத்தும் **கும், டும், தும், றும்** என்ற விகுதிகளையுடைய வினைமுற்றுக்களைப் பெற்றுவரும். இவற்றுள் இறுதியில் கூறிய நான்கு வினைமுற்றுக்களும் செய்யுளிலேயே வரும். இவ்வாறு பிரித்துக் கூறப்படினும் உலகவழக்கில் 'ஓம்' என்ற விகுதியுடைய வினைமுற்றே பயின்று வரும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| யானும் நீயும் | கற்றனம் | — அம் |
| ,, ,, | கற்றாம் | — ஆம் |
| யானும் அவனும் | கற்றனெம் | — எம் |
| ,, ,, | கற்றேம் | — ஏம் |
| ,, ,, | கற்றோம் | — ஓம் |
| யானும் நீயும் அவனும் | உண்கும் | — கும் |
| ,, ,, ,, | உண்டும் | — டும் |
| ,, ,, ,, | வந்தும் | — தும் |
| ,, ,, ,, | சென்றும் | — றும் |

## (ஆ) முன்னிலைப் பன்மை

முன்னிலை எழுவாயுடன் படர்க்கைச் சொல் சேர்ந்து முன்னிலைப்பன்மை வினை கொண்டு முடியும். அதற்கு **உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று** என்று பெயர்.

| | | |
|---|---|---|
| நீயும் அவனும் | கற்றனிர் | — இர் |
| ,, | கற்றீர் | — ஈர் |

### வினாக்கள்

1 செய்யுமென்னும் வினைமுற்று எவ்வெப்பால்களில் வரும்? எவ்வெப்பால்களில் வராது?
2 பொது வினைகளாக வருவன யாவை?
3 எதிர்காலப் பெயரெச்சம் எவ்வாறு திரியும்?
4 வினையெச்சத் திரிபை உதாரணம் கூறி விளக்குக.
5 தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை?
6 உலக வழக்கில் பயின்றுவரும் தன்மைப்பன்மை வினைமுற்று எது?
7 முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கு உதாரணம் தருக.

## 3 இடைச் சொல்

### மன்

**மன்** என்னும் இடைச்சொல் **ஒழியிசை**, **ஆக்கம்**, **கழிவு**, **மிகுதி**, **நிலைபேறு** என்ற பொருள்களிலும் **அசைநிலை**யாகவும் வரும்.

உதாரணம்

கூரியதோர் வாள்மன். 'முன்பு கூரியதாயிருந்தது; இப்பொழுது ஒடிந்து விட்டது' என்ற பொருளைத் தருவதால் ஒழியிசை.

பண்டு காடு மன். இப்பொழுது வயலுமாயிற்று என்னும் பொருளைத் தருதலால் ஆக்கம்.

சிறிய கள் பெறினே எமக்கீயுமன்னே. இப்பொழுது அவன் இல்லையாதலின் எமக்கு ஈதல் கழிந்தது என்னும் பொருள்படுதலால் கழிவு.

எந்தை எமக்கருளும் மன். இதில் மிகுதியும் அருள்வான் என்ற பொருள் தருதலால் மிகுதி.

மன்ன வுலகத்து மன்னுதல் புரிமோ. இங்கு இடைச் சொல்லடியாகப் பிறந்த மன்ன என்பது நிலைபெறாத என்ற பொருளையும் மன்னுதல் என்பது நிலை பெறுதல் என்ற பொருளையும் தருதலால் நிலைபேறு.

அது மன் கொண்கன் தேர். இங்கு மன் என்பது வேறு பொருளில்லாது நிற்றலால் அசைநிலை.

## என

**என** என்னும் இடைச்சொல் எண்ணுப் பொருளை உணர்த்தி வரும்.

### உதாரணம்

கண்ணனெனக் கந்தனென உளர். கண்ணனும் கந்தனும் என எண்ணி நிற்றலால் எண்.

இவ்விடைச்சொல் ஒரிடத்தில் நின்று எண்ணப்படும் பொருள் தோறும் போய்ப் பொருந்துவதும் உண்டு.

### உதாரணம்

பகை பாவம் அச்சம் பழியென-'பகையென, பாவமென, அச்சமென பழியென' என்று சேர்ந்து பகையும் பாவமும் அச்சமும் பழியும் என எண்ணி நிற்றல் காண்க.

## தில்

**தில்** என்னும் இடைச்சொல் **விழைவு, காலம், ஒழியிசை** என்ற மூன்று பொருளை உணர்த்தும்.

### உதாரணம்

பெறுக தில் அம்ம யான் — இங்கு, பெறவெண்டும் என்ற பொருள் தருதலால் விழைவு.

பெற்றாங் கறிக தில் அம்ம — இங்கு, பெற்ற காலத்தில் அறிக எனப் பொருள் படுதலால் காலம்.

வருக தில் அம்ம — இதில் வந்தால் இன்னது கிடைக்கும் எனப் பொருள் தருதலால் ஒழியிசை.

## அம்ம

**அம்ம** என்னும் இடைச்சொல் சிறிது பொருள் உணர்த்தும் **உரையசைப்** பொருளிலும், **கேண்மின்** என்ற பொருளிலும் வரும்.

உதாரணம்

*அதுமற்றம்ம.* இங்கு வேறு பொருளின்றிப் பேச்சில் வருதலால் உரையசை.

*அம்ம வாழி தோழி.* இதில் 'ஒன்று சொல்வேன் கேள்' என்னும் ஏவற் பொருளில் வருதலால் கேண்மின் என்ற பொருளுடையது.

## மோ—மதி

**மோ, மதி** என்ற இடைச்சொற்கள் முன்னிலை யசைகளாக வரும்.

உதாரணம்

*கேண்மோ*
*கேண்மதி*

## மாது, போலும், ஆம், தான், தாம்

**மாது, போலும், ஆம், தான், தாம்** என்ற இடைச்சொற்கள் எல்லா இடங்களிலும் **அசை நிலை**களாக வரும்.

உதாரணம்

*வந்தன்று மாதோ.*

*மகிழ்ந்தேன், மகிழ்ந்தனை மகிழ்ந்தான், மகிழ்ந்தார், மகிழ்ந்தது, மகிழ்ந்தன —* **போலும்.**

*பணியும்* **ஆம்** *என்றும்*

*நான் தான், நீதான், அவன் தான், அவர்தான், நீர்தாம், அவர்தாம், அவைதாம்.*

# 4. உரிச்சொல்

## கெழு, மல்லல், கூர், கழி, தட, வை

## (கெழு)

**கெழு** என்னும் உரிச்சொல் **மிகுதி, சிறப்பு** என்னும் பண்புகளை உணர்த்தும் உரிச்சொல்லாம்.

உதாரணம்

*வளங்கெழு மதுரை — மிகுதி*
*கெழு நாள் — சிறப்பு*

### (மல்லல்)

**மல்லல்** என்னும் உரிச்சொல் **வலிமை, வளம்** என்னும் பண்பு களை உணர்த்தும்.

உதாரணம்

மல்லல் தோள் — வலிமை
மல்லல் ஞாலம் — வளம்

### (கூர், கழி)

**கூர், கழி** என்ற உரிச்சொற்கள் மிகுதிப் பொருளை உணர்த்தும்.

உதாரணம்

புன்கண் கூர்யாமம் — மிகுதி
கழிமகிழ் — மிகுதி

### (தட)

**தட** என்னும் உரிச்சொல், 'அகன்ற' என்னும் பொருளை உணர்த்தும்.

உதாரணம்

தடந்தோள் — அகன்ற தோள்.

## III பொது

### 1 தொகையில் பொருள் சிறந்து நிற்குமிடம்

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்ற ஆறும் தொகைநிலைத் தொடர்களாம். இத் தொடர்களில் வரும் சொற்களில் ஏதாவது ஒரு சொல்லிலேயே பொருள் சிறந்து நிற்குமாதலால், அதனை நாம் அறிந்துகொள்ள வேண்டும். **வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை** இந்நான்கு தொடர்களிலும் முன்மொழியிலாவது பின் மொழியிலாவது பொருள் சிறந்து நிற்கும். **உம்மைத்தொகை**யில் இரண்டு சொற்களிலும் பொருள் சிறந்து நிற்கும். **அன்மொழித் தொகையில்** அங்கு இல்லாத புறமொழியில் பொருள் சிறந்து நிற்கும்.

உதாரணம்

குடம் வனைந்தான், வீரீபூ,
சேந்தாமரை, வேற்கண்.

இந் நான்கிலும் 'பானை வனைந்தான்' 'விரியாதபூ' 'வெண்டாமரை' 'கயற்கண்' எனத் தம் இனத்தை விலக்கி நிற்றலால் முன்மொழியிற் பொருள் சிறந்தது.

நிலம் உழுதான்
சுடு தீ
செஞ் ஞாயிறு
புலி பாய்ந்தான்

இந் நான்கிலும் பின்மொழியிற் பொருள் சிறந்தது.

இராப்பகல்

இங்கு இரண்டு சொற்களிலும் பொருள் சிறந்தது.

பூங்குழல் வந்தாள்

இங்கு, 'பூங்குழலை யுடையாள் எனப் பிறமொழியின்மேல் பொருள் சிறந்துநின்றது.

## 2 மரபு

எந்தப் பொருளை எந்தச் சொல்லால் என்ன விதமாகக் கற்றுணர்ந்த பெரியோர் வழங்கி வந்தார்களோ, அந்தப் பொருளை அந்தச் சொல்லால் அப்படியே சொல்லுதல் **மரபு** எனப்படும்.

உதாரணம்

சோற்றை உண்டான்
அப்பம் தின்றான்
பாலைக் குடித்தான் அல்லது பருகினான்
வெற்றிலை தின்றான்
நாய் குரைத்தது
கழுதை கத்தியது
குதிரை கனைத்தது
யானை பிளிறுகிறது
சிங்கம் கர்ஜித்தது
நரி ஊளையிட்டது
மயில் அகவுகிறது
குயில் கூவுகிறது

உதாரணம்

கோழிக் குஞ்சு
பூனைக் குட்டி
ஆன் கன்று
சிங்கக் குருளை
அணிற் பிள்ளை
தென்னந் தோப்பு
பூந் தோட்டம்
நெல் வயல்
மலர்ச் சோலை
யானைப் பாகன்

## 3 கால—மரபு வழுவமைதிகள்

### (அ) கால வழுவமைதி

விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் முக்காலங்களும் ஒன்றற்கொன்று மாறி வழங்குவது கால வழுவமைதியாம்

உதாரணம்

உண்ணற்கிருப்பவனை உடனழைத்துச் செல்ல வரும் நண்பன் அழைக்கும் பொழுது, இதோ உண்டேன் வந்தேன் எனக்கூறுவது விரைவினால் எதிர் காலத்தை இறந்தகாலமாகக் கூறிய காலவழுவமைதி.

'இந்தக் காட்டுவழி சென்றால் கைப்பொருள் பறிகொடுத்தாய்' என்பது மிகுதியால் எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது.

'எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் திட்டமாய் மழை பெய்தது.' இது தெளிவால் எதிர் காலம் இறந்த கால மாயிற்று.

'நாங்கள் முன்பு இங்குதான் விளையாடுவோம்.' இது இயற்கையாக வந்த காலவழுவமைதியாகும்.

ந-சூ. விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி.

எக்காலத்திலும் உள்ள பொருளை நிகழ்காலத்தில் கூறுவதும் கால வழுவமைதியாகும்.

உதாரணம்

கடவுள் இருக்கிறார்
மலை நிற்கின்றது
நதி ஓடுகின்றது

௩-சூ. முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே.

## (அ) மரபு வழுவமைதி

செயப்படு பொருளைக் கருத்தாவைப் போல வைத்து அதன் மேல் வினைமுதல் வினையை ஏற்றிக் கூறுவதும், அது போலவே கருவி, நிலம், செயல், காலம் என்ற இவற்றையும் கருத்தாவாகக் கூறுவதும், ஏவும் வினைமுதலை இயற்றும் வினை முதலாகக் கூறுவதும் **மரபு வழுவமைதி**ஆகும்.

உதாரணம்

இம்மாடு நான் வாங்கியது — செயப்படுபொருள்
இவ்வெழுத்தாணி நான்எழுதியது — கருவி
இவ் வீடு நான் இருந்தது — நிலம்
இத்தொழில் யான் செய்தது — தொழில்
இந்நாள் யான் பிறந்தது — காலம்
அரசன் கட்டிய ஆலயம் — ஏவும் வினைமுதல்

அஃறிணையிடத்தும் கேளாதனவற்றைக் கேட்பனபோலவும், பேசாதனவற்றைப் பேசுவன போலவும், நடவாதனவற்றை நடப்பன போலவும், செய்யாதனவற்றைச் செய்வன போலவும் சொல்வதும் மரபு வழுவமைதியாம்.

உதாரணம்

இரவெல்லாம் நின்றுயே திங்களே —கேட்பது போல
பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் —சொல்வது போல
இவ்வழி இவ்வூருக்குப் போம் —நடப்பது போல
தன்னெஞ்சே தன்னைச் சுடும் —செய்வது போல

### பயிற்சி

பின்வரும் வழுவமைதிகளை விளக்குக:

1 நன்னீரை வாழி யனிச்சமே.
2 தேய்தலும் வளர்தலும் திங்கள் செப்பும்.
3 கோழி வா வென்றழைத்தது.
4 கொடியாடை கைகளாற் றடுத்தது.
5 இச்சோறு நான் கொடுத்தது.
6 சூரியன் உதிக்கின்றான்.
7 அறம் செய்யின் வீடுபுக்கான்.
8 நாங்கள் முன்பு படிப்பது இவ்விடம்.

## 4 (அ) ஒரு பொருட் பன்மொழி

ஒரே பொருளையுடைய இரண்டு சொற்கள் அடுக்கிவரின் மிகுதி அல்லது சிறப்புப் பொருளைத் தரும். அவ்வாறு வருவதற்கு **ஒரு பொருட் பன்மொழி** என்று பெயர்.

உதாரணம்

மீமிசை ஞாயிறு 'மீ'. 'மிசை,' என்னும் மேல் என்ற ஒரே பொருளையுடைய சொற்கள் இரண்டும் அடுக்கி வந்ததால் மிகவும் மேலே யுள்ள ஞாயிறு எனப்பொருள் படுகின்றது.

மழஇளங்குழவி—மிக்க இளமை என்னும் பொருள் படுகின்றது.

உயர்ந்தோங்கு பெருமலை—மிகவும் உயர்ந்துள்ள மலை எனப் பொருள் படும்.

## (ஆ) இரட்டைக் கிளவி

பிரித்தால் பொருளின்றிச் சேர்ந்தே இணைமொழியாய் வழங்கி வருவது **இரட்டைக் கிளவி** யாம்.

உதாரணம்

சள சள வெனப் பேசினான்.
சலசலப்புக் கஞ்சாது.
மடமட வென்றோடினான்.
திறுதிறு வென்று விழித்தான்.

## (இ) அடுக்குத் தொடர்

இரண்டு சொல் அடுக்கி வருவது **அடுக்குத்தொடர்** எனப்படும். அடுக்குத் தொடரில் ஒரு சொல் இரண்டுக்கு மேலும் வரும்.

உதாரணம்

போ போ.
வரும் வரும் வரும் என.
நன்று நன்று நன்று.
கொடிது கொடிது.

## அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்குமுள்ள வேறுபாடு

| அடுக்குத் தொடர் | இரட்டைக் கிளவி |
|---|---|
| இரண்டு சொல் அடுக்கி வருவது | —இணைமொழியாகவே வருவது |
| பிரித்தால் பொருள் உண்டு | —பிரித்தால் பொருள் கிடையாது |
| இரண்டுக்கு மேல் வரும் | —இரண்டுக்குமேல் வராது |

## 5 உபலட்சணம்

**சொல்லப்பட்ட ஒன்றைக் கொண்டே அதனோடு அமைந்த பிறவற்றையும் கொள்ளுதல் உபலட்சணம் ஆகும்.**

உதாரணம்

'சோறுண்டான்' எனவே, கறியும் குழம்பும் முதலாயின உண்டான் எனக் கொள்ளல் உபலட்சணம்.

### வினாக்கள்

1 வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை இவற்றில் பொருள் சிறந்து நிற்கும் இடங்கள் யாவை?
2 மரபு எனப்படுவது யாது? உதாரணம் கூறி விளக்குக.
3 காலவழுவமைதி எவ்வெக் காரணங்களால் நிகழும்?
4 மரபு வழுவமைதியை உதாரணம் காட்டி விளக்குக.
5 ஒரு பொருட் பன்மொழி என்றால் என்ன?
6 இரட்டைக் கிளவி என்றால் என்ன?
7 அடுக்குத் தொடராவது யாது?
8 இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடு என்ன?
9 உபலட்சணம் என்றால் என்ன?

# IV புணர்ச்சி

## 1 உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி

**உயர்திணைப் பெயர்களின் ஈற்றுமெய் வருமொழி முதலில் வரும் வல்லினத்தோடு புணரும்பொழுது பெரும்பாலும் இயல்பாம்.**

உதாரணம்

கண்ணன் பெரியன்
அவன் சிறியன்
புலவன் சொல்வான்
கவிஞர் கற்பனை

**உயர்திணைப் பெயரீற்று உயிர் முன்னும், யகர ரகரங்களின் முன்னும் வல்லினம் இயல்பாம்.**

உதாரணம்

நம்பி பெரியன்
விடலை சிறியன்
சேய் கருணை
அவர் தந்தார்

சில உயர்திணைப் பெயரீறு வருமொழியோடு புணரும்பொழுது விகாரப்படும்.

(உ-ம்) கபிலர் + பரணர் = கபிலபரணர்
வணிகர் + தெரு = வணிகத்தெரு

ஆ, ஓ என்ற வினாவெழுத்துக்களுடன் கூடிய உயர்திணைப் பெயர்களின் முன்னும், விளியேற்ற உயர்திணைப் பெயர்களின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

நம்பியா கொண்டான்
நம்பியோ கொண்டான்
தம்பி சொல்
இராமா கேள்
நம்பீ செல்

## 2 உயிரீற்றின் முன் இயல்பாக நிற்பவை

எகர ஒகர மொழிந்த உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய எல்லாச் சொற்களின் முன்னும் வரும் ஞ. ந. ம. ய. வ என்ற எழுத்துக்களை முதலிலுடைய வருமொழிகள் இயல்பாம்.

உதாரணம்

விள, பலா, கனி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ என்பவற்றுடன் ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்பவற்றைச் சேர்த்துக்கொள்க.

உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய முன்னிலை வினை, ஏவல் வினை இவற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்) தருதி கொற்றா!
உண்டனை சாத்தா!
வருவாய் தேவா!
வா சாத்தா!
சொல்வாய் சிறுவா!
கூறுதி கொற்றா!

# V. யாப்பு

## I. சீர் பிரித்து வாய்பாடு கூறுதல்

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.'

இக் குறள் வெண்பாவில் முதலடியில் நான்கு சீர்களும் இரண்டாமடியில் மூன்று சீர்களும் உள்ளன.

கற்க—நேர் நேர்—தேமா, கசடற —நிரை நிரை — கருவிளம், கற்பவை—நேர் நிரை — கூவிளம், கற்றபின்—நேர் நிரை—கூவிளம், நிற்க—நேர் நேர்—தேமா, அதற்கு—நிரை நேர்—புளிமா, தக—நிரை—மலர்.

இவ்வாறு சீர்களிலுள்ள அசைகள் நிற்பதையுணர்ந்து வாய்பாடு கூறவேண்டும்.

உதாரணம்

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பா னின்ற கவி.

| | | |
|---|---|---|
| வண்டார் | — நேர் நேர் | — தேமா |
| வள வயல் சூழ் | — நிரை நிரை நேர் | — கருவிளங்காய் |
| மள்ளுவநாட் | — நேர் நிரை நேர் | — கூவிளங்காய் |
| டெங்கோமான் | — நேர் நேர் நேர் | — தேமாங்காய் |
| தண்டார் | — நேர் நேர் | — தேமா |
| புனைசந் | — நிரை நேர் | — புளிமா |
| திரன்சுவர்க்கி | — நிரை நிரை நேர் | — கருவிளங்காய் |
| கொண்டாடும் | — நேர் நேர் நேர் | — தேமாங்காய் |
| பாவலன்பால் | — நேர் நிரை நேர் | — கூவிளங்காய் |
| நின்ற | — நேர் நேர் | — தேமா |
| பசிபோல | — நிரை நேர் நேர் | — புளிமாங்காய் |
| நீங்கிற்றே | — நேர் நேர் நேர் | — தேமாங்காய் |
| காவலன்பால் | — நேர் நிரை நேர் | — கூவிளங்காய் |
| நின்ற | — நேர் நேர் | — தேமா |
| கவி | — நிரை | — மலர். |

## 2 தளையின் பொது இலக்கணமும் வகையும்

தளை என்றால் கட்டுதல் எனப் பொருள்படும். அதாவது சீர்களைப் பொருத்தமாக இணைத்தலாம். நின்ற சீரின் இறுதியசையும் வரும் சீரின் முதலிசையும் பொருந்தச் சேர்வது **தளை** எனப்படும்.

அது **நேரொன்றாசிரியத் தளை**, **நிரையொன்றாசிரியத் தளை**, **இயற்சீர் வெண்டளை**, **வெண்சீர் வெண்டளை**, **கலித்தளை**, **ஒன்றிய வஞ்சித் தளை**, **ஒன்றா வஞ்சித்தளை** எனச் சிலவகைப்படும்.

## 3 வெண்டளையின் இலக்கணம்

வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் வெண் பாவிற்குரிய தளைகளாதலின் அவை வெண்டளை எனப்படும். காய் முன் நேர் வருவது **வெண்சீர் வெண்டளை.** மாமுன் நிரையும், விள முன் நேரும் வருவது **இயற்சீர் வெண்டளை.**

உதாரணம்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

நன்றி - தேமா, - மறப் - நிரை, - மாமுன்நிரை - இயற்சீர் வெண்டளை
மறப்பது - கருவிளம், - நன் - நேர் - விளமுன்நேர்- "
நன்றன்று - தேமாங்காய், - தன் - நேர் - காய் முன் நேர் - வெண்சீர் [வெண்டளை
நன்றல்ல - தேமாங்காய் - நன் - நேர் - காய்முன்நேர் "
தன்றே - தேமா - மறப் - நிரை - மாமுன்நிரை - இயற்சீர் வெண்டளை
மறப்பது - கருவிளம் - நன் - நேர் - விளமுன்நேர்—"

இமிழ்கடல் வையத் திலங்கு மொழிக்குள்
அமிழ்தமே யாகும் தமிழ்.

முழுதும் - இயற்சீர் வெண்டளையாக வந்துள்ளது காண்க.

'எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம் - மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்கும் தார்வணிகர் வேந்து.'

முழுதும் வெண்சீர் வெண்டளைகளே வந்தன காண்க.

## 4 (அ) வெண்பா வகை

வெண்பாவானது குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா எனப் பலவகைப்படும்.

உதாரணம்

குறள் வெண்பா

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

### நேரிசை வெண்பா

'ஆதித் தனிக்கோல மானன் அடியவர்க்காய்ச்
சோதித் திருத்தூணிற் றோன்றினன்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்று னெங்கட் கிறை.'

### இன்னிசை வெண்பா

'வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.'

### சிந்தியல் வெண்பா

'அறிந்தானை ஏத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்ப—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு.'

### பஃறொடை வெண்பா

'பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாள் நல்லளே யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.'

## (ஆ) ஆசிரியப்பா வகை

ஆசிரியப்பாவானது நேரிசையாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

### நேரிசையாசிரியப்பா

'மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பவ்வம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாக
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.'

நிலைமண்டிலம்

'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார லுடை செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.'

இணைக்குறள்

'நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரலுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பெரல் லாதே.'

அடிமறிமண்டிலம்

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரலை யெனினே யானஞ் சுவலே
சார லுடை நீவர லாறே.'

## 5 ஆசிரிய விருத்த இலக்கணம்

அடிதோறும் ஆறுசீர்களும் ஆறுசீர்களுக்கு மேற்பட்டும் வரும் நான்கடிகள் தம்முள் அளவொத்து வருவது ஆசிரிய விருத்தம்.

### ஆறுசீர் ஆசிரிய விருத்தம்

உதாரணம்

'ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன் வேந்த
[னென்றாள்.'

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

'வந்தனர் முனிவர் மூவரென் றுரைமின் மன்னவர்க் கெனவவ ருரைப்பத்
தந்திடு மெனலும் புகுந்துநீ டம்பொற் றவிசிருந் தாசியும் கூறிக்

*கந்தடர் குவவுத் தோளில்விற் குறியும் காட்சியும் கருத்துற [நோக்கி*
*அந்தண ரல்லீர் யாவர்நீ ரென்றான் அவ்வுரைக் கமலனும் [உரைப்பான்.*

**இப்பாடல்களில்** சீர்கள் அளவொத்து வருதல் காண்க.

## VI அணி

### 1 வேற்றுமையணி

சொல்லாலும் குறிப்பாலும் ஒப்புமையுடைய இரண்டு பொருள்களை ஒன்றாக வைத்து அவற்றுள் வேற்றுமை தோன்றச் சொல்வது **வேற்றுமையணியாம்.**

உதாரணம்

*ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்.*

உபமான உபமேயங்களுள் ஒன்றைச் சிறப்பித்துக் கூறுவதும் **வேற்றுமையணியாம்.**

உதாரணம்

*திங்களும் சான்றோரும் ஒப்பர்—திங்கள் மறுவாற்றும்*
*சான்றோர் அஃதாற்றார்.*

### 2 வஞ்சப் புகழ்ச்சியணி

புகழ்வது போலப் பழித்துரைத்தல் **வஞ்சப் புகழ்ச்சி யணி யாம்.**

உதாரணம்

*இவ்வே பீலியணிந்து மாலைசூட்டி*
*கைதிரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து*
*கடியுடை வியனக ரவ்வே.*

இங்கு ஔவையார், தொண்டைமான் படைக்கலத்தைப் புகழ்வது போல அவன் வீரத்தை இகழ்வது காண்க.

### 3 நிரனிறையணி

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி நேரே பொருள் கொள்வது **நிரனிறையணி**யாம்

உதாரணம்

*ஈதா கொடு எனும் மூன்றும் முறையே*
*இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை.*

## வினாக்கள்

1 அணி என்றால் என்ன?
2 உவமை யணியை உதாரணத்துடன் விளக்குக.
3 உருவக வணி என்றால் என்ன?
4 வேற்றுமையணி என்றால் என்ன?
5 வஞ்சப்புகழ்ச்சியணிக்கு உதாரணம் தருக.
6 நிரனிறையணி என்றால் என்ன?

# VII. பொருளிலக்கணம்

## 1 அகப்பொருள்

**அகப்பொருளாவது** ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பம். அது **கைக்கிளையும், மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல்** என்று பகுக்கப்படும் **ஐந்திணையும், பெருந்திணையும்** என எழுவகை இயல்புடையது. இவற்றுள் கைக்கிளை ஒரு சார்பான காதல். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். ஐந்திணை என்பது அன்புடைக் காதல். எனவே, அகப்பொருள் ஐந்திணை நெறிகளையே பெரும்பாலும் விளக்கும்.

ஐந்திணைகளும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகைப்படும்.

நிலமும் பொழுதும் **முதற்பொருளாம்.** நாடும் நாடு சார்ந்த இடமும் **மருதம்.** இதற்கு வைகறைப் பொழுதும் ஆறு பருவங்களும் பொழுதுகளாம். காடும் காடு சார்ந்த இடமும் **முல்லை.** இதற்குக் கார்ப்பருவமும் மாலைக்காலமும் பொழுதுகளாம். மலையும் மலைசார்ந்த இடமும் **குறிஞ்சி.** இதற்குக் கூதிரும், முன்பனியும், யாமமும் பொழுதுகளாம். சுரமும் சுரம்சார்ந்த இடமும் **பாலை.** இதற்கு இளவேனிலும், முதுவேனிலும், நண்பகலும் பொழுதுகளாம். கடலும் கடல்சார்ந்த இடமும் **நெய்தல்.** இதற்கு அறுவகைப் பருவங்களும் எற்படுகாலையும் பொழுதுகளாம்.

ஒவ்வொரு திணைக்குமுரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, செய்தி, யாழ், பண் முதலியன **கருப்பொருள்களாம்.**

மருதத்துக்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், குறிஞ்சிக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லைக்கு இல்லிருத்தலும் இருத்தல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும் **உரிப்பொருள்கள்** ஆம்.

## 2 புறப்பொருள்

**புறப்பொருளாவது** எல்லோரும் அறிந்து அனுபவித்து இது இவ்வாறு இருந்தது எனப் பிறர்க்குக் கூறப்படும் அறமும் பொருளும் பற்றிய நிகழ்ச்சிகளாம்.

அது **வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்** எனப் பல திணைகளாக வகுக்கப்படும்.

பசுக்களைக் கவர்தலும், பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டலும் **வெட்சி.** பசுக்களை மீட்பதைத் தனியே **கரந்தை** எனக் கூறுவதும் உண்டு. பகைவர்மேற் போருக்குச் செல்லுதல் **வஞ்சி.** பகைவர் மதிலை வளைத்தலும் பிறரால் வளைக்கப்பட்ட மதிலைக் காத்தலும் **உழிஞை.** மதில் காத்தலைத் தனியே **நொச்சி** என்பதும் உண்டு. பகைவருடன் போர் செய்தல் **தும்பை.** பகைவரை வெல்லுதல் **வாகை.** போருக்கு வந்த பகைவரை எதிர்த்தலும், வீடுபேறு நிமித்தமாகப் பலவகை நிலையாமையைக் கூறி அறிவுரை கூறுவதும் **காஞ்சி.** அரசர் முதலாயினோருடைய கீர்த்தி, வலிமை, கொடை முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல் **பாடாண்.**

### வினாக்கள்

1 அகப்பொருள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
2 முதற் பொருள் என்றால் என்ன? ஐந்திணைக்குரிய முதற் பொருள்கள் யாவை?
3 கருப்பொருள் எனப்படுவன யாவை?
4 புறப்பொருள் என்றால் என்ன?
5 புறப்பொருள் திணைகள் யாவை?
6 புறப்பொருள் திணைகளை விளக்குக.

# உரைநடையாக்கம்

## கட்டுரை வரைதல்

ஒரு விஷயத்தைப் பற்றிச் சிந்தித்து மனத்தில் உதிக்கும் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி எழுதுவது கட்டுரை எனப்படும். கட்டுரை எழுதத் தொடங்குமுன், எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பற்றிய கருத்துக்களடங்கிய புத்தகங்களை வாசித்து அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுடன், மனத்தில் தோன்றும் புதிய கருத்துக்களையும், தனியாக ஓர் காகிதத்தில் குறித்துக்கொண்டு, பின்னர் அவ்விருவகைக் கருத்துக்களையும் பற்றித் தீர யோசித்து, அவற்றுள் சந்தர்ப்பத்திற்கு ஒத்த அவசியமான கருத்துக்களைமட்டும் பொறுக்கி எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பொறுக்கி எடுத்துக்கொள்ளப்பட்ட கருத்துக்களை ஒன்றற்கொன்று தொடர்புடையனவாக வரிசைப்படுத்தி அமைத்துக்கொண்டு அவற்றைத் தனித்தனியே வேண்டிய அளவில் விளக்கி எழுதல்வேண்டும்.

பொதுவாக, ஓர் கட்டுரையை **முகவுரை, விஷய விளக்கம், முடிவுரை** என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முகவுரையில் கட்டுரையின் தலைப்பைப் பற்றிய விளக்கங் கூறப்படும். மேலும், பின்னால் கூறப்புகுங் கருத்துக்களை ஒரு சில வாக்கியங்களால் மிகச் சுருக்கமாக எடுத்துக் காட்டுவதும் உண்டு. முகவுரை ஒரு தனிப் பத்தியாக அமைதல் வேண்டும். பின்னர் எடுத்துக்கொண்ட விஷயம் விளக்கிக் கூறப்படுதல் வேண்டும். விஷயத்தை விளக்குங் கருத்துக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனிப் பத்திகளில் அமைப்பது நலம். கட்டுரையின் இறுதியில் முடிவுரை கூறப்படும். இந்தப் பகுதி விஷயத்தைப் பற்றி ஆராய்ந்து கண்ட தீர்மானத்தையும், கட்டுரையாளரின் நோக்கத்தையும் விளக்குவதாக அமைந்திருத்தல் வேண்டும்.

மேற்கூறிய மூன்று பகுதிகளில் விஷய விளக்கப் பகுதி மிக முக்கியமானதொன்றாகும். இது பின்னால் விளக்கப்பட்டுள்ளது.

## விஷய விளக்கம்

கட்டுரை எழுதுவோர் கவனிக்கவேண்டிய முக்கியமான அம்சங்கள் நான்கு. அவை: 1. அளவு 2. விஷயப் பொருத்தம் 3. கருத்துக்களின் அமைப்பு முறை 4. கருத்துக்களின் தகுதிக்கேற்றவாறு இடந்தருதல் என்பன.

## அளவு

மாணாக்கர், முதன்முதல், தாம் எழுதப்புகும் கட்டுரையை, இத்தனை பக்கங்களுக்குள் எழுதி முடித்துவிட வேண்டு மென்று வரையறை செய்துகொள்ளுதல் வேண்டும். வரையறை யின்றி எழுதப்படும் கட்டுரை, விளக்கமற்றதாகவும், கவர்ச்சியற்றதாகவும், படிப்போர் மனதிற்கு அயர்ச்சி தரக்கூடியதாகவும் இருக்கும். பெரும்பாலும், ஆசிரியர்கள் கட்டுரை இத்தனை பக்கங்களுக்குள் எழுதப்படவேண்டு மென்று வரையறை விதிப்பது வழக்கம். அவ்வாறு விதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாகவோ, குறைவாகவோ கட்டுரை வரைதல் கூடாது. "விஷயத்தைப் பற்றிய முக்கியமான கருத்துக்கள் இவை; அவற்றை எவ்வாறு எழுதினால் அளவுக்குள் அடங்கும்," என்று சிந்தித்து முடிவுசெய்து வைத்துக்கொண்ட பின்னரே, கட்டுரையை எழுதத் தொடங்குதல்வேண்டும். அவ்வாறன்றி, மனம்போனவாறு எழுதப்புகுதல் கூடாது.

## விஷயப் பொருத்தம்

கட்டுரையில் கூறப்படும் கருத்துக்களெல்லாம், தலைப்போடு நெருங்கிய தொடர்புடையனவாக இருத்தல்வேண்டும். ஒரு விஷயத்தைப் பற்றி எழுதும்போது, அதனோடு தொடர்பற்ற வேறு கருத்துக்களை உட்புகுத்துவது, மற்றொன்று விரித்தல் என்ற குற்றத்திற்கு இடமாகும். அன்றியும் அதனை வாசிப்போர், விஷயத்தை நன்கு தெரிந்துகொள்ள முடியாமல் இடர்ப்படுவர். பொருளைப் பற்றிய கட்டுரையில், திரைப்படம் பார்ப்பதன் பலனையும் எடுத்துக்கூறுதல், பெரிதும் பொருத்தமற்றதன்றோ?

"பொருள் என்பது யாது? அதனைத் தேடும் முறைகள் எவை? தேடிய பொருளைச் செலவழிப்பதெப்படி? அதனுல் கிடைக்கும் பலனென்ன?" என்பனபோன்ற தொடர் புடைய கருத்துக்களை விளக்கிக் கூறுதலே முறையாகும். தலைப்பொன்றிருக்க கருத்தொன்று விரிப்பது கட்டுரைக் கழகன்று. தமது கொள்கையை அல்லது தமது மனத்தைக் கவர்ந்த ஒரு கருத்தை எந்தக் கட்டுரையிலேனும் சிறிது இடம் வகுத்துக்கொண்டு புகுத்தி எழுதி மகிழ்ச்சியடைவது சிலரது வழக்கம். அவரடையும் மகிழ்ச்சி அவரளவிற்றுன் நிற்கும். தாம் மகிழ்தற்குக் கட்டுரை வரைவதில்லை. படிப்போர்க்குப் பயனளிப்பதே கட்டுரையின் பண்பு. கட்டுரை எழுதப்புகுவோர் இவ் வுண்மையைக் கருத்தில் இருத்திக்கொள்ளுதல் வேண்டும்.

## கருத்துக்களின் அமைப்புமுறை

கட்டுரை எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிய பல்வேறு கருத்துக்களையும் ஒன்ருெடொன்று நெருங்கிய தொடர்புடையனவாக வரிசைப்படுத்திக் கூறு வது சிறந்த முறையாகும். கருத்துக்கள் தொடர்பற் றிருந்தால் படிப்போர்க்கு விஷயம் எளிதில் விளங்காது; முன் கூறவேண்டியதைப் பின்னும், பின் கூறவேண்டி யதை முன்னுமாக மாற்றிக் கூறுவதும், கலந்து கூறுவதும் பின்னிப் பின்னிக் கூறுவதும் முறையல்ல. பொருளைப் பற்றிய கட்டுரையில், பொருளைச் செலவிடும் முறையை முதலில் கூறி அதனைத் தேடுதற்கான வழிகளைப் பின்னுல், கூறுவதும், இரண்டையுங் கலந்து கூறுவதும் முரண்பா டாகும். அவற்ருேடு, பொருளால் கிடைக்கும் பலனையும் சேர்த்துக்கொண்டு பின்னிப் பின்னிக் கூறுவதும் விளக்க மற்றதாகும். பொருள் தேடும் மார்க்கங்களைக் கூறிய பின்னர் அதனைச் செலவிடும் முறையையும், அதன்பின் பலனையும் கூறுவதே பொறுத்தமுடையது. கட்டுரை யில் பத்தியமைப்பு மிகவும் முக்கியமான அம்சமாகும். கருத்துக்களைத் தொடர்புடையனவாக வரிசைப்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு கருத்தையும் தனித்தனிப் பத்தியில் அளவுக்குத்தக்கவாறு விளக்கிக் கூறுதல்வேண்டும். ஒரு

பத்தியில் கூறியதை அடுத்த பத்தியிலும் திருப்பிக் கூறுதல் தவறு. சுருக்கக் கட்டுரையில், மிக நெருங்கிய தொடர்புடைய கருத்துக்களை வரிசையாக ஒரே பத்தியில் கூறிவிடலாம். முதல் பத்திக்கும் அதற்கடுத்த பத்திக்கும் தொடர்பிருத்தல் வேண்டும். தொடர்பற்ற பத்தியமைப்பு, படிப்போர்க்கும், எழுதுவோர்க்கும் இடர்ப்பாடு விளைக்கும். பத்திகளெல்லாம் சங்கிலித் தொடர்போல் இணைப்புற்றிருந்தால், கட்டுரை இனிமையும், நீர்மையுமுடையதாய் அமையும். கருத்துக்களும் தெளிவுற விளங்கும்.

## கருத்துக்களின் முக்கியத்திற்கேற்றவாறு இடந்தருதல்

விஷய விளக்கத்திற்குரிய கருத்துக்களில், சில முக்கியமானவையாகவும், சில முக்கியமற்றனவாகவும் இருத்தல் கூடும். அவற்றுள் முக்கியமானவற்றை விரித்தும், பிறவற்றைச் சுருக்கியும் வரைதல்வேண்டும். முக்கியமான கருத்துக்கள் பல இருப்பின், அவற்றைச் சம அளவில் விரித்தெழுதுவது நலம். பொருளைப்பற்றிய கட்டுரையில் பொருள் தேடும் முறையும், செலவிடும் முறையும் மிகவும் முக்கியமான கருத்துக்கள். இவை இரண்டையும் சமமாக விரித் தெழுதவேண்டியது முறை. அன்றி, ஒன்றை மட்டும் விரித்துக் கூறி, மற்றொன்றைச் சுருக்கிக் கூறுதல் முறையன்று. அதனால் பின்னதின் முக்கியத்துவம் குறைந்து விடும். சிறப்பான கருத்துக்களை ஏற்றத்தாழ்வின்றிக் கூறினால்தான், படிப்போர்க்கு அவற்றின் சிறப்பை உள்ளபடி உணர்ந்துகொள்ளுதல் இயலும். முக்கியமான கருத்தொன்று சுருக்கிக் கூறப்பட்டிருப்பின், படிப்போர் அதனைக் கருத்தூன்றிக் கவனிக்காமல் விட்டுவிடுவர். ஆதலின், சிறப்பான கருத்துக்களுக்கு ஒத்த அளவில் இடங்கொடுத்து எழுதுவது சிறந்த முறையாகும். மேலும், மிகச் சிறந்த கருத்துக்களை விளக்குமிடங்களில், கீழ்க் கோடிட்டுக் காட்டுதலும் உண்டு. அவ்வாறு செய்வது படிப்போரின் கவனத்தை ஈர்ப்பதாகும்.

கட்டுரையில், விஷயத்திற்குப் பொருத்தமான கருத்துக்களமைந்த முதியோர் செய்யுள்களையும், முதுமொழிகளையும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டலாம். திருவள்ளுவர், பாரதியார், கர்த்தியடிகள் முதலியோருடைய பொன்

மொழிகளை எடுத்தாள்வது ஏற்றமுடையது. ஆனால் கட்டுரையை வெறும் மேற்கோள்களால் நிறைத்துவிடுதல் சரியன்று. எழுதுவோரின் சொந்த நடையும், கருத்துக்களும் பொருந்தியிருப்பதே உண்மைக் கட்டுரையாகும். ஓரோரிடத்தில், மிகமிகச் சிறந்த கருத்துக்களையும், தமது சொந்தத் தீர்மானங்களையும், பிறர் ஒப்புக்கொள்ளும் பொருட்டு, வலியுறுத்திக் காட்டவேண்டிய வகையில் ஒன்றிரண்டு மேற்கோள்களை எடுத்துக் காட்டுவது சாலப் பொருத்தமுடையதே. அவ்வாறு காட்டுமிடங்களில் மேற்கோட் குறிகள் இடவேண்டும்.

கட்டுரைக்கு நடையழகும் ஓர் முக்கியமான அங்கமாகும். படிப்போர்க்குத் தெவிட்டாமல் மேலும் மேலும் படிக்க வேண்டுமென்று ஆர்வத்தை எழுப்பத்தக்க இனிய, எளிய, தெள்ளிய நடையில் கட்டுரை எழுதப்படல் வேண்டும். இழிவழக்குகளையும், வழூச்சொற்களையும், தொகை நிலைகளையும், அனுவசியமான எதுகைத் தொடர் அமைப்புக்களையும், கடின சந்திகளையும், பிறமொழிச் சொற்களையும் விலக்குதல் வேண்டும். ஆனால் தமிழ்மொழியில் இல்லாதனவும், இன்றியமையாதனவுமான கலைச் சொற்கள் போன்ற திசைச் சொற்களையும், வட சொற்களையும் எடுத்தாள்வதிலும் குற்றமின்று. மணிப்பிரவாள நடையை மேற்கொள்வது மொழிக்கே அவமானம் விளைவிப்பதாகும்; தாய்மொழியின் வளர்ச்சிக்கு இடையூறுசெய்வதுமாகும். கருத்திற்கேற்ற உவமானங்களையும் கற்பனைகளையும் ஊடேடே புகுத்தி எழுதுவது, கற்போர்க்கு இனிமையளித்து, அவரது சிந்தனைசக்தி வளரத் துணைபுரிவதாகும். உரைநடையில் கடின சந்திகளும், செய்யுள் விகாரங்களும், விலக்கப்படல் வேண்டும். எளிய சந்திகளை இணைத்தே எழுதுதல் வேண்டும். பொருளறியத் தடை செய்யுமிடங்களில் சந்திகளைப் பிரித்தெழுத வேண்டியது முறை; பிறவிடங்களில் சேர்த்தெழுதுவது நலம். படிப்போர்க்கு எளிதில் பொருள் விளங்குமாறு எழுதப்படுங் கட்டுரையே சிறந்ததாகும். கட்டுரை எழுதப் புகுவோர் தமது திறமையைக் காட்ட நினைக்காமல், பொதுமக்களுக்குப் பயன்படுமாறு கட்டுரை

எழுதப்பட வேண்டுமென்பதைக் கருத்தில் இருத்திக்கொள்ளுதல் முக்கியமான கடமையாகும்.

கட்டுரை ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்ட நோக்கத்தோடு எழுதப்பட்டால்தான் அது சிறந்த கட்டுரையாக அமையும். அதை எழுதத் தொடங்கும் முன்னமேயே எழுதப்புகும் விஷயத்தைப்பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வறிவு, சில சிறந்த நூல்களைப் படித்தலாலும், பல பெரியோரிடம் பற்பல விஷயங்களைப் பற்றிக் கேட்டலாலும், சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்டலாலும், பத்திரிகைகளைப் படித்தலாலும், தாமாகவே விஷயங்களையும் பொருள்களையும் கவனித்துப் பார்த்துச் சிந்தனை செய்வதாலும் ஏற்படும். மேலும் மாணவர்கள் தாங்கள் கலாசாலைகளிற் படிக்கும்பொழுதும், பிற விடங்களிற் கேட்கும்பொழுதும் அவசியம் என்று தோன்றும் குறிப்புக்களை எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பெடுப்பது கட்டுரை யெழுதுதற்குச் சிறந்த பயிற்சியாகும். கேட்டவற்றை நினைவில் கொண்டு எழுத முயல்வது அத்துணைச் சிறப்பாக அமையாது.

வாக்கியங்களை அமைப்பதில் கவனம் செலுத்தவேண்டும். மொழிப் பயிற்சியில் கூறப்பட்ட வாக்கியப் பிழைகள் இல்லாதவாறு எழுதுவதுடன் சிறு சிறு வாக்கியங்களாக எழுதுவது நலம். வாக்கியத்தை வெகு நீளமாக வளரவிட்டால் பிழைகள் ஏற்படுவதற்கிடமுண்டாகும். வாக்கியத்தில் எழுவாய் பயனிலைப் பொருத்தங்கள் சரியாக இருக்கின்றனவா என்பதைக் கவனித்தெழுத வேண்டும். வாக்கியங்களில் ஆங்காங்கு ஏற்ற நிறுத்தக் குறிகளை இட்டு எழுத வேண்டும்.

கட்டுரையில் எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடிய எளிய சொற்களையே உபயோகிக்க வேண்டும். பொருளுணர முடியாத வழக்கிறந்துபோன சொற்களையும், திரிசொற்களையும், அன்னியமொழிகளையும் பயன்படுத்தலாகாது. முக்கியமான சில இடங்களில் அத்தகைய சொற்களை உபயோகிப்பது குற்றமாகாது. சொற்களைத் தனித்தனியே இடம் விட்டு எழுத வேண்டும்.

கட்டுரை எழுதுவதில் கையெழுத்தும் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய அம்சமாகும். எழுத்தை விளக்கமாக நிறுத்தி எழுதவேண்டும். கூ—ம என்பன போல

எழுத்துக்களைச் சேர்த்து எழுதக்கூடாது. பல எழுத்துக்களை ஒன்ருகச் சேர்த்து சங்கிலிப் பின்னல் போல் எழுதக்கூடாது. கையெழுத்து, தெளிவாகவும் அழகாகவும் இல்லாததாலேயே மாணவர்கள் நன்ருகப் படித்து எழுதியிருந்தாலும் அவர்கள் திறமை தெரியாமற் போய்விடுகிறது. எழுதிய கட்டுரைகளைத் திரும்பப் படித்தல் மிகவும் நல்லது. கட்டுரைகளில் சாதாரணமாக ஏற்படக்கூடிய ர-ற-ல-ள-ழ-ந-ன-ண இவ்வெழுத்துக்களால் உண்டாகும் பிழைகளையும், மறதியால் ஏற்படக்கூடிய எழுத்துப் பிழைகளையும் திரும்பப் படிப்பதால் திருத்திக்கொள்ளலாம்.

## கட்டுரை வகை

மாணவர்களே! சென்ற வகுப்பில் கட்டுரை வகைகளைப் பின்வருமாறு பிரித்துப் படித்திருப்பீர்கள்.

1 வருணனைக் கட்டுரை.
2 விளக்கக் கட்டுரை.
3 சிந்தனைக் கட்டுரை.
4 கதைக் கட்டுரை.
5 வரலாற்றுக் கட்டுரை.
6 சமூகக் கட்டுரை.
7 பொருளியல் கட்டுரை.
8 கல்வி அறிவியல் கட்டுரை.
9 இளைஞர் இயக்கங்களும் ஆக்கவேலைகளும்.
10 நூல்களைப் படித்துக் குறிப்புக்களைத் தயாரித்தலும் கட்டுரை வரைதலும்.
11 குறிப்பு விளக்கக் கட்டுரை.
12 செய்தி எழுதும் முறை.
13 கடிதங்கள்.

இக்கட்டுரை வகைகளை அறிதற்குரிய நூல்களின் பெயர்களும் அவ்வகுப்பில் கொடுக்கப்பட்டன. நீங்கள் அவற்றை நன்கு பயன்படுத்திக் கட்டுரை எழுதப் பயிற்சி பெற்றிருப்பீர்கள். இங்கு, பழம் பயிற்சிக்காக ஒவ்வொன்றையும் விளக்கிச் சில பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன.

## 1 வருணனைக் கட்டுரை

ஒன்றை அழகாகச் சிறப்பித் துரைத்தல் வருணனைக் கட்டுரையாகும். சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பழைய நகரங்களையும் கோயில்களையும், இக்காலத்திலமைந்துள்ள புதிய பட்டணங்களையும், காலை, மாலை, மழைக்காலம், நிலாக் காலம் போன்றவற்றையும், மலை, கடல், சோலை, தடாகம் முதலியவற்றையும், படக்காட்சி, நாடகம் போன்ற காட்சிகளையும், நாம் செய்த பலவகைப் பிரயாணங்களையும் புனைந் துரைத்தல் இப் பகுதியைச் சாரும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 மதுரை.
2 மாமல்லபுரம்.
3 சென்னைமா நகரம்.
4 சந்தை.
5 நீ பார்த்த ஒரு திருவிழா.
6 நெற்பயிர்
7 நூல்நூற்று ஆடை நெய்தல்.
8 எனது கிராமம்.
9 நிலாக்கால வருணனை.
10 நீ பார்த்த மலைக்காட்சி.

## 2 விளக்கக் கட்டுரை

நமது எண்ணங்களையும், கொள்கைகளையும், கருத்துக் களையும், நோக்கங்களையும் தகுந்த ஆதாரங்களுடனும் மேற் கோள்களுடனும் விளக்கி எழுதுவது விளக்கக் கட்டுரை யாகும். இது அறிவின் துணையால் எழுதப் படுதலின் முன்னதாகவே குறிப்புக்களை எழுதிவைத்துக்கொண்டு சிந்தித்து எழுத வேண்டும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 பெண் கல்வி.
2 கல்விச் சிறப்பு.
3 ஊக்கமுடைமை.
4 ஒற்றுமை.
5 சமூகத் தொண்டு.
6 சித்திரக் கலை.
7 இசைக் கலை.
8 காவியமும் ஓவியமும்.
9 கிராமக் கைத்தொழில்கள்.
10 விஞ்ஞானக் கல்வி.

## 3 சிந்தனைக் கட்டுரை

ஒருவரது வரலாற்றை வரையும்பொழுது அவரது சிறப்பியல்புகளை விளக்கிப் பாராட்டுதலும், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த பெரியார்களது சொற்பொழிவு

களில் பொதிந்துள்ள சிறந்த கருத்துக்களை எடுத்து விளக்கு தலும் சிந்தனைக் கட்டுரையின்பாற்படும். இவ் விளக்கக் கட்டுரை படிப்பவர் கருத்தை உயர்ந்த நோக்கங்களிற் செலுத்தும் வகையில் சிறந்த பண்புகளைச் சிந்தித்து எழுதப் படலால் சிந்தனைக் கட்டுரை எனப்படும். இதனைப் பண்பியல் கட்டுரை எனவும் கூறலாம்.

உலகப் பெரியார்களை நாம் பாராட்டுவது எதற்காக? அவர்களிடம் காணப்பட்ட அன்பு, அறம், அருள், சமநிலை, தன்னல மறுப்பு முதலிய பரந்த சிறந்த பண்புகளுக்காக வல்லவா? ஆகவே அவ்வகையில் கட்டுரை எழுதப் பழகுவது உங்களிடமுள்ள உயர் பண்புகள் வளரக் காரணமாகும்.

## பயிற்சிக் கட்டுரைகள்

1 இராம கிருஷ்ணரும் சமயப் பொது நோக்கமும்.
2 புத்தர் அருள் உள்ளம்.
3 காந்தியடிகளும் அஹிம்சையும்.
4 பாரதியாரின் மொழிப்பற்று.
5 வ. உ. சிதம்பரனாரின் தேசாபிமானம்.
6 பழந்தமிழர் வீரம்.
7 தமிழ் மாதர் கற்பு.
8 விவேகாநந்தர் கருத்துக்கள்.
9 இராமலிங்கரின் கடவுட்பற்று.
10 வள்ளல்களின் ஈகைத் திறம்.

## 4 கதைக் கட்டுரை

கண்ணில் கண்ட நிகழ்ச்சியை வரைதல், படித்த செய்தியை வரைதல், எந்தப் பொருளையும் சுயசரிதையாக வரைதல், கதைகளை வரைதல், உரையாடலாக வரைதல் முதலியன இப் பகுதியுள் அடங்கும். கதைகளைப் பழங் கதை, புதுக்கதை என இருவகையாகப் பிரிக்கலாம். புராணங்கள், இதிகாசங்கள், கன்னபரம்பரைக் கதைகள் முதலியன பழங் கதைகள். சிறு கதைகள், நவீனம் எனப்படும் விருந்து, நாடகம் முதலியன புதுக்கதைகளாம். இவ் வகையில் எழுதுவது கதைக் கட்டுரை எனப்படும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 சீவகன் கதை.
2 மணிமேகலை வரலாறு.
3 கண்ணகியின் வரலாறு.
4 கணைக்காலிரும்பொறை
5 கன்னன் கதை.
6 இராமாயணக் கதை.
7 பஞ்சதந்திரக் கதைகள்.
8 சிறு கதைகள்.

## 5 வரலாற்றுக் கட்டுரை

பெரியார்களின் வரலாறுகள், மொழி, நாடு, மதம், கலை முதலியவற்றின் வரலாறுகள், யாத்திரைகள், இயற்கை விந்தைகள், செயற்கைப் புதுப்புனைவுகள், பலவகைப் பொருள்களைப் பற்றிய செய்திகள் முதலியவற்றை வரைவது **வரலாற்றுக் கட்டுரையின்** பாற்பாடும். இதனைத் திறம்பட எழுதுவதற்கு வாழ்க்கை வரலாற்று நூல்கள், தமிழிலக்கியங்கள், விஞ்ஞானம், சரித்திரம், மொழி வரலாறு முதலிய நூல்களைக் கற்றுணர்தல் இன்றியமையாததாகும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 புத்தர் வரலாறு.
2 காந்தியடிகள் வரலாறு.
3 வள்ளுவர் வரலாறு.
4 கரிகாலன் வரலாறு.
5 சிவாஜியின் சரிதம்.
6 பாரதியார் வாழ்க்கை வரலாறு.
7 தமிழ் மொழிச் சிறப்பு.
8 சர். சி. வி. ராமன் வரலாறு.
9 தாஜ்மஹால் வரலாறு.
10 எனது கடற் பிரயாணம்.

## 6 சமூகக் கட்டுரை

கூடிவாழும் வாழ்வே சமூக வாழ்க்கையாகும். அச் சமூக வாழ்க்கை நலம்பெறத் தேவையான ஒற்றுமையுணர்ச்சி, சமத்துவம், சகோதர மனப்பான்மை, ஆண் பெண் சமவுரிமை, சாதி வேறுபாடு பாராட்டாமை முதலியவைகளைப் பற்றி எழுதப்படும் கட்டுரைகள் **சமூகக் கட்டுரைகள்** எனப்படும். மக்கள் கடமையுணர்ச்சி கொண்டு கடனாற்ற வேண்டும். தங்கள் தங்களுக்குரிய உரிமைகளைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழவேண்டும். சமூக வாழ்வில் பலவகையான கட்டுப்பாடுகளை நாமாகவே மேற்கொண்டு ஒழுக வேண்டும். எல்லோரும் இன்புற்று வாழ்ந்தால்தான் நாமும் இன்புற்று வாழ முடியும். அதற்குக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் இன்றியமையாதனவாம்.

ஜனசமூகம், நாடு, நிறம், மொழி, மதம், சாதி, குலம் முதலிய பல பிரிவுகளையுடையது. இப் பிரிவுகளால் மனிதர் பலவாறு பிரிந்துநின்று ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டால், மனித சமூகம் நல்வாழ்வு பெறுதல்லவா? ஆகவே, பிறர்நலம் பேணுதல், சகிப்புத்தன்மை, வெறுப் புணர்ச்சி யில்லாது அன்பு பாராட்டுதல் முதலிய சால்புக ளைக் கைக்கொண்டு வாழ்வதற்கு அரண்செய்யும் முறையில் அத்தகைய கட்டுரைகளை எழுதிப் பழகவேண்டும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 சமூகத் தொண்டு.
2 பொதுநலப் பணி.
3 தீண்டாமை யொழிப்பு.
4 சமத்துவம்.
5 சமூக வாழ்க்கை.
6 பெண் கல்வி.
7 சாதிவேறுபாடுகளும் சமூகமும்.
8 இன்றியமையாத சில சீர்திருத்தங் [கள்.

## 7 பொருளியல் கட்டுரை

உலக வாழ்விற்கு இன்றியமையாதது செல்வம். அப் பொருளை நல்வழியில் தேட முயல்வது மக்கள் கடமை. 'பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்' என்றார் வள்ளுவரும். பொருளை நல்லறவழியில் தேடுதல், தேடிய பொருளைப் பெருக்கல், அவ்வாறு பெருக்கிய பொருளை ஒருவழிச் சேர்த்தல், சேர்த்த செல்வத்தைச் செலவுசெய்து இன்பம் துய்த்தல் முதலிய பல செய்திகளைக் கூறும் நூல் பொருள்நூலாகும். இத் துறையில் பொருளாதாரத்திற் குரிய பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம், போக்கு வரவுச் சாதனங்கள், கூட்டுறவியக்கம், ஐக்கிய நாணயச் சங்கம், பாங்குகள் முதலியவற்றைப் பற்றிக் கட்டுரை எழுதவேண்டும். இத்தகைய கட்டுரைகள் எல்லாம் **பொரு ளியல் கட்டுரைகள்** எனப்படும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 கூட்டுற வியக்கம்.
2 கிராமக் கைத்தொழில்கள்.

3 பெரிய கைத்தொழில்கள்.
4 உள்நாட்டுப் போக்குவரவுச் சாதனங்கள்.
5 அயல்நாட்டுப் போக்குவரவுச் சாதனங்கள்.
6 வாணிபம்.
7 நம் நாட்டுப் பயிர்த்தொழில்.
8 பண்டமாற்றும் நாணயச் செலாவணியும்.
9 பாங்குகள்.
10 ஆலைத்தொழில்.

## 8 கல்வி அறிவியல் கட்டுரை

கல்வி மக்களுக்கு கண்போன்றது; மனிதனை மனிதனாக்குவது; அறியாமையைப் போக்கி உலகியலையுணர்ந்து நன்னெறியில் நடந்து இன்புற வழிகாட்டுவது. கல்வியால் ஒழுக்கம் மேம்பாடெய்தும் - கலையறிவு பெருகும் - சமுதாய வாழ்வு சிறப்புற்று விளங்கும். ஆகவே, நாம் யாவரும் கல்வித் தொடர்பான எல்லாவற்றையும் கற்றுணர்தல் இன்றியமையாததாகும். கல்வித் தொடர்பான கட்டுரைகள் அனைத்தும் கல்வி அறிவியல் கட்டுரைகள் எனப்படும்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 ஆரம்பக் கல்வி.
2 நடுத்தரக் கல்வி.
3 விஸ்வபாரதி.
4 கல்வியே அழியாச் செல்வம்.
5 கல்வியே முன்னேற்றத்திற்குச் சிறந்த சாதனம்.
6 முதியோர் கல்வி.
7 பெண் கல்வி.
8 கட்டாயக் கல்வி.
9 பிற நாடுகளில் கல்வி நிலை.
10 கல்வித்துறைகள்.
11 தொழிற் கல்வி.
12 ஆதாரக் கல்வி

## 9 இளைஞர் இயக்கம்

மாணவர் கல்விப் பயிற்சியில் ஊக்கமுடையராகத் திகழ்தல் வேண்டும். ஒற்றுமையும், ஒழுக்கமும், பிறர்க்குதவி செய்யும் இயல்பும், எதனையும் கூர்ந்தறியும் பயிற்சியும், சுத்தமும், சுகவழிகளும் உடைமையும், உடல் வலிமையும், எதனையும் திறம்படப் பேசுவதும், எழுதுவதும், இயற்று வதும், தம்மாலியன்றவரை சமூகத் தொண்டு புரிவதும் மாணவர் கைக்கொள்ள வேண்டிய நல்லியல்புகளாம். இவ்வியல்புகள் ஆக்க வழியில் பயன்பட வேண்டுமாயின் மாணவர் பலர் ஒன்று சேர்ந்து செய்யின் நலம் பயக்கும். இத்தகைய கூட்டங்கள் இயங்கும் முறையே **மாணவர் இயக்கம்** எனப்படும். நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள மாணவர் இயக்கங்கள் பல. அவற்றை நீங்கள் அறிந்துகொள்வது அவசியம்.

### பயிற்சிக் கட்டுரைகள்

1 சாரணர் இயக்கம்.
2 செஞ்சிலுவைச் சங்கம்.
3 மாணவர் சங்கம்.
4 திருவள்ளுவர் கழகம்.
5 நற்குடி முறைப் பயிற்சி.
6 மாணவர் சமூக சேவை.
7 உடற் பயிற்சிக் கழகங்கள்.
8 சொற்பொழிவுக் கழகங்கள்.

## 10 குறிப்பு விளக்கம்

மாணவர்களே ! நீங்கள் உங்கள் கலாசாலைகளிலும், புலவர் திருவிழாக்களிலும், இலக்கியக் கழகங்களிலும் பல பெரியார்களது சொற்பொழிவுகளைக் கேட்கின்றீர்கள்; வானொலியிற் பலர் பேசுவதைக் கேட்டு மகிழ்கின்றீர்கள். அவற்றை அப்படியே விடாமலும், முறை தவறாமலும் உங்களால் திரும்பச் சொல்லவோ, எழுதவோ முடியுமா ? முடியாதல்லவா ? ஆகவே அத்தகைய சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்கும் பொழுதே குறிப்பெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு அக்குறிப்புக்களை

விளக்கி எழுதின் சொற்பொழிவு சரியாக அமையும். ஆகவே குறிப்பெடுக்கவும் அவற்றை விரித்தெழுதவும் பழகவேண்டும். இத்தகைய கட்டுரை வகைக்குக் **குறிப்பு விளக்கம்** என்று பெயர்.

### பயிற்சிக் கட்டுரை

#### தமிழ் மொழி

குறிப்புக்கள்: தமிழ் மொழியின் பெருமை.—இனிமை, பழமை, உயர்தனிச் செம்மொழியாக விளங்குதல், இலக்கியப் பெருக்கம், பல வழிமொழிகளைத் தோற்றுவித்தல், இளமை மாறாமலும் வழக்கிறவாமலும் இருத்தல்.

பண்டைய நிலை:—மூவேந்தர் போற்றியது, சங்கங்கள், புலவர்கள்.

இன்றைய நிலை:—தாழ்வு, மொழிப்பற்றுக் குறைவு, அரசியல் புரட்சிகள், பிறமொழி யாதிக்கம், நாடு அரசியல் பொருளாதாரத் துறைகளில் அடிமைப்பட்டது.

தமிழ் வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டுவன:—சங்கங்கள், தமிழ்க்கலாசாலைகள், தமிழ் நூல்களை வெளியிடல், தமிழ்ப்புலவரைப் போற்றுதல், தமிழ் கட்டாயப் பாடம், முதன்மொழியாக்குதல், பொருளியல், விஞ்ஞானம் முதலிய பல துறைகளிலும் புதுப்புது நூல்களை இயற்றுதல்.

முடிவுரை:—தாய் மொழிப்பற்றே தாய் நாட்டுப் பற்று.

கீழ்வரும் பொருள்களைப் பற்றிக் குறிப்புக்கள் தயாரித்துப் பின்னர் விளக்கி வரைக:

1 தமிழர் நாகரிகம்.
2 கம்பர் கவியின்பம்.
3 தமிழ் இலக்கியச் சிறப்பு.
4 பண்டைத் தமிழர் அரசியல்.
5 பாரதியார்.
6 காந்தியடிகள் வரலாறு.
7 உழவின் மேன்மை.
8 தமிழகம்.

## 11 நூல்களைப் படித்துக் குறிப்புக்களைத் தயாரித்தலும் கட்டுரை வரைதலும்

பல நூல்களைப் பயில்வதற்கும் பயின்றவற்றைக் கொண்டு சிறந்த கட்டுரை வரைவதற்கும் **குறிப்புக்கள் தயாரித்தலும் கட்டுரை வரைதலும்** என்ற இம்முறை சிறந்த துணை புரிவதாகும். மேலும் இந்த முறை நூலாராய்ச்சிக்குப்

பெரிதும் உதவி செய்யும். ஒரே நூலிலிருந்து பலவகைக் கட்டுரைகளை எழுதுவதற்கும் இது துணை செய்யும். படித்த விஷயங்களைக் குறிப்புக்களைக் கொண்டே நினைவிற்குக் கொண்டு வரலாம்.

## பயிற்சி

இரவீந்திரநாத தாகூர்

*இரவீந்திரர் பிறப்பு — குடும்பப் பெருமை — பெற்றோர் — கல்விப் பயிற்சி — இயற்கையில் விருப்பம் — இமயமலை, கங்கை முதலியவற்றின் அழகில் ஈடுபடல் — இங்கிலாந்துப் பிரயாணம் — கவிதை எழுதும் இயற்கை — சிறுகதை எழுதுதல் — பத்திரிகை களின் பாராட்டு — நாடகங்கள் — கீதாஞ்சலி — உலகப் புகழ் — நோபெல் பரிசு — உலகப் பிரயாணம் — தாய் நாடு திரும்பல்— அரசியலில் ஈடுபடல் — சாந்திநிகேதனம் — விஸ்வபாரதி யமைத்த நோக்கம் — அமைப்பு — மீண்டும் உலகப் பிரயாணம் — துன்பங்கள் — இலக்கியச் சிறப்பு — குணாதிசயங்கள் — காந்தி யடிகளும் தாகூரும் — முடிவு.*

கீழே தரப்படும் நூல்களைப் படித்துக் குறிப்புக்கள் தயார் செய்து பின்னர்க் கட்டுரைகள் வரைக :

1 காந்தியடிகள்.
2 திருக்குறளின்பம்.
3 சிலம்புச் செல்வம்.
4 தமிழ்மொழி வரலாறு
5 மறைந்த மாநகர்.
6 வித்யாசாகரர்.
7 பாரதியார்.
8 கம்பர் கவியின்பம்.

## 12 பத்திரிகைச் செய்தி எழுதும் முறை

இன்றைய உலகத்தைப் பத்திரிகை யுலகம் என்றே கூறலாம். தமிழ்நாட்டில் பத்திரிகைகள் தமிழ் வளர்ச்சித் துறையில் நல்ல பயன்தரும் முறையில் வளரவில்லையாயி னும், எண்ணிக்கையில் குறைவின்றி வளர்ந்து வருகின்றன. பெரும்பாலும் அரசியல் கருத்துக்களை யுடையனவேயாயி னும் உலகச் செய்திகளையும், உள்நாட்டுச் செய்திகளையும், பிற இன்றியமையாத செய்திகளையும் தாங்கி வருகின்றன; சில பத்திரிகைகள் கதைப்பத்திரிகைகளாகவேகாட்சி யளிக் கின்றன. பத்திரிகைகளின் தன்மை எவ்விதமிருப்பினும், அவை மாணவர்களாகிய உங்களைத் தம் வசப்படுத்துவதில் ஓரளவு வெற்றி யடைந்துள்ளன. ஆகவே அவற்றை நன்

முறையில் பயன்படுத்திக்கொள்வது உங்கள் கடமையாகும். நீங்களும் செய்திகளை எழுதும் பயிற்சி பெறுதல் நல்லதல்லவா? மேலும் கலாசாலைகளில் நாள்தோறும் பத்திரிகைகளில் வெளிவரும் முக்கியமான செய்திகளைக் கரும்பலகைகளில் எழுதியும், சில மாணவரைக் கொண்டு எழுதிப் படிக்கச் செய்தும் வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இம்முறையால் பத்திரிகைகளைப் படிக்காதவர்களும் பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. ஆகவே, இச்செய்திக் குறிப்பு எழுதும் முறை மிகச் சிறந்த பயிற்சியாகும்.

பத்திரிகைகளில் வெளிநாட்டுச் செய்திகள், உள்நாட்டுச் செய்திகள், குறிப்பிடத்தகும் நிகழ்ச்சிகள், அரசியல் செய்திகள், உணவுப் பண்டங்களின் நிலை, சொற்பொழிவுகள், போட்டி விளையாட்டுக்கள், அரசியல் தலைவர்களின் அறிக்கைகள் முதலிய பலவகையில் செய்திகள் வெளிவருகின்றன. இவற்றின் விவரங்களைப் பத்திரிகைகளில் வந்துள்ளபடி சுருக்கமாக எழுதப் பயிலவேண்டும்.

## 13 கடிதங்கள்

கடிதங்கள் எழுதுவதில் கைக்கொள்ளவேண்டிய முறைகளையும் எழுதவேண்டிய பலவகைக் கடிதங்களையும் பற்றிக் கீழ்வகுப்புகளில் படித்திருப்பீர்கள். இங்குக் கீழ்வரும் சில கடிதங்களை வரைக.

1 ஆண்டுவிழா அழைப்பிதழ்.
2 கூட்டத் தலைமை தாங்க ஒருவரை வேண்டுதல்.
3 சுற்றுப் பிரயாணம் செய்ததைப் பற்றித் தந்தைக்குக் கடிதம் எழுதுதல்.
4 சில புத்தகங்கள் விலைக்கு வேண்டும் வியாபாரக் கடிதம்.
5 கிராமசுகாதாரத்திற்கு உதவி புரியத் தொண்டர்களின் உதவி வேண்டல்.
6 சாரணர் செய்த உதவியைப் பாராட்டிக் கடிதம் எழுதுதல்.
7 பள்ளி ஆண்டுவிழாவில் வாசிக்க வேண்டிய அறிக்கை தயார் செய்தல்.

8. விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுதல்.

9. விடுமுறைக் கடிதம்.

10. வேண்டுகோள் கடிதம்.

---

## பலவகைக் கட்டுரைகள்

### 1 பெண் கல்வி

குறிப்பு:—முன்னுரை—கல்வி இருபாலார்க்கும் பொது என்பது—கல்வியின் இன்றியமையாமை—பெண்களுக்குரிய கல்வி—கற்றறிந்த பெண்மணிகள்—முடிவுரை.

கல்வி மக்களுக்கு இன்றியமையாதது. கல்வியறிவு இல்லாதவர் 'கண்ணில்லாதவர்.' முகத்தில் கண்ணிருந்தும் சூரியனது உதவி இல்லாவிடில் பயனில்லாதது போலக் கண்ணிருந்தும் கல்வியறிவு இல்லாதவர் குருடரேயாவர். இதனாலேதான் திருவள்ளுவர், "கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்," என்று கூறியுள்ளார். கல்வியறிவில்லாதவர் மாந்தரே யாயினும் விலங்குகள் என்றே எண்ணப்படுவர். ஆதலின் உலகில் மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும். கல்வியை இன்னார் கற்கலாம், இன்னார் கற்கலாகாது என்னும் நியதியில்லை. அனைவரும் கற்க வேண்டும்.

பெண்கள் சமூகம் முன்னேற வேண்டுமாயின், ஒவ்வொரு பெண்ணும் கற்றிருக்க வேண்டும்.

பெண்கள் கல்வியழகைப் பெற்றிருந்தால், அவர்கள் மேற்கொண்ட இல்லறமானது நல்லறமாகத் திகழும். தன் கணவன் அறிவில்லாதவனாயினும், அவள் தன் கல்வியறிவால் குடும்பத்தை ஒழுங்காக நடத்துவாள். வாழ்க்கையும் செம்மையாக நடக்கும். கல்வியறிவு நல்லொழுக்க முதலியவற்றிற்குச் சாதனமாதலின், அவர்கள் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ள ஏதுவாகவிருக்கும். ஆகவே, பெண்கள் அவசியம் கற்க வேண்டும்.

சிவாஜி மன்னர் சிறந்த போர் வீரராகத் திகழ்ந்தமைக்கு அவர்தம் தாயாரே காரணராவர். அவ்வம்மையார்

இராமாயணம், பாரதம், முதலிய கதைகளை அடிக்கடி சொல்லிவந்தமையாலேதான் அவர் தாம் வீரராகத் திகழ வேண்டுமென எண்ணங்கொண்டு, அவ்வாறே விளங்கினர். இதுபோன்ற கதைகள் பலவுண்டு. ஆதலின், தமது பிள்ளைகள் முன்னேற வேண்டுமானல், பெண்கள் அவசியம் கற்க வேண்டும்.

பெண்களுக்கு நம்நாட்டுப் பண்டை இலக்கியங்களையும், நாட்டுச் சரித்திரங்களையும், முற்காலத்திய பெண்களது வாழ்க்கை வரலாறுகளையும் கற்பித்தல் வேண்டும். சிக்கன முறையைக் கையாளு முறை, குடும்பப் பாதுகாப்பு முறை, பிள்ளைகளை வளர்க்கு முறை, வரவு செலவுக் கணக்கு வைக்கும் பழக்கம், சுகத்தைக் கைக்கொள்ளு முறை, விருந்து போற்றும் முறை, பெரியார்களிடத்தில் நடந்துகொள்ளு முறை ஆகிய இவைகளைக் கற்பித்தல் வேண்டும். பெண்கள் தமது ஓய்வுக் காலங்களில் துணி தைத்தல், நெய்தல், இசைப்பயிற்சி, சித்திரம் வரைதல், பின்னல் முதலியவற்றைச் செய்யப் பழகி யிருத்தல் வேண்டும்.

முற்காலத்தில் பெண்கள் கல்வி கற்றிருந்தார்கள் என்பது பழைய நூல்களிலிருந்து தெரிகின்றது. நமக்குத் தெரிந்தவரையில் ஔவையார் கல்வியறிவிற் சிறந்துவிளங்கியவரல்லவா? இன்னும் காரைக்காலம்மையார், கோதையார் முதலியோர் அரிய பாடல்களைப் பாடியிருக்கின்றனர். அண்மையில் புகழுடம் பெய்திய சரோஜினி தேவியார் கவியரசியாகவும் அரசியலறிஞராகவும் விளங்கினர். இக்காலத்திலும் பண்டித விஜயலட்சுமியம்மையார் போன்றவர் கல்வி கற்றுச் சிறந்து விளங்குவதைக் காணலாம். இவர்களைப் போன்ற அறிவிற் சிறந்த பெண்கள் பலர் நம் நாட்டில் தோன்ற வேண்டும். அதற்காகப் பெற்ருேர்களும் தங்கள் பெண்களுக்குத் துணையாயிருந்து ஊக்கங் கொடுக்க வேண்டும்.

## 2 கிராம வாழ்க்கை

குறிப்பு :—கிராமம் என்பது யாது—கிராம வாழ்க்கைச் சிறப்புக்குக் காரணம்—பயன்—முடிவுரை.

நகரத்திற்குப் புறம்பே சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழும் இடமே கிராமம் எனப்படும். வீடுகள் மிகுதியாக உள்ளது பெரிய கிராமம் எனப்படும். வீடுகளின் எண்ணிக்கை குறைவாய் இருப்பின் சிறு கிராமம் அல்லது குக்கிராமம் என்று சொல்லப்படும். அங்குள்ள வீடுகள் மிகுதியாகக் கூரை வீடுகளாகவே யிருக்கும். ஆங்காங்குச் சில மெத்தை வீடுகளும் காணப்படும். சுற்றிலும் தோப்புகள் நிறைந்திருக்கும். ஏரி, குளம், துரவுகளும் இருக்கும். அங்குப் பலவகையான மக்கள் வாழும் வீதிகள் தனித்தனியாக அமைந்திருக்கும். அங்கு, படிக்கும் சிறுவர்களுக்காக ஒரு சிறிய பாடசாலையும் அமைந்திருக்கும்.

கிராம வாழ்க்கையின் சிறப்புக்குக் காரணம் பலவுண்டு. அங்கு மக்கள் நெருக்கமாக வசிக்கமாட்டார்கள். வீடுகள் எல்லாம் தனித்தனியாகக் கட்டப்பட்டிருக்கும். நாள்தோறும் புத்தம் புதிய உணவுப்பொருள்கள் கிடைக்கும் அங்குப் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய உடலுக்குக் கொழுப்பைத் தரும் பொருள்கள் எளிதில் கிடைக்கும்.

சாதாரணமாக நகர வாழ்க்கையில் உழைத்து அலுத்துப்போனவர்கள் கிராம வாழ்க்கையையே கடைசியாக விரும்புவர். கிராமமே அவர்களது ஓய்வுக்கு உரிய இடம். அங்கு ஜன நெருக்கமும் போக்கு வரவுக்குரிய சாதனங்களும் இன்மையால் காற்று சுத்தமாயிருக்கும். நோயின்றி வாழலாம். அங்கு ஊற்று நீரும் ஆற்று நீரும் சுத்தமாகவிருக்கும்.

வாழ்க்கைக்கு உயர்ந்த ஆடைகள் வேண்டியதில்லை. வீண் செலவுக்கும், ஆடம்பரத்திற்கும் அங்கு இடமில்லை. எங்கும் தோப்புத்துரவுகள் நிறைந்திருக்குமாதலால் வெளியே சென்று உலாவலாம்; தூய காற்றை உட்கொள்ளலாம். அது மன அமைதிக்கு ஏற்ற இடமாகும். இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கலாம். பயிர் பச்சைகளின் பசுமையையும், பறவைக் கூட்டங்களின் இனிய இசையையும் கண்டும் கேட்டும் இன்புறலாம். பலவகையான தொழிலாளிகளும் நமக்குத் தொண்டுசெய்யக் காத்துக்கொண்டிருப்பர்.

ஆதலால், எல்லா வகைகளிலும் கிராம வாழ்க்கையே நல்ல வாழ்க்கையாகும்; நலம் பயக்கும் வாழ்க்கையாகும். அங்குள்ள மக்கள் யாவரும் ஒருங்கு கூடி நிலத்தைப் பண்படுத்தி விளைவை யுண்டுபண்ணுவதாலும், ஆடு மாடுகளை வளர்ப்பதாலும், தங்கள் வாழ்க்கையை அமைதியுடன் நடத்துகின்றார்கள். இத்தகைய கிராம வாழ்க்கையால் மக்களுக்குள் ஒற்றுமையும், சகோதரப்பான்மையும் பெருகுகின்றன. இக்கிராமங்களே ஒரு தேசத்திற்குக் கண் போன்றவை. ஆதலால் நாம் கிராமத்தை விருத்தி செய்வோமாக.

## 3 வாசகசாலை, நூல் நிலையங்களின் பயன்

குறிப்பு:—கல்வியின் அவசியம்—தேடல்—கல்வி அறிவுபெறுதற்குத் துணை செய்வன—வாசகசாலையும் நூல் நிலையமும்—பயன்—முடிவு.

உலகில் உள்ள மக்கள் யாவரும் கல்வி கற்க வேண்டும், கல்வியே கண். கல்வியே பொருள். கல்வியே இன்பம். சுருக்கமாகக் கூறுமிடத்து, எல்லா நன்மைக்கும் காரணம் கல்வியேயாம். அறிவுடையவரையே உலகம் மதிக்கும்; அரசனும் விரும்புவான். ஆதலினால், கண்போன்ற கல்வியை ஒவ்வொருவரும் கற்றல் வேண்டும். இதனால் வள்ளுவப் பெரியாரும், 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்று கூறினார்.

இத்தகைய கல்வியை எங்குப் பெறுவது? நீர் வேட்கையுடையவன் நீரைத் தேடிச் செல்வதுபோல, கல்வி கற்க விரும்புவோன் கல்வியுள்ள இடத்தையே நாடிச் செல்ல வேண்டும். கல்வி பாடசாலையிலும் உண்டு; வீட்டிலும் உண்டு. ஆகவே, கல்வியைப் பலரும் கற்க வேண்டும் என்ற நன்னோக்கங்கொண்டே துரைத்தனத்தார் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

**வாசகசாலை:**—துரைத்தனத்தார் கல்வி கற்றுக்கொள்வதற்குச் செய்துள்ள பல மார்க்கங்களில் வாசகசாலையும் ஒன்று. வாசகசாலைக்குச் சென்றால், அங்குப் பல வகையான பத்திரிகைகளைக் காணலாம். தினசரித்தாள், மாதாந்திரத்தாள், வாராந்திரத்தாள் முதலிய பல்வேறு

வகையான பத்திரிகைகளையும் பெற்றுப் படிக்கலாம். இப்படிப்பட்ட பத்திரிகைகளைப் படிப்பதனால் நம் நாட்டுச் சமாச்சாரங்களையும், பிற நாட்டு விஷயங்களையும், பல வகையான விளம்பரங்களையும், பல நூலாராய்ச்சிக் கட்டுரைகளையும், தொடர் கதைகளையும், இன்னும் நாம் அறிய வேண்டிய பலவற்றையும் தெரிந்துகொள்ளலாம். உலகியலறிவுக்குத் துணை செய்வனவாகிய பல் வேறு புத்தகங்களையும் எடுத்துப் படித்துத் நமது அறிவை வளர்த்துக்கொள்ளலாம். இன்னும் பல நன்மைகளையும் வாசகசாலை மூலமாக நாம் பெறலாம்.

**நூல் நிலையம்** :—மக்கள் யாவரும் ஒருங்கே கல்வியறிவு பெறுமாறு அரசாங்கத்தார் செய்துவரும் ஏற்பாடுகளில் நூல் நிலையமும் ஒன்றாகும். பலவகையான நூல்களும் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு நூல் நிலையம் என்று பெயர். இங்குப் பல மொழிகளில் எழுதப்பட்டுள்ள புத்தகங்களைக் காணலாம். பலவகையான மத நூல்களைக் காணலாம். விஞ்ஞான நூல்களையும், வரலாற்று நூல்களையும் நாம் பார்க்கலாம். விலை குறைவான புத்தகங்களும், விலையுயர்ந்த புத்தகங்களும் இருக்கும் இப்படிப்பட்ட நூல் நிலையங்களுட் செல்வோர் தமக்கு விருப்பமான நூல்களை வாங்கிப்படித்துத் தமது அறிவையும் ஒழுக்கத்தையும் பெருக்கலாம்; செய் தொழில், வாணிபம் போன்ற வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றையும் தெரிந்து கொள்ளலாம். விலை கொடுத்து வாங்கும் கஷ்டத்தை யெல்லாம் இந்நூல் நிலையம் போக்கி விடுகின்றது. புத்தகம் வாங்கிப் படித்தற் பொருட்டு நாம் ஒருவிதமான கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. நாமெல்லோரும் நூல்களை எடுத்துப் படிக்க வேண்டும் என்பதே இந்நூல் நிலையத்தின் நோக்கமாகும்.

இந் நிலையத்திற்குச் சென்று புத்தகங்களை வாங்கிப் படிப்பதனால் உலக ஞானத்தைப் பெறலாம்; பொருள் தேடும் வழிகளை உணரலாம்; நல்லொழுக்கத்தைப் பெறலாம்; நமக்குள் ஒற்றுமையும் உண்டாகிறது.

இத்தகைய நூல் நிலையங்கள் நமது நாட்டில் ஒவ்வொரு வீதியிலும் இருக்க வேண்டும். ஏதேனும் ஒன்ருவது, இருந்தே தீரவேண்டும். இதற்கு நாட்டாண்மைக் கழகமும், நகர பரிபாலன சங்கமும், பஞ்சாயத்தும் முன்னின்று துணை செய்ய வேண்டும். ஆங்காங்குள்ள நகரப் பொது மக்களிற் செல்வர்களாயுள்ளோர் இத்தொண்டில் ஈடுபடுதல் வேண்டும்; சீர்பெற நடத்த வேண்டும்; அறியாமையை ஒழித்தல் வேண்டும்.

இப்பொழுது சென்னையில் கன்னிமாரா நூல் நிலையம், பல்கலைக்கழக நூல் நிலையம் ஆகிய இரண்டும் தான் பொது மக்களின் நன்மைக்காக இருக்கின்றன. இவற்ருல் மட்டும் மக்களது அறியாமை நீங்காது. ஆதலின் தெருத் தெருவாய் இவை அமைக்கப்பெறுதல் வேண்டும்.

இவ்வாறு தெருக்கள்தோறும் அமையப் பெற்ருல் மக்கள் அங்குச் சென்று படிக்க மனம் கொள்வர்; அதைத் தங்கள் பொழுது போக்காகக் கொள்வர்; அதனுல் மேலும் மேலும் படிக்க ஆசை கொள்வதன்றிப் படிக்கும் பழக்கத்தையும் பெறுவார்கள்.

ஆதலால் பொதுநலத்தொண்டில் ஈடுபடுவோரும் பெருஞ் செல்வரும், நாட்டுக்கு உழைக்கும் நல்லோரும் பொதுப் பணங்களைக்கொண்டும் அரசாங்கத்தார் துணை கொண்டும் ஆங்காங்கு இத்தகைய நூல் நிலையங்களை அமைத்துப் பொது மக்கள் அறிவை வளர்ப்பார்களாக.

## 4 அயல்நாட்டுப் பிரயாணமும் அதன் பயனும்

குறிப்பு:—முன்னுரை—அயல்நாட்டுப் பிரயாணம்—முற்காலமும் தற்காலமும்—முடிவுரை.

கல்லூரிகளும் உயர்தரக் கலாசாலைகளும் மட்டுமே மாணவர்களின் கல்வியறிவைப் பெருக்கா. அங்குப் பயிலப்படும் கல்வி வெறும் ஏட்டுப்படிப்பேயாம். "ஏட்டுச் சுரைக்காய் கறி சமைக்க உதவாது" என்பதைப் போல, ஏட்டுக்கல்வி அனுபவத்திற்கு வருகின்றவரை பயன்தராது. அக்கல்வியால் பயன் பெறவேண்டின், அக்கல்வியை உணரும் முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பொருளையும்

கண்ணிற் கண்டால் ஒழிய அதனைத் தெரிந்துகொள்ள இயலாது. மாணவர்கள் அதைக் கண்ணுற்காணின் என்றும் மறவார். இவ்வாறு மாணவர்கள் படிக்கும் ஒவ்வொன்றையும் கண்ணுற் கண்டு அறிந்துகொள்ள தேச சஞ்சாரம் செய்தல்வேண்டும். அதனால் அவர்கள் அடையும் நன்மைகளுக் களவில்லை. கற்ற கல்வி முழுப் பயனையும் தரும் என்றே சொல்லலாம்.

நாம் அயல்நாட்டுப் பிரயாணத்தில் பல சாதி மக்களைக் காணலாம்; அவர்களது நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அறியலாம். அவர்களது மொழி, வாழ்க்கைமுறை முதலியன நமக்குப் புலனாகும். இவற்றை யறிவதனால் நமது அறிவு விசாலமடைகின்றது. அவர்களது உடை முதலியவற்றை ஆராயின் அந்நாட்டுத் தட்ப வெப்பமே காரணம் என்பதை அறிவோம்.

இவ்வாறு சிந்திப்பதால் நமது சிந்தனா சக்தியும் ஆராய்ச்சியறிவும் வளர்ச்சியடைகின்றன. இந் நிலையில் நமது குணநலன்கள் திருத்தம் அடைகின்றன. நமது குறைகள் அகலும். அன்னியரது குணநலன்களை யறிந்து தக்கபடி நடக்கவும் முயல்வோம்.

பிரயாணம் நாகரிகத்தை வளர்த்துக்கொள்ளத் துணை செய்கிறது. பிற ஊர்களைப் பற்றி யெல்லாம் தெரிந்து கொள்ளலாம். முற்காலத்தில் இத்தகைய தேச சஞ்சாரம் செய்வது கடினமாயிருந்தது. வழியில் நேரும் கள்வர் பயத்தாலும், வசதிக் குறைவாலும் துன்பத்திற் கிடமாயிருந்தது. ஆனால் இந்நாளிலோ பன்னூறு மைல் தொலைவிலுள்ள ஊர்களையும் சில மணி நேரத்தில் சென்றடையச் சாதனங்கள் அமைந்துள்ளன. மிகத் தொலைவையும் சமீபமாக்கும் புகைவண்டிகளும், மோட்டார்களும் நிறைந்திருக்கின்றன. இன்னும் ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள அயல்நாடுகளையும் சில மணிக்குள் சென்று அடைதற்கு ஏதுவான வானவிமானங்களைப் பெற்றிருக்கின்றோம். இத்தகைய சாதனங்கள் இல்லாத அக்காலத்தில் பிரயாணம் செய்வது அருமையே. இப்பொழுதோ எவ்வளவு தொலைவானாலும் அஞ்சாமலும், வருந்தாமலும் தரையிற் சென்றுவரலாம். நீரிற் சென்றுவரலாம். வான

வீதிவழியே சென்றுவரலாம். இவ்வளவு வசதிகள் இருப்ப தால் மக்கள் யாவரும் தேச சஞ்சாரம் செய்துவருகின்றனர்.

ஆதலால் நாமும் முக்கியமான சில இடங்களையாவது சென்று பார்த்துவர வேண்டும். இவ்வாறின்றிக் கிணற்றுத் தவளைபோல இருத்தலாகாது. இப்பொழுதும் மேனாட்டாரிற் பலரும் கேளிக்கை நிமித்தமாகவும் கல்வியறிவு சம்பந்த மாகவும், ஆராய்ச்சி சம்பந்தமாகவும் உலகத்தையே சுற்றி வருகின்றனர்; அறிவுத்துறையில் சிறப்புற்றிருக்கின்ற னர். நாமும் கூடியவரையில் அயல்நாடுகளுக்குப் பிர யாணம் செய்து நமது அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

## 5 யுத்தத்தினால் ஏற்படும் நன்மை தீமைகள்

குறிப்பு :— முன்னுரை — யுத்தத்தால் ஏற்படும் நன்மை — தீமை — முடிவுரை.

உலகம் ஒருவரது ஆளுகையில் இல்லை. இது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால், பலபேருடைய ஆளு கைக்கு உட்பட்டிருக்கிறது. பெரும் பாகங்களை ஒருங்கே ஆட்சி செய்கின்றவர்கள் பேரரசர்கள் என்றும், தனித் தனி ஆள்பவர்கள் அரசர்கள் என்றும் அரசப் பிரதி நிதிகள் என்றும் கூறப்படுவார்கள். நாட்டாசையால் அவர் கள் தமக்குக் கிடைக்கும் நாட்டை மட்டும் ஆளச் சம்மதிப்ப தில்லை. ஏனைய நாடுகளையும் தங்கள் நாட்டோடு சேர்த்து ஆள ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர். இக் காரணம் பற்றியே ஒருவரோடு ஒருவர் போர் தொடுக்கின்றனர். இப்போர் நிகழ்ச்சியால் நாட்டுக்கு நன்மையும் உண்டு; தீமையும் உண்டு என்பது விளங்கும். முதலில் போரால் நாட்டுக்கு விளையும் நன்மையைப் பற்றிக் கூறுவோம்.

போரில் கிடைக்கும் வெற்றியால் ஒரு சிறிய நாடு பெரிய நாடாக விளங்குகிறது. சண்டை செய்வதற்காக அந்நாட்டு மக்கள் போர்த்தொழில்களைக் கற்றுக்கொள் கின்றனர். நாட்டுப் பற்றையும் அரசப் பற்றையும் குடிகள் காட்டுவதற்கு இது ஒரு சாதனமாகின்றது. போர்க்களத்தில் இறப்பவர்க்கு உலகம் அழியும்வரையிலும் புகழ் நிலைக்கின் றது. போரினால் மக்களுக்கு வீரவுணர்ச்சி எழுகிறது. போர்

ஏற்படுவதன் காரணமாகப் பல்வேறு புதுப் பொருள்களும் கருவிகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன.

அதனல் சகோதர நேய ஒருமைப்பாடு நிலவுகிறது. போர் நிமித்தம் பல நாடுகளுக்குச் செல்ல நேர்வதால், பல பாஷைகளையும் கற்றுக்கொள்ளவும், பேசவும், அவ்வந்நாட்டுப் பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. பிற நாட்டைப் பற்றியும், அந்நாட் டரசனைப் பற்றியும் அறிந்துகொள்ளவும் துணை செய்கிறது.

போரினல் எவ்வளவு நன்மைகளிருப்பினும் தீமைகளே மிகுதியாக உள்ளன. போர் ஏற்படுவதால், முன்னேற்ற மடைந்த பட்டினங்களும், நகரங்களும், கிராமங்களும், பெரிய கட்டடங்களும் அழிக்கப்படுகின்றன. பெரியோர்களும், குழந்தைகளும் துன்பத்திற்குள்ளாகின்றார்கள். வீரர்கள் போர்முனையில் மடிந்து, வீர சுவர்க்கம் புகுவதால், பெண்கள் விதவைகளாகவும், பிள்ளைகள் தந்தையரை இழந்தவர்களாகவும் இரங்குதற்குரிய நிலையை அடைகின்றனர். பலவித நச்சுக்காற்றுகளைக் கண்டுபிடித்து, யுத்த காலத்தில் பயன்படுத்துவதால் கணக்கற்ற உயிர்கள் ஒரே சமயத்தில் மடிந்தொழிகின்றன. இதனல் நோய்கள் பரவுகின்றன. எஞ்சிநின்ற மக்களும் அழிகின்றனர்.

போர்க் காலங்களில் நாட்டில் அமைதியிராது. அதனல் கைத்தொழில் முயற்சி, வியாபாரம், பயிர்த்தொழில் முதலியன தடைப்படுகின்றன. நாகரிகக் குறைவு உண்டாகிறது. அச்சமே குடிகொள்கின்றது. எல்லாப் பொருள்களும் மிகுதியாகச் செலவழிக்கப்படுவதால், நாட்டில் பஞ்சம் தலைகாட்டிவிடுகின்றது.

ஆதலால் ஒரு தலைவன் தன் நாட்டில் போர் வாராதபடி பாதுகாத்தல் வேண்டும். சமாதான முறையைக் கைக்கொள்ள வேண்டும். மன்னர்கள் யாவரும் ஒத்து நடக்க வேண்டும். போரே நடவாதிருந்தால் கல்வி, கைத்தொழில், வாணிபம், விஞ்ஞான ஆராய்ச்சி முதலியன வளர்ந்தோங்கும்.

## 6 கலாசாலைச் சஞ்சிகையும் அதன் பயனும்

குறிப்பு :—முன்னுரை—சஞ்சிகையின் பயன்—
நடத்தும்முறை —முடிவுரை.

மாணவர்கள் தங்கள் அறிவை ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் கல்வியின்மூலம் மட்டும் விருத்தி செய்து கொள்ள இயலாது. இதனால் பூரண அறிவு பெறுவதற்கு இயலாதாகையால், அவர்கள் நிறைந்த அறிவைப்பெறப் பல சஞ்சிகைகளைப் படிப்பதும், அவைகளில் தாங்கள் அறிந்தவைகளைப்பற்றி எழுதுவதுமான முறைகளைக் கைக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் அதற் கெனத் தனிச் சஞ்சிகை இருத்தல்வேண்டும். சஞ்சிகையி னால் ஏற்படும் பலனையறிந்து சிற்சில பள்ளிகளிலும், கல் லூரிகளிலும் சஞ்சிகைளை நடத்திவருகின்றனர். மேனாடுக ளில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சஞ்சிகைகள் நடத்தப் பட்டு வருகின்றன.

இத்தகைய சஞ்சிகைகளினால் பல நன்மைகள் உண் டாகின்றன. மாணவர்கள் தங்கள் மனத்தில் தோன் றும் பொருள்களைக் கட்டுரைகளாக எழுதி வெளிப்படுத்த விரும்புவார்கள்; தங்கள் பெயரையும், தங்கள் கட்டுரையை யும் அச்சில்வரக் காண்பரேல் உள்ளம் பூரிப்பர். அதற் காக வருந்தியும் பலவகைப்பட்ட பொருள்களையும் திரட்டி எழுத முன்வருவார்கள். உண்மையில் உழைப்பும் ஊக்கமும் கொண்டு முன்னேற விரும்பும் மாணவன் புதிய விஷயங் களையே எழுத முயலுவான். அதற்காகப் பல நூல்களைப் படிப்பான்; ஆராய்ச்சி செய்வான்; தானகச் சிந்தனைசெய்து புதிய கருத்துக்களைச் சஞ்சிகைக்குக் கொடுப்பான். இத னால் அவன் கல்லூரியில் கற்கும் அறிவிலும் பன்மடங்கு அறிவுபெற வழியுண்டாகிறது. பிள்ளைகள் தாம் கண்ட உண்மைகளைச் சஞ்சிகைகளில் வெளியிடுவதனால் ஏனைய பிள்ளைகளும் அவற்றைத் தெரிந்துகொள்ள வழியுண்டா கிறது.

சஞ்சிகை, எல்லா மாணவர்களின் கருத்தும் வெளிவரத் துணைசெய்கிறது. மாணவர்க்கென வெளிவரும் இது, அவர்க ளாலேயே நடத்தப்படவேண்டும். நன் மாணவரிடையே

சிலரைத் தேர்ந்தெடுத்துப் பத்திரிகை நடத்தற்குரிய அங்கத்தினர்களாக அமைத்தல் வேண்டும்; ஒவ்வொரு மாணவனையும் வாங்கும்படிச் செய்யவேண்டும். அரசியல் சம்பந்தமான கட்டுரை ஒன்றும் காணப்படலாகாது.

சஞ்சிகையின் பொருள் தலைப்பு, பல பாகங்களாகப் பிரிக்கப்படவேண்டும். தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, விஞ்ஞானம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பகுதி அமைந்திருத்தல் வேண்டும். இளமாணவர்களுக்கெனத் தனிப் பகுதியில் சிறிய கதைகளும் விநோதப் பாடல்களும் காணப்படல் வேண்டும். மாணவர்கள் எழுதிய கட்டுரைகளை முதலில் ஆசிரியர்கள் படித்துத் திருத்தம் செய்து பிறகு அச்சிடவேண்டும். சஞ்சிகை பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு மாதத்திற்கொருமுறையோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ, ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ வெளியிடல் வேண்டும்.

சஞ்சிகை நன்கு நடப்பதற்குப் பள்ளிக்கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும் ஊக்கங் காட்டுதல் வேண்டும். பெற்றோர்களும் தமது பிள்ளைகளைக் கட்டுரை எழுதும்படி தூண்டுதல் வேண்டும். மாணவர்களும் நல்ல கட்டுரை எழுத முன் வரவேண்டும். அவ்வாறு சஞ்சிகையில் கட்டுரை எழுதப் பழகிக் கொண்டால் பிற்காலத்தில் ஒரு சஞ்சிகையை நடத்தும் திறமையுண்டாகும். எப்பொருளைப் பற்றியும் தைரியமாக எழுதும் வழக்கம் ஏற்படும். ஆகவே ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு சஞ்சிகை நடத்த வேண்டும்.

## 7. பொருட்காட்சி சாலை

குறிப்பு:—முன்னுரை—தோற்றுங் காரணம்—நடத்தும் முறை—அமைப்பு—நன்மைகள்—முடிவுரை.

உலகில் இயற்கையாலும் செயற்கையாலும் புதுப் புதுப் பொருள்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஆனல், அவை ஒரு நாட்டில் மட்டும் தோன்றவில்லை. பல வகையாகத் தோன்றுகின்றன. அப்பொருள்களை மக்கள்

காண விரும்புவர். ஆனால் அவைகளை ஆங்காங்குச் சென்று காண்பது அரிது. அவை ஒருங்கே குறித்த ஓரிடத்தில் வைக்கப்பட்டிருப்பின், மக்கள் அவற்றைக் காணப் பாக்கியம் பெற்றவராவர். இவ்வாறாகப் பல்வேறு இடங்களிலும் அகப்பட்ட பொருள்களை யெல்லாம் ஓர் இடத்தில் ஒழுங்கான முறையில் மக்கள் யாவரும் காணும்படி வைப்பதே பொருட் காட்சிசாலை என்று சொல்லப்படும்.

இக் காட்சிசாலை யமைப்பதற்குரிய காரணங்கள் பல. மக்கள் புதிய பொருள்களைக் கண்டு களிக்கவும், தாம் கண்டு பிடித்தவைகளைக் காட்டிக்கொள்ளவும், வியாபார வளர்ச்சிக்குரிய விளம்பரம் செய்து கொள்ளவும் இது அமைக்கப் பெறும். இத்தகைய காட்சிசாலைகளை அமைப்பது கடினமே. இதற்கெனத் தனித்தொகுதியினர் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்குள் தலைவர், செயலாளர், வினைக்குழுவினர் முதலியவர்களை ஏற்படுத்திக்கொண்டு ஒழுங்காக இக்காட்சி சாலையை நடத்தல் வேண்டும்.

இது பரந்த விடத்தில் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் வந்து காணுதற்கான முறையில் அமைக்கப்பட வேண்டும். இதன் பெயர் நன்றாகத் தெரியும்படியாக முன் வாயிலில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்ளே இருக்கும் பல்வேறு தொழிலாளரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தில் தமது பெயர்களை எழுதி யிருக்கவேண்டும். பொருள்கள் ஒழுங்கான முறையில் அழகுற அமைக்கப்பட்டிருக்கும் இக் காட்சிசாலைகள் பல நன்மைகளைத் தருவதால் ஒவ்வொரு துறையிலும் பொருட்காட்சியை ஆங்காங்கு அமைக்கின்றார்கள். கல்விப் பொருட்காட்சி, கைத்தொழிற் பொருட்காட்சி, ஆயுதப் பொருட்காட்சி, விவசாயப் பொருட்காட்சி, மிருகக் காட்சி முதலிய பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இக்காட்சியிலிருந்து சிறந்த தொழிலாளிகட்குப் பரிசில்கள் கொடுக்கப்படுகின்றன. இவை அவர்களைத் தொழிலில் முன்னேறச் செய்கின்றன. இவ்வாறு தொழிலாளிகள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். ஆதலால ஆங்காங்குப் பொருட்காட்சி சாலைகள் ஏற்படுத்தப் படவேண்டும.

## என் வாழ்க்கையின் நோக்கம்

குறிப்பு:—முன்னுரை — எனது நோக்கம் —காரணம் — முடிவுரை.

எல்லா உயிர்களும் ஒவ்வொரு குறிக்கோளையே நாடித் தம் வாழ்வை நடத்துகின்றன. மனிதரை எடுத்துக் கொண்டால் ஒருவர் சிறந்த மருத்துவராக வேண்டுமென்று விரும்புவர். ஒருவர் ஓவியப் புலவராக விரும்புவர். விலங்குகளும் பறவைகளும் தத்தமக்கேற்ற நோக்கம் உடையனவே. இத்தகைய நோக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது அவசியமே. மக்களுக்கு, வாழ்க்கையில் ஒரு நோக்கம் இன்றேல், வாழ்வு ஒழுங்குபடாது. விழலுக்கிறைத்த நீரைப்போல அவர்களது வாழ்நாளும் உழைப்பும் வீணேயாம்.

மனிதர் கொள்ளும் நோக்கத்திற்கும், ஏனைய உயிர்கள் கொள்ளும் நோக்கத்திற்கும் வேறுபாடு உண்டு, மனிதன் தன் நோககத்தை எவ்வகையிலும் நிறைவேற்றப் பார்ப்பான். ஏனெனில் அவனுக்கு இயற்கை யறிவோடு கல்வி யறிவும் துணை செய்கிறது. மற்றவைகளோ இதனைப் பெருமையால் தம் நோக்கத்தை நிறைவேற்ற இயலாதவைகளாகின்றன.

இப்பொழுது எனது பிற்கால வாழ்க்கையின் நோக்கத்தை இங்குக் குறிப்பிடுகின்றேன். கலலூரியில் சேர்ந்து உயர்தரப் படிப்பைப் பெற என் மனம் விரும்பவில்லை. நான் பிறர் பேசும் ஆங்கிலத்தைத் தெரிந்து கொள்வதற்கும், ஆங்கிலத்தில் மறுமொழி கூறுவதற்கும், ஆங்கிலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வதற்கும் போதுமான அளவு கற்று, ஆறும் பாரப் படிப்பாகிய பள்ளி இறுதிப் படிப்போடு (S. S. L. C.) நின்றுவிடப் போகிறேன். நான் படிக்கும் உயர்நிலைப் பள்ளியில், தமிழாசிரியர் தமிழ்ச் செய்யுளையும், உரைநடையையும் நடத்தும் சிறப்பால் அம்மொழியில் எனக்குத் தனிமதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, தமிழ் மொழியில் மேலும் மேலும் அறிவைப்பெற இலக்கண இலக்கியங்களில் அறிவு முதிர்ந்த புலவர்களையடுத்து, தமிழ் மொழியைப்பயின்று, தமிழாசிரியனுக

வேண்டும் என்பது எனது நோக்கம். இக்காலத்தில் தமிழ் மொழியைக் கற்பின் தக்க மதிப்பும் ஊதியமும் கிடைப்ப தில்லையெனச் சிலர் நினைக்கலாம். தமிழ்மொழி ஒன்றையே கற்ற உயர்திரு சுவாமிநாதய்யர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்று மதிக்கப்பட வில்லையா? காலஞ் சென்ற உயர்திரு வாளர், கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் செல்வத்தில் சிறந்து விளங்கி வாழ்வு நடத்தவில்லையா? ஆகவே தமிழ் மொழியைக் கற்பதினலும், பண்டிதராவதாலும் ஊதியமும் மதிப்பும் குறையா. தமிழ்மொழியைக் கற்றதோடு அமை யாது அவரவர்கள் ஊக்கங்கொண்டு ஊதியத்தையும், சிறப் பையும் அடைய முயலவேண்டும். அதனலன்ருே வள்ளுவப் பெரியாரும், "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்ருர். ஆகவே, நான் தமிழைக் கற்றுத் தமிழாசிரியனுக விளங்கவே நோக்கங் கொண்டிருக் கிறேன்.

நமது தமிழ் மொழி மிகவும் இனிமையுடையது; அழகு செறிந்தது; சிறந்த பழைய இலக்கிய இலக்கணங்களை யுடையது; புராண இதிகாசங்களையுடையது; செய்யுள் அமைதியும் செவ்வனே அமையப் பெற்றுள்ளது. இம் மொழியில் உள்ள நீதிகளும் ஒழுக்க முறைகளும் வேறு எம் மொழியிலும் அமைந்திரா வென்றே சொல்லலாம். இத் தகைய அருமை பெருமைகளையுடைய தமிழ் மொழியை மாணவர்களுக்குப் போதிப்பதற்கே தமிழாசிரியனுக விளங்க வேண்டுமென நோக்கங் கொண்டிருக்கிறேன்.

நான் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே, கையில் பொருள் கிடைக்கும்போதெல்லாம் சிறந்த தமிழ் நூல்களை வாங்கிச் சேர்த்து வைக்கின்றேன்; சிறந்த தமிழறிஞர் சொற்பொழிவு ஆற்றும் இடங்களுக்குச்சென்று வருகிறேன்; எனது கலாசாலையில் நடக்கும் கழகங் களுக்குச் சென்று பல பொருள்களைப் பற்றிச் சொற்பொழி வாற்றி வருகின்றேன். இதனை யறிந்தே என்னை எங்கள் பள்ளிக் கழகத்தார் வினையாளனுகத் தேர்ந்தெடுத்திருக் கின்றனர். எனது நோக்கம் நிறைவேற இறைவன் இன்னருள் புரிக.

## 9. தொழிற் கல்வி

குறிப்பு :—முன்னுரை — தொழிற் கல்வி யின்னதென்பது — பயன் — முடிவுரை.

மாந்தரை விலங்கின் தன்மையினின்றும் பிரித்து மக்களாக விளங்கச் செய்வது அறிவேயாம். இவ்வறிவைப் பெறுதற்குக் கல்வியறிவு உதவி செய்கின்றது. இககல்வியறிவை ஏட்டின் மூலமாகவும், தொழிலின் மூலமாகவும் நாம் அடைகின்றோம்.

ஏட்டுக் கல்வியென்பது, புத்தகங்களின் மூலம் படித்து மன அறிவைப் பெருக்கிக் கொள்வதாகும். தொழிற் கல்வியோ, உடலை வருத்தி உழைத்து வேலை செய்வதனாற் பெறுவது. உழவு, தச்சு, நெசவு முதலிய தொழில்கள் இக் கல்வியில் அடங்கும். தொழிற் கல்வியைக் கற்போர் ஏட்டுக் கல்வியைக் கற்கவேண்டியதில்லை என்பதன்று. இவ்விரு கல்வியும் பெற்றிருத்தல் நன்மையானதே. ஆனால் ஏட்டுக் கல்வியைக் கற்றவர் தொழிற் கல்வியை வெறுக்கின்றனர்; தமக்கு இழிவென்றும் கருதுகின்றார்கள். அது பொருந்தாததாகும். கல்வியே ஒரு நாட்டில் வளர்ச்சியுறுமானால் கைத்தொழில்கள் உற்பத்தியாகா. ஆதலால், நாட்டுக்கு நன்மை கருதினால் நாட்டில் தொழிற் கல்வி பரவுதல் வேண்டும்.

ஏட்டுக் கல்வியோ ஒருவர் கீழ் அடிமையாகத் தொழில் புரிவதற்கே துணை செய்யும். தொழிற் கல்வியோ அவ்வாறன்று. ஒருவன் தன் மானத்துடன் தனக்குத் தொழில் இல்லாத காலத்திலும். தான் கற்ற தொழிலின் உதவியைக் கொண்டு பொருளைச் செய்து விற்று உயிர்வாழ ஏதுவாகும். ஏட்டுக் கல்வி மனத்துக்கே உரம் கொடுக்கும். தொழிற் கல்வியோ மனத்துக்கேயன்றி உடலுக்கும் வலிமையைத் தரும். இதனால் நல் வாழ்வுக்கு இடமுண்டாகிறது. தொழிற் கல்வி வளர்ச்சியடைய நாடு செல்வத்தில் சிறக்கும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணம் தொழில் வளர்ச்சியேயாம்.

இதனை உணர்ந்தே இப்பொழுது கலாசாலைகளில் தொழிற்கல்வி வகுப்புக்கள் (Manual Training) அமைத்து நெசவு, புத்தகக் கட்டடம் (Book-Binding)

முதலிய தொழில்களில் மாணவர்களைப் பழக்கி வருகின்றார்கள். 'கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பது தொழிற் கல்வி கற்றவர்க்கே மிகவும் பொருத்த மென்று கூறலாம். இனியேனும் மாணவர்கள் தங்கள் கல்வியறிவோடு, தொழிற் கல்வியறிவையும் பெற விரும்புவார்களாக. பெற்றோர்களும் இதன் உண்மையறிந்து தம் பிள்ளைகளை இம் முறையில் பயிற்றுவார்களாக.

## 10 அறிவுள்ள அமைச்சன்

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் வட நாட்டின் ஒரு பகுதியைப் பிரதாபன் என்றொரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் பெயருக்கேற்ப வீரப் புகழ் படைத்தவனயினும், செருக்கு, சுயநலம், சீற்றம் முதலிய தீய இயல்புகளையுடையவனாக இருந்தான். அவன் தன் கட்டளையை மீறுபவர் எவராயினும் கருணையின்றித் தண்டித்து விடுவான்; தன் மனம் போனவாறே நடப்பான்.

அத்தகைய மன்னனுக்குத் தைரிய சீலன் என்றொரு அமைச்சன் இருந்தான். அவன் அன்பு, அருள், பொறுமை முதலிய சிறந்த நல்லியல்புகளை யுடையவன். யாவரிடத்தும் இன்சொல்லே வழங்குவான்; அமைச்சுத் திறமையும் நிரம்பப் பெற்றிருந்தான். அரசன் அமைச்சனது திறமையை உணர்ந்து பட்டம் பதவிகளைக் கொடுத்து ஆதரித்து வந்தான்.

ஒரு சமயம் தைரியசீலன், அரசன் செய்ய நினைத்ததைத் தவறு எனக் கண்டிக்க நேர்ந்தது. உடனே அரசனுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. தைரியசீலன் தன் கடமையையே செய்தான் என்பதையும் கருதவில்லை. அக்கணமே தான் அதுவரை அன்பு வைத்திருந்த அமைச்சனைக் கொடும் பகைவனாகக் கருதிச் சிறை செய்து ஊருக்கு வெளியேயுள்ள ஒரு கோபுரத்தில் அடைத்துவிட்டான்.

தைரியசீலனோ அரசனியல்பை நன்குணர்ந்தவனாதலின், தனக்குற்ற அரச வாழ்வை ஆற்றங்கரையின் மரமாகவே கருதி வந்தான்; 'எச்சமயத்திலும் இந்த வாழ்வு அழிந்து விடலாம்' என வுணர்ந்து, தன் மனையாளிடம் சமயத்திற்கேற்றபடி தைரியமாக நடக்கவேண்டும் எனச் சொல்லி வைத்திருந்தான்.

இரவு நெடு நேரமாகியும், தன் கணவன் வீட்டிற்கு வராததைக் கண்ட அமைச்சன் மனைவி, அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்து, உடனே ஒரு கரும்போர்வையால் போர்த்துக்கொண்டு வெளியே புறப்பட்டாள். தெருவில் மக்கள் பேசிக்கொள்வதைக் கூர்ந்து கேட்டு ஒரு நொடியில் நடந்த விஷயத்தை அறிந்து கொண்டாள். அதன் மேல் எவருமறியாமல் ஊர்ப்புறத்தே யுள்ள அக் கோபுரத்தை யடைந்து மிக மெல்லிய குரலில் தான் வந்திருப்பதைத் தன் கணவனுக்கு உணர்த்தினாள்.

தைரியசீலன் தன் மனைவியின் குரலையறிந்து ஊக்கங் கொண்டவனாய்ப் 'பெண்ணே! கலங்காமல் நான் சொல்கிறபடி செய். அவ்வாறு செய்து முடித்தாயானால் நான் விடுதலை பெறுவதுடன் மீண்டும் என் பழைய சிறப்புக்களையும் பெற முடியும்' என்று கூறி, 'நீ விரைவில் வீடு சென்று ஒரு வண்டும், தேன் துளியும், வலிமையுள்ள மெல்லிய பட்டு நூல் அறுபது கஜமும், சற்றுப் பெரிதான நூற் கயிற்றில் அறுபது கஜமும், என்னைத் தாங்கக் கூடிய வன்மையுள்ள பருமனான கயிற்றில் அறுபது கஜமும் கொண்டுவா. ஒன்றையும் மறந்து விடாதே! போய் வா,' என்று சொன்னான். அமைச்சன் மனைவிக்குத் தன் கணவனது கட்டளை விந்தையாகத் தோன்றிற்று. சிறையிலிருந்து விடுதலைக்கு வழி தேடாமல் விளையாட்டுக்கு வழி செய்கிறாரா என்று நினைத்து 'இவை யெல்லாம் எதற்கு?' என்று கேட்டாள். அமைச்சன் 'அதன் விவரங்களைப் பிறகு சொல்கிறேன். இப்பொழுது நான் இங்கும் நீ வெளியிலுமாக இருக்கும் இந்த நிலையில் இவ் விவரங்களை யெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. மேலும், அதனால் என் எண்ணம் கைகூடாமற் போனாலும் போகும். ஆதலால் விரைந்து சென்று நான் சொன்னபடி செய்' என்று கூறினான். அப் பெண்ணணங்கும் மறு பேச்சின்றி வீட்டை நோக்கி விரைந்து நடந்தாள்.

ஒரு மணி நேரத்திற்குள் அமைச்சன் சொல்லிய பொருள்களைச் சேகரித்துக் கொண்டு, மீட்டும் அவள் அக் கோபுரத்தை அடைந்து தன் வரவைக் குறிப்பாக வுணர்த்தி

ளுள். உடனே அமைச்சன், 'பெண்ணே! வண்டின் நடு வயிற்றில் பட்டு நூலின் ஒரு நுனியைக் கட்டு; பிறகு தேன் துளியை அதன் நாசியில் தேய்த்து அதை நான் இருக்கும் திசையை நோக்கி விட்டுவிடு; அது தேனின் மணத்தை நுகர்ந்துகொண்டு, தன்னிடமே அது இருக்கிறது என்பதை அறியாமல் உச்சியில் எங்கோ ஓரிடத்திலுள்ள தேன் கூட்டை யடையும் நோக்கத்துடன் மேலே பறந்து வரும், பட்டு நூலின் மற்றொரு நுனியை நீ பிடித்துக்கொள். வண்டு என்னருகே வந்ததும் நான் அதைப் பிடித்துக் கொள்வேன். பட்டு நூல் சுற்று முடியும் சமயத்தில் உன் கையிலுள்ள நுனியில் மெல்லிய நூற் கயிற்றைக் கட்டிவிடு. அதையும் சிறிது சிறிதாக விட்டு வந்து அதன் மற்றொரு நுனியில் சற்றுப் பருமனான நூலைக் கட்டிவிடு. பிறகு மிகப் பருமனான கயிற்றைக கட்டிவிடு' என்று விளக்கமாக அவள் செய்ய வேண்டியவற்றைக் கூறினான். அவளும் அப்படியே செய்தாள்.

அமைச்சன் வண்டைப் பிடித்துப் பட்டு நூலைக் கையிற் கொண்டான். அதன்பின் அதை மெல்ல இழுத்து நூற் கயிற்றைப் பிடித்தான். இப்படியே செய்து முடிவில் பருமனான கயிற்றைக் கையிற் கொண்டதும் பலகணியின் இரும்புக் கம்பியில் அதை இறுகக் கட்டிக் கயிற்றின் வழி யாகக் கீழே மெதுவாக இறங்கி மனைவியை வந்தடைந்து தழுவிக்கொண்டான். கணவன் விடுதலை பெற்றதற்கு அவளும் மிகவும் மகிழ்ச்சி யடைந்தாள். அதன்மேல் அமைச்சன், 'இப்பொழுது என் வேண்டுகோளின் காரணம் உனக்கு விளங்குகிறதல்லவா?' என்று கேட்டான். அவ ளும் 'விளங்கியது' எனத் தலையசைத்தாள். அதன்மேல் இருவரும் தம் வீட்டை யடைந்து சில காலம் எவரும் அறி யாமல் வாழ்ந்து வந்தனர்.

அரசனுக்கு நாளடைவில் அமைச்சன் மேல் ஏற்பட்ட சினம் தணிந்தது. தான் ஆத்திரப்பட்டு அவனைச் சிறையி லடைத்து உணவு கொடுக்காமல் கொன்றது பெருங் குற்றம் எனக் கருதலாயினன்; 'தைரியசீலன் போல் அறிவிற் சிறந்த அமைச்சன் இனிக் கிடைப்பானோ?' என்றெண்ணி வருந்தினான்.

அரசனது உள்ள நிலையை எப்படியோ அறிந்த அமைச்சன், தைரியமாக அரண்மனை சென்று அரசன் முன் நின்றான். தன் கொடுமையால் இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட அமைச்சன் உயிருடன் தன் முன் நிற்பதைக் கண்ட அரசன், எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டு அவனை வரவேற்று உபசரித்து முன்போல் அன்பு பாராட்டினன். தைரியசீலன் முன்போல அமைச்சனானன்.

ஒருநாள் அரசன் அமைச்சனை நோக்கி 'தப்பமுடியாத அக்கோபுர உச்சியினின்றும் எப்படித் தப்பி வந்தீர்!' எனக் கேட்டான். 'கணந்தோறும் குணம் மாறும் இயல்புடைய இவனிடம் உண்மையைச் சொல்வதும் தவறு' எனக்கருதிய அமைச்சன், பிறர்க்கு ஏதும் தீங்கு விளையாத ஒரு பொய்யைச் சொல்வதில் குற்றமில்லை என்று எண்ணி, 'கோபுரத்து உச்சியில் பட்டினியுடன் குற்றுயிராய்க் கிடந்த என்னை, ஒரு கழுகு எடுத்து வந்து கீழே விட்டு விட்டது' எனக் கூறினன். அரசனும் இதை உண்மையென்றெண்ணி அமைச்சனுக்குக் கடவுள் அருள் துணை இருக்கிறது எனக் கருதி அவனிடம் பயபக்தியுடன் நடந்து வரலாயினன்.

## 11 மானமே உயிர் என மதித்த மன்னவன்

### காட்சி 1

இடம் —சிறைக்களம்.

பாத்திரங்கள் —சேரமான் கணைக்காலிரும்பொறை, காவலர் இருவர்.

**சேரமான்:**—(தனக்குள்) என்ன கொடுமை இது! நானும் ஒரு வீரனு? சென்ற தடவை நிகழ்ந்த போரில் ஏற்பட்ட இழிவைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்று கருதினேன். இராப்பகலாக மக்களை வருத்தினேன். ஆயுதங்களைச் செய்து குவித்தேன். படை வீரரைப் பெருக்கினேன். போர்ப் பயிற்சி அளித்தேன். ஒரு ஆண்டு முழுதும் இதற்காக என்ன பாடுபட்டேன்! முடிவு என்ன ஆயிற்று? நாட்டில் தொழில்கள் நசித்தன; செல்வம் குறைந்தது; மக்கள் பட்டினியால் வாடினர். வீரர் பலர் மாண்டனர். நானும் சிறைப்பட்டேன். சேரர் குடிக்கு என்றும் மாளாப் பழியை தேடி வைத்தேன். அவமானத்தைப்' போக்கிக்கொள்ளப் போர் என்னும்

பேயின் உதவியை நாடினேன்; அப்பேய் இம்முறையும் கை விட்டது. நான் உலகில் உயிருடன் வாழ்வதற்கும் தகுதி யுடையவனோ? இல்லை. இனி உயிருடன் இருப்பது பூமிக்கே பாரம்.

**காவலன் முதல்வன்** :— தம்பி! அரசர்கள் கதியைப் பார்த்தாயா? நேற்று நிதிமிக்க அரசர், இன்று கதியற்ற கைதி.

**காவலன் இரண்டாமவன்** :— நம் அரசருடன் சண்டைக்கு வந்தால் பிழைக்கமுடியுமா? இதைத் தெரிந்துகொள்ளாத இவர் அரசரா யிருந்துதான் என்ன செய்யப்போகிறார்? மேலும் தமிழ் நாட்டரசர்களுக்குள்ளேயே பகைமையை மூட்டி வளர்க்கும் இவரைப் போன்றவர்களால் நாட்டுக்கே பெருந்தீங்கு விளையும்.

**காவலன் 1** :—ஏது பெரிய அரசியல் வாதிபோல் பேசு கிறாயே! உனக்கென்னப்பா தெரியும் அதைப்பற்றி?

**காவலன் 2** :— என்ன தெரிய வேண்டும்? இவரால் உயிரிழந்தவர் எத்தனை பேர்! கணவனை யிழந்த பெண்கள் எப்படிக் கதறுவார்களோ? வீரப் புதல்வரை இழந்து வருந் தும் பெற்றோர் எத்தனை பேர்! இதை யெல்லாம் இவர் யோசித்தாரா? ஒருமுறை வந்து தோற்ற பிறகாவது தெரிந்துகொள்ள வேண்டாமா?

**காவலன் 1** :— நீ சொல்வது உண்மைதான். மெல்லப் பேசு, காதில் விழப்போகிறது.

**காவலன் 2** :— விழுந்தாலென்ன? தானாக அறியாத உண்மையை, யாராவது சொல்லித்தானே தெரிந்து கொள்ள வேண்டும்?

**காவலன் 1** :—ஆனால் பாவமாயிருக்கிறது. மிகவும் மான முடையவரா யிருக்கிறார். சிறைப்பட்டது முதல் உணவைக் கையாலும் தொடவில்லை; இப்படிப் பட்டினி கிடந்து உயிரை விடுகிறார்.

**சேரமான்** :—(தனக்குள்) உயிரை விடுவது சரியானதா? இல்லை. இறைவனருளிய உயிரை விடுவது முறையாகுமா? அது தற்கொலையல்லவா? மேலும் அதனால் நம் இழிவு நீங்கி

விடுமா? நீங்காது. எதற்கும் கலங்காத என் நெஞ்சுறுதி எங்கே போயிற்று? போர் என்றால் வெற்றியும் தோல்வியும் இயல்புதானே! எவ்வளவு இடையூறுகள் அடுக்கி வரினும் இடுக்கண்படாது முயன்று வெற்றி காண்பதன்றோ வீரம்!

சென்ற தடவை சிறைப்பட்டபொழுது பொய்கையாரின் உதவியால் விடுதலை பெற்றதனால்தானே இம்முறையும் முயற்சிசெய்ய முடிந்தது! ஆகவே, எவ்விதமேனும் விடுதலைபெற்று மற்றொரு முறையும் முயன்றால் என்ன? ஆ! நாவறட்சி ஏற்படுகிறது. உணவில்லாமலாவது சில நாள் உயிருடன் இருக்கலாம். தண்ணீரில்லாமல் உயிர் வாழமுடியாது. ஆகவே, நீர் வேட்கையைத் தணித்துக் கொள்வதே நல்லது. (காவலரை நோக்கி) ஏய்! காவல! தாகமாயிருக்கிறது. சிறிது தண்ணீர் கொண்டுவா!

**காவலன் 1** :—பாவம் இப்பொழுதுதான் வாய்திறந்து பேசினர். போய்த் தண்ணீர் கொண்டுவா.

**காவலன் 2** :—இது என்ன பிரமாதம்! தாகம் தாங்காமல் தண்ணீர் கேட்கிறார். பசி தாங்காமல் இனி உணவும் கேட்பார். அரசராயிருந்தாலும் மனிதர்தானே! ஆனால் இந்த அரசர்களிடம் — நமது அரசரைத்தவிர — மனித இயல்பு மட்டும் இருப்பதில்லை.

**காவலன் 1** :—ஏய்! என்னடா பிரசங்கம் செய்கிறாய்! அவர் தாகத்துடன் துடிக்கிறார். நீ அதைக் கவனியாமல் பேசிக்கொண்டிருக்கிறாயே! இதுதான் மனித இயல்போ?

**காவலன் 2** :—நீ சும்மா இரு அப்பா! தாகமே தாங்காமல் தண்ணீர் கேட்கும் நிலையிலும் என்ன மிடுக்கு? 'ஏய்! காவல! தண்ணீர் கொண்டுவா' என்ன அதிகாரம்! இவர் வைத்த ஆளோ?

**சேரமான்** :—காவலர்களே! நாம் கேட்பது காதில் விழவில்லையா?

**காவலன் 2** :—எல்லாம் கேட்கிறது. இப்படி அவசரப்பட்டால் முடியுமா? அப்படி உடனே வேண்டுமென்றால் வரும்பொழுதே ஒரு வேலையாளையும் கூட அழைத்து வருகிறதுதானே. (தண்ணீர் கொணரச் செல்லுதல்)

**சேரமான் :—** ஆஹா! என்ன உலகம் இது! நான் சிறைப்பட்டதால் இக் காவலனுமல்லவோ என்னை இவ்வளவு அலட்சியமாக நடத்துகின்றான். இவன் சுடுசொல் என் உள்ளத்தை எரிக்கின்றதே. இனியும் நான் உயிர்வாழவேண்டுமா? குழவியாக இறந்துவிட்டாலும், ஊன் பிண்டமாகத் தோன்றினாலும், வாளால் பிளந்து வீரமரணத்தினை கொடுக்கும் சேரர்குடியில் பிறந்த நான் சிறைப்பட்டு, விலங்கிடப்பட்ட நாய்போல அன்பும் மரியாதையும் இல்லாத பகைவர் கையால் உணவினைப் பெற்று வாழும் நிலையை விரும்புவதா? சீ! இல்லை. இனி ஒருகணமும் இவ்வாழ்வை விரும்பேன்.

(காவலன் தண்ணீர் கொணர்ந்து தருதல். சேரமான் அதனை வாங்கிக் கீழே வீசி எறிதல்)

கடவுளே! வழிவழியாக வாழ்ந்த சேரர்குடிக்குத்தோல்வியைத் தேடித் தந்தவனயினும் மானத்தை இழந்து வாழும் இழிவைத் தேடித்தர விரும்பேன். சேரநாடு சிறப்புற்றோங்குக. (கீழே வீழ்ந்து உயிர்விடுதல்.)

**காவலன் 2 :—** ஐயையோ! உயிரை விட்டுவிட்டாரே. நான் கொடுத்த தண்ணீரையும் குடிக்கவில்லையே.

**காவலன் 1 :—** அடபாவி! இது உன் அகம்பாவத்தால் வந்தவினை; இரு; நான் அரசரிடம் சென்று சொல்லி வருகிறேன்.

(காட்சி முடிவு)

## 12 பள்ளிக்கூடத்தின் கேளிக்கைப் பிரயாணம்

குறிப்பு :—முன்னுரை—பிரயாணம்—இன்னதென்பது—நோக்கம்—முடிவுரை.

மாணவர்கள் தங்கள் காலங்களை யெல்லாம் கல்வி கற்பதிலேயே கழிப்பதனல் அவர்கள் மனம் குழம்பி மூளை சிந்தனையில் ஆழ்கின்றது. இதனல் பிள்ளைகளுக்கு கல்வியில் ஊக்கம் குறைகின்றது. அவர்கள் எப்பொழுதும் இன்ப வாழ்க்கையையே விரும்பும் மனப்பான்மை யுடையவர்கள். அவர்களுக்கு உற்சாகத்தை யூட்ட வேண்டுமானல், பள்ளிச் சாலைகளில் ஆண்டுக்கு ஒரு முறையோ, இரு முறையோ கேளிக்கைப் பிரயாணம் செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.

இப் பிரயாணத்தின் நன்மையை உணர்ந்த பாடசாலை அதிகாரிகள், இத்தகைய பிரயாணங்களுக்கு ஏற்பாடு செய்கின்றனர்.

கேளிக்கை என்பது மகிழ்ச்சி, உற்சாகம் என்று பொருள்படும். ஆகவே, கேளிக்கைப் பிரயாணம் என்பது உற்சாகத்தைக் கொடுக்கும் பிரயாணம் எனப் பொருளாகும். பள்ளிச்சாலையில் மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் பழகுதல் உற்சாகத்தைக் கொடுக்குமேனும், அவை இப்பிரயாணத்தைப் போன்ற உற்சாகம் கொடுப்பதில்லை. ஏனெனில் பாடசாலைகளில் சில ஒழுங்குகளுக்குக் கட்டுப் பட்டிருத்தல் வேண்டும். ஆனல், பிரயாணத்திலோ அத்தகைய நியதி யில்லை. மாணவர்கள் சிறிது சுதந்திரம் பெற்றவர்களாகவே விளங்குவார்கள்; தமது விருப்பம் போல் ஆடிப்பாடி மகிழ்வர்.

இதன் முக்கிய நோக்கங்கள்: பள்ளிக் கூடத்தில் படிக்கும் பாடங்கள் ஏட்டுப் படிப்பேயாகும். ஒருவன் திருமலை நாயக்கர் மஹாலைப் பற்றிப் படிக்கிறுன் என்று வைத்துக் கொள்வோம். அதனல், அவனுக்கு அம் மஹாலைப் பற்றி அவ்வளவு பிரியம் ஏற்படாது. அதனையே அவன் நேரில் காண்பானுைல், அவனுக்கு மேலும் உற்சாகம் உண்டாகும்; அங்குள்ள சிறப்பானவைகளை என்றும் மறவான். இது போன்ற காட்சி, அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யும். இப் பிரயாணமானது, ஒரு நாட்டின் இயற்கைக் காட்சிகளைக் காணத் துணை செய்கிறது. இதனுல் அந்நாட்டு மக்களது நாகரிக நிலையை யறியலாம். ஏட்டில் கற்றவை நன்கு விளங்கும்; கற்றவைகளில் நம்பிக்கையுண்டாகும்; அறிவு விசாலமாகும்; ஒரு நாட்டின் உயர்வு தாழ்வுகளை அறிந்துகொள்ள இயலும்; நம்மிடம் தவறிருப்பினும் பிறரைப் பார்த்துத் திருத்திக் கொள்ளலாகும்.

இன்னும் இத்தகைய நன்மைகள் பல. இச் சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் யாவரும் கலந்துகொள்ளல் வேண்டும். பெற்றோர்கள் தடை செய்யலாகாது. பிள்ளைகள் தாங்கள் செல்லும் இடங்கள்தோறும் காணப்படும் அதிசயங்களையும் சிறப்புக்களையும் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். அதிசயமான பொருள்கள் கிடைப்பின் அவற்றை வாங்கிக்

கொண்டுவந்து பெற்றோர்களுக்குக் கொடுக்க வேண்டும். தமது பள்ளிக்கூடத்திலுள்ள பொருட் காட்சி நிலையத்திலும் வைத்தல் நலம்,

## 13 அச்சு இயந்திரங்களால் ஏற்பட்டுள்ள நன்மைகள்

குறிப்பு:— முன்னுரை — முற்காலம் — தற்காலம் — பயன் — முடிவு.

புதுமை காணும் விருப்புடன் இடைவிடாது உழைக்கும் பெரியோர்களுடைய ஆராய்ச்சித் திறமையால் நாம் அடைந்துள்ள நன்மைகளுக்கு அளவே யில்லை. முன்னாட்களில் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செய்தியனுப்ப வேண்டுமாயின். பல இடையூறுகள் இருந்தன. அடுத்துள்ள ஊர்களுக்குச் சென்று வருவதாயிருந்தாலும் இடையே இன்னல்கள் பல. இப்பொழுதோ, புதியனவாய் அமைந்த போக்குவரவுச் சாதனங்களால் அத்தகைய செயல்களை எல்லாம் மிக எளிதாகச் செய்து முடித்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இவ்வாறு அறிஞர்களால் உண்டான பலவித நன்மைகளில் அச்சினால் ஏற்பட்டுள்ள நன்மைகளைக் கவனிப்போம்.

நமது முன்னோர்கள் நம் தமிழ் நாட்டில் பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதியும் படித்தும் வந்தார்கள். இக்காலத்திலோ அச்சடிக்கும் விதம் கண்டு பிடிக்கப் பட்டு, ஒரு விதத் தொந்தரவும் இல்லாது பல நூல்களை ஆயிரக் கணக்காக அச்சடித்து வெளியிடுகின்றனர்.

இவ்வகை அச்சானது, சீனா, இந்தியா முதலிய இடங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும், அச்சுக்களைக் கண்டுபிடித்த பெருமை ஜெர்மானியர்களுக்கே யுரியது. ஜான் கூடன்பர்க் என்ற ஜெர்மானியர் பல ஆண்டுகள் இடைவிடாது உழைத்ததன் பயனாக இவ்வரிய தொழிலைக் கண்டு பிடித்தார். அதன் பிறகு வில்லியம் காக்ஸ்டன் என்னும் பெரியார் 1475-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் அச்சுத் தொழிலைத் தொடங்கினார்.

சில காலத்தில் செப்புத் தகட்டில் விஷயங்களை செதுக்கி அச்சடித்து வந்தனர். இதனைச் செப்புத் தகட்டு அச்சுப்பதிவு (Copper Plate Printing) என்பர். மற்றொரு

முறையாகிய லீதோகிராப்பு மூலமாகவும் அச்சிட்டுவந்தனர். அதாவது விஷயத்தைக் கல்லில் பதியச் செய்து, அதினின்றும் பல படிகளை அச்சிட்டு வந்தனர். மூன்றாவதாக, இப்போது எழுத்துக்களை ஈயத்தில் செய்து, அவற்றை அச்சுக் கோத்து அச்சடித்து வருகின்றனர். இவ்வெழுத்துக்களைக் கையால் அடுக்கிப் பிறகு ஒன்று சேர்த்து அச்சிட்டு வருகின்றனர். இதனால் காலதாமதமாகின்றது என்று அறிந்து, இப்பொழுது மின்சாரத்தின் துணைகொண்டு இயந்திரமே எழுத்துக்களை அடுக்கி, அச்சடிக்குமுறை கண்டு பிடித்துள்ளனர். இம்முறை கையாளப்படுதற்கு ரோடரி (Rotary) என்னும் இயந்திரம் துணை செய்கிறது. இவ்வியந்திரம் மணிக்கு 20,000 பதிவுகளைச் செய்கிறது. இதன் உபயோகத்தை என்னென்பது ?

இத்தகைய அச்சு இயந்திரத்தால் ஏற்படும் நன்மைகள் மிகவும் பல. அச்சியந்திரம் ஒரே சந்தர்ப்பத்தில் பல நூல்கள் வெளிவரக் காரணமாகின்றது. ஒரே நூலில் பல பிரதிகள் எடுக்கவும் பயன்படுகின்றது. இதனால் குறைந்த விலைக்குச் சிறந்த நூல்கள் கிடைக்கின்றன. இதன் காரணமாகக் கல்வியறிவு ஓங்குகிறது. பல பத்திரிகைகள் வெளிவருவதற்கு ஆதாரமாயிருக்கின்றது. விளம்பரம் செய்ய உதவுகின்றது. இவ்விளம்பரத்தால் கைத் தொழிலும், வாணிபமும் பெருகுகின்றன. சுருக்கமாகக் கூறின், ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் நாகரிகத்திற்கும் அச்சு இயந்திரம் பெரிதும் துணை செய்கிறது என்று சொல்லலாம்.

இத்தகைய உலக வுபகாரமாகிய அச்சுத் தொழிலைக் கண்டுபிடித்த பெரியார்களுக்கு மக்கள் பெரிதும் கடமைப் பட்டவர்களாவர்.

## 14 கவியும் கவிஞரும்

அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய பல வுறுப்புக்களை யுடைய கவிகள் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு வகையினவாகி, அவற்றிலொவ்வொன்றும் துறை, தாழிசை, விருத்தம் என மூன்று வகையினதாகிப் பல்வேறு பெயர் கொண்டு, ஒருவித ஓசைக் கட்டுப்பாடு பெற்று

நிகழும். அது கவி, செய்யுள், பா, பாட்டு, தூக்கு, தொடர்பு எனப் பல காரணக் குறிகளையுடையது. இயற்கை யறிவும் நூலறிவும் பெற்ற புலவர்கள் தங்கள் உள்ளத்தில் தோன்றிய அரிய பெரிய விஷயங்களை உலகம் கண்டுகளிக்குமாறும், பின்பற்றி உய்யுமாறும் கவிகளாகச் செய்தமைத்தார்கள்; உரைநடையாக எழுதி வைப்பின், அதற்கு அவ்வளவாகப் பிறர்மனத்தைக் கவரும் ஆற்றல் இல்லை என்பதாலும், எளிதில் நினைவில் வைக்குமாறு மனப்பாடம் செய்ய இயலாது என்பதாலும், படிப்போர் மனத்தைக் கவரத் தக்க இனிமை வாய்ந்த ஓசையுடன் சொற்சுவை, பொருட்சுவைகளும் அமைய அழகுணர்ச்சியுடன் ஆழமுடையனவாகச் சுருங்கிய வடிவில் கவிகளாக இயற்றினார்கள்.

பல வகை யுறுப்புக்களால் இயன்ற நம் உடல், உயிர்க்கிடனாதல் போலப் பலவகைச் சொற்களாலமைந்த செய்யுள் பொருட்கிடனாகி விளங்கும். ஆகவே, பொருட் சுவையற்ற கவியானது உயிரற்ற உடல் போன்றதாகும். இதனைற்றான்,

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லால் பொருட்கிடனாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்றார் ஆசிரியர். கவிஞர் தாம் குறித்த பொருள் முழுதும் நன்கு வெளிப்படுமாறு செய்வதே கவியெனப்படும். குறித்த பொருளை நன்கு விளக்குதலாவது, ஒரு கவியின் பொருள், வீரம், உவகை, நகை முதலியவற்றுள் யாதானுமொன்றைப் பற்றியதாயின் அக்கவியைக் கேட்டுப் பொருளறிந்தவுடன், கேட்டார்க்கு அவ்வகையில் மெய்ப்பாடு தோன்றலேயாம். உத்தமப் புலவர்கள் செய்த நூல்களிலிருந்து சோக ரசமுள்ள கவிகளைக் கேட்டறிந்தவுடன் கண்ணீர் விட்டு மனங்குழைதலும், வீரம், உவகை, நகை முதலியவும் அவ்வாறே கேட்பார்க்கு மெய்ப்பாட்டில் நன்கு தோன்றுதலும் பலரிடம் நேரில் காண்கின்றோம். பெரிய புராணம் முதலியவற்றிலுள்ள பத்திச்சுவை கனிந்த பாடல்களைக்கேட்டபோது, கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய நிற்ப

வரை யாண்டும் காண்கின்றோம். இதனை, 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை மகாவித்துவான் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் கூறும் வாக்காலும் அறியலாம். இத்தகைய தோற்றந்தான் குறித்த பொருள் நன்கு தோன்ற லென்பதாம்.

நாவிற்புக்க நல்லுணவானது, நாவிற்கு இனிமையும் உடற்குப் பலமுந் தருவதுபோல, காதிற்புக்க நற்கவியும் காதிற்கு இன்பமும், மனத்திற்கு வலிமையும் தரவேண்டும். பரிசனவேதி, இரும்பின் இயற்கை இயல்பை மாற்றி, அதை மாற்றுயர்ந்த பசும்பொன்னுக்குதல் போல, நற்கவியும், மனத்தின் இயற்கையாகிப் பொறிவழிச் செல்லும் புல்லொழுக்கத்தை மாற்றி, ஆன்றோர் கொண்ட நல்லொழுக்கத்திற் சேர்க்க வேண்டும். காட்சிப் பொருள்கள் யாவும் பிரதிபலிக்கும் கண்ணுடிபோல, மனக்கண்ணுற் காணும் உலகியல் ஒழுக்கங்களனைத்தும் பிரதிபலிக்கும் பெற்றி வாய்ந்து நிற்பதே கவியாம். கவிதாசக்தியும் நூலறிவும் வாய்ந்தவர்களிடம் உள்ளடங்கா மகிழ்ச்சியாலும், கொதிப்பாலும் பிறவற்ருலும் கவி தானுகவே வெளிப்படும். இங்ஙனம் வெளிப்படுவதே, கவிதாசக்தியாம். இந்தச் சக்தியானது ஒருவனுக்கு இயற்கையாகவே அமைந்திருக்க வேண்டும். அங்ஙனம் அமையப் பெற்றவனே சிறந்த கவிஞனுவான். அவன் கவியே உலகைத் தன்வயப்படுத்தி மகிழ்விக்கும். இயற்கையமைப்பாகிய கவிதாசக்தி யில்லாதவர் காரிகை முதலிய நூல்களைப் படித்து அந்நூல்களிற் கூறப்பட்ட விதிகளைப் பொருத்தி முயன்று கவி பாடுவாராயின், அக்கவி இலக்கண விதி வழுவாதது ஆகுமல்லாது, மெய்ப்பாடு தோன்றச் செய்து உலகைத் தன் வயமாக்கும் சிறப்பைப் பெருதென்பதாம்; ஆகவே, உலகத்தார் அதனை மதியாரென்பதும் துணிபாம்.

கவிதாசக்தி நிரம்பப் பெற்றவர்கள், காரிகை முதலிய நூல்களை முறையாகக் கல்லாதவராயினும் அவர்கள் கூறுங் கவிகள், இலக்கண விதிக்கு மாறுபடாவண்ணம், சீர் தளை, எதுகை, மோனை முதலிய எல்லா நலங்களும் தாமாகவே அமையப்பெறும். கவிதா சக்தி யியற்கையிற் பெருதவர், இலக்கண நூல்களைப் படித்துச் செய்யுள்விதி தெரிந்து, அதன்படி கவிபாடத் தொடங்கி, ஒரு சொல்லோடு பிறி

தொரு சொல்லைச் சேர்க்குந்தோறும், இலக்கணவிதியைப் புணர்த்திப்பார்த்துப் பாடலை முடிக்குமுன் அவர் படும் பாடு பெரிதாகும்.

"காரிகை கற்றுக் கவிசொலு முன்னே,
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று."

என்பதும் இக் கருத்தையே யுடையதாகும். இயற்கை யாகிய சக்தி முதற்கருவியும், இலக்கிய இலக்கண உணர்ச்சி துணைக் கருவியுமாகுமென்று கொள்ளவேண்டும்.

இக்காலத்தும் இலக்கிய, இலக்கண வல்லுநரான சில பண்டிதர்கள் கவிபாடுந் திறம் பெறாமையும், அவற்றின் படிப்பு நிரம்பாத சிலர் கவிபாடுந் திறமை மிகப் பெற்றிருத் தலும் பிரத்தியட்சமேயாம். ஆகவே, ஒருவர் எத்தனை நூல் களை எழுத்தெண்ணிக் கற்பினும் கவிதாசக்தி இயற்கையிற் பெற்றாலன்றி, நற் கவிபாடும் நற் கவிஞராகாரென்பது எவ ரும் ஒப்பமுடிந்த தொன்றாம். நல்லுணர்ச்சியும் கவிதா சக்தியும் வாய்ந்தவர்களே உத்தமக் கவிஞர்களாவார்கள்.

உத்தமக் கவியின் இயல்பினை விளக்க வந்த கம்ப நாடர் எனுங் கவிச் சக்கரவர்த்தியார்,

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருடந்து, புலத்திற்றாகி,
அவியகத் துறைக டாங்கி,
யைந்திணை நெறிய ளாவி,
சவியுறத் தெளிந்து, தண்ணென்
றொழுக்கமுந் தழுவி, சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.

எனக் கூறியுள்ளார். இக் கவியில் சான்றோர் கவிக்குக் கூறும் பொருளைமட்டும் அடியில் காட்டுவாம்.

சான்றோர்கவிக்குச் சிலேடைப் பொருள் வருமாறு:— புவியினுக்கு அணியாய்—புவியிலுள்ளவர்களுக்கு அலங்கா ரமாகி, ஆன்றபொருள் தந்து — அமைந்த சதுர்விதப் புரு

ஷார்த்தங்களையு மளித்து, புலத்திற்றாகி — அறிவினதாகி, அவி அகத் துறைகள் தாங்கி—தேவருணவினை யொத்த அகப்பொருட்டுறைகளைக் கொண்டு. ஐந்திணை நெறி அளாவி — ஐவகை நிலத்தின் மார்க்கத்தினைக் கலந்து, சவிஉறத்தெளிந்து—(மனம்) ஒளிபெறத் தெளிந்து, தண் என்று—தண்ணளிபூண்டு, ஒழுக்கமும் தழுவி — அவரவர் வாழ்க்கை நிலைகட்கேற்ற ஒழுக்கமுந் தழுவி என்பதாகும்.

இத்தகைய உத்தமக் கவிஞரியற்றிய நற்கவிகளாலே உலகில் எல்லா அறங்களும் நிலைபெற்றுள்ளனவாகும். செஞ்சொற்களின் செறிவும், இனிய ஓசைப் பொலிவும். உலக மொப்புக்கொள்ளத் தக்க செம்பொருள் நிறைவும் கொண்டுள்ள கவிகள், பிறருள்ளத்தைக் கவரும் சக்தி பெற்றிருத்தலாற்றான் அவற்றை மனப்பாடம் செய்வது சுலபமாகின்றது. மனப்பாடம் செய்தலில் வருத்தத்தை யுண்டாக்கும் கவி எது வாயினும், அது கவிதாசக்தியிற் றோன்றிய தன்றென்பது நிச்சயம். நிகண்டு முதலிய நூல்களிலுள்ள கவிகளை மனப்பாடஞ் செய்யுங்கால், அக்கவிகள் மனத்தில் தங்குவதில்லை. மிகவருந்திப் பன்முறை படித்து, நாத் தழும்பு படுமாறு பயின்று. மனங் கொள்ள நேரிடுகின்றது. இதன் காரணம் யாதெனில், அக் கவிகளில் கவிதா சக்தி அமைவதற்கு இடமில்லாமையே யாகும். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கம்ப ராமாயணம், ஆகியவற்றிலுள்ள கவிகளையும் மற்றும் பல தனிக் கவிகளையும் மனப்பாடம் செய்யத் தொடங்கினால். வெகு சுலபத்தில் பாடமாகின்றமைக்குக் காரணம், அவை கவிதாசக்தி மிகுதியா லியற்றப்பட்டமையேயாம், "இதனைற்றான் பண்டு தோன்றியனவும் இன்று தோன்றுகின்றனவுமான நூல்களும், தனிக் கவிகளில் ஒரு சிலவும் யாராலும் பாராட்டப் பெறுதலும், ஒரு சில அங்ஙனம் பாராட்டப்படாது போதலும் அறியத் தகும்.

ஆதலின் கவிதாசக்தி இயல்பாக அமைந்தவர்க்கே கவி இயற்றுதல் எளிது. அவர்களே உண்மைக் கவிஞர்.

## 15 சங்கங்கள்

நாகரிகம் வளர வளர ஊர்கள்தோறும் சங்கங்களும் சொற்பொழிவுகளும் ஏற்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு

முன் பல சங்கங்கள் தோன்றின. இவற்றுள் மாதக் கணக்கில் மறைந்தன சில. சில ஆண்டுகள்வரை உயிர் வாழ்ந்தவை பல, இங்ஙனம் இவை தோன்றி மறைவதற்குக் காரணம். இவற்றை அமைப்பவர்கள் தூய நோக்கும் தன்னலமற்ற உழைப்பும் கொள்ளாமையே யாகும். தூய மனத்துடன் அமைக்கப் பெறுபவை முயற்சி நலத்துக்கேற்ப விளக்கமுறுகின்றன. இங்ஙனம் விளக்கமுறும் சங்கங்களும் அவற்றை நடத்துவோரின் மதி, வலிமை முதலியவற்றால் நாட்டுக்குச் சிறந்த நலன் விளைப்பனவாகும்.

சங்கம் கூட்டவேண்டுமென்று நினைப்பதும், சந்தைக் கூட்டம் போலப் பலர் கூடுவதும், வரம்பின்றி மனம்போனவாறு பேசுவதும் வீண் செய்கையேயன்றிப் பிறிதில்லை. ஒரு சபையை ஏற்படுத்தும் முன்னர் 'இச் சபையை எதன் பொருட்டு ஏற்படுத்துவது? இச் சபையார் செய்ய வேண்டுவன யாவை? அவற்றைச் செய்தற்கும் செய்வித்தற்கும் உரியவர் யாவர்? இதன் அடிப்படையான கோட்பாடு யாது? வருவாய்க்கு வழி என்ன?' என்பன வாகிய பலவற்றையும் நன்கு சூழ்ந்து ஏற்படுத்தவேண்டும். இங்ஙனமின்றி வரவரப் பார்ப்போம் என்று தொடக்கத்தில் உற்சாகத்துடன் விரிவாக நடத்திவிட்டுப் பின்னர் இடர்ப்பாடு நேர்ந்துழி மேற்கொண்ட கருமங்களை ஒன்றன்பின் ஒன்ருகக் குறைக்கவும் ஒழிக்கவும் வேண்டிவருதலால், நீட்டிக்குறைத்தவுடன் பழிப்புக்கிடமாகி, மறைவிற்கும் காரணமாகின்றது. இங்ஙனம் முறை பிறழ்ந்து நடத்தப்பெற்றமையால் ஒழிந்துபடும் சங்கங்கள் தாம் கெட்டமட்டில் நில்லாது, பின்னர்த் தோன்றும் சங்கங்களுக்கும் மாருத பழிப்பைத் தருவனவாய் அமைகின்றன.

சங்கம், சபை, பொது, கழகம் என்பன ஒரு பொருட் சொற்கள். சங்கம் என்ற போதே அது ஒருவருக்குச் சொந்தமன்றென்பதும் பலர்க்கும் உரிமையுடையது என்பதும் போதரும். ஆதலின் ஒரு சபைக்குத் தலைமை வகித்து அதனை நடத்தும் பொறுப்பைக் கொள்பவர், சுயநலம் கருதாமலும், தம் புகழ் பேசாமலும், சபை சம்பந்தப்பட்டமட்டில் உறவினர், அயலார், நண்பர், பகைவர் என்ற வேறு

பாடு கருதாது அவரவர் புரியும் செயல்களை ஆராய்ந்து விருப்பு வெறுப்பால் நீதிதவறாது நடத்திவரல் வேண்டும்; சபையின் பொருளில் ஒவ்வொரு காசு செலவிடும்போதும் 'இச் செலவு செய்வது அவசியமா' என்று நன்றாக யோசித்தே செலவிடவேண்டும்; சபையின் அங்கத்தினரோ பிறரோ யாவராயினும், பொதுப் பொருளின் வரவு செலவைப் பற்றிக் கேட்டால் அதற்கு விடையளிக்கவேண்டும். இத்தகையார் நடத்தும் சபைகளே வளர்ச்சியுற்று விளங்கும்.

மக்கள் தமக்குவேண்டும் உரிமைகளைப் பொதுமக்களிடமிருந்தோ அரசாங்கத்திடமிருந்தோ பெற விரும்பின் தனித்தனி முயன்று பெறுவது அசாத்தியமாதலின், ஒரு கூட்டமாகச் சேர்ந்து பொதுவான கோரிக்கைகளை வெளியிட்டு அவற்றை எளிதில் நிறைவேற்றுவது இயல்பாகவுள்ளது. ஆகவே, சங்கங்கள் சமூதாய நலத்திற்கே அமைகின்றன; சமூதாய நலத்தாலே வளர்கின்றன. இந்நாளில் எதற்கெடுத்தாலும் சங்கங்கள் அமைத்தே தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். தொழில் வளர்ச்சி கருதியும், நாட்டுப்பணி கருதியும், மத வாழ்வு கருதியும், செல்வநலம் கருதியும் இன்னும் பலவகையில் நம் நாட்டில் சங்கங்கள் அமைந்துள்ளன. நம் நாட்டு விடுதலையின்பொருட்டு, நாட்டுப்பணியே நம் கடன் எனக் கருதிய நல்லோர்களால் அமைக்கப்பட்ட காங்கிரஸ் மகாசபை எவ்வளவோ இடையூறுகட்கும் கலங்காது உறுதியுடன் நின்று வெற்றி பெற்றதே சங்கத்தின் சிறப்பிற்கு தகுந்த சான்றாகும்.

## 16 இன்சொல்

ஒருவனுடைய மனத்தின்கண்ணே யுள்ள நன்மைகளை வெளிப்படுப்பன மலர்முகமும் இன்சொல்லுமாம். இவற்றுள் இன்சொல் முகமலர்ச்சியையும் தரவல்லது. யாரிடத்தும் இனிமையாகப் பேசுகிறவனுக்கு உலகமெல்லாம் வசமாகும். அவனுக்கு யாரும் பகைவராகார். கடுஞ்சொற் பேசுபவன் எவ்வளவு உபகாரச் செயலுடையவனாயினும் அவனை உலகத்தார் விரும்பமாட்டார். எல்லா நன்மைக

ளும் நல்வார்த்தைகளாலே ஏற்படும். கெடுதிகள் யாவும் கொடுஞ்சொல்லாலே விளையும். இல்லறத்தார்க்கு இன்றி யமையாதது இன்சொல். அது துறவறத்தார்க்கு அருள் போல்வது. அருள் இல்லாதவழித் துறவறம் நன்கு நடை பெறாததுபோல், இன்சொல் இல்வழி இல்லறம் இனிது நடைபெறாது. நாம் எப்போழுதும் தனித்திராமல் பல ருடன் கூடிப் பழகி வாழத்தக்கவர்களாதலின் யாரிடத்தும் எக்காலத்தும் இனிமையாகவே பேசவேண்டும். உபகாரம் செய்வதற்குப் பொருள் வசதி முதலியன இல்லாதிருக்க லாம். இன்சொல் கூறுவதற்கு நம்மிடம் இல்லை என்ப தற்கு ஏதும் இல்லை. இதனால் செலவொன்றுமில்லை. உலகத்தார் அன்பெல்லாம் வரவர அமையும். சிலர் உப காரம் செய்யும் வள்ளன்மை யுற்றிருந்தும், உபகரிக்கப் பெறுவாரிடத்து வெட்டெனப்பேசி, வந்தவர் மனத்தைப் புண்படுத்திப் பின்னர் வேண்டும் உதவியைச் செய்கின்ற னர். இங்ஙனம் செய்வார்க்குப் புகழும் இல்லை ; புண்ணிய மும் இல்லை.

" அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம் "

என வள்ளுவரும், " நல்லவை நாடிச் சொல்லுங்காலும் கடியவாகச் சொல்லின் அறனாகா " எனப் பரிமேலழகரும் கூறுவர்.

" அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின் "

" சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும் "

என்பனவும் வள்ளுவர் மணிமொழிகளே. கோபம் தோன்றியக்காலும் இன்சொல் கூறுவோமாயின் அக் கோபம் தானே அடங்கிவிடும். கடுஞ்சொல் கூறுவோ மாயின் கோபம் அதிகரித்துப் பகையையும், பாவத்தையும் பெருக்கி மீளா நரகுக்கு ஆளாக்கிவிடும்.

ஆகவே, இன்சொல் கூறுவோனுக்கு, மனத்தூய்மை பெருகி நிலைத்தலால் அறனும், அவ்வறத்தாலும் யாவரும் பகையின்றி நட்புக்கோடலாலும் பொருளும், இவ்விரண்டா

லும் இன்பமும் எய்துவனவாகும். இம்மூன்றும் பெற்றான் புண்ணிய மேலீட்டால் வீட்டுலக இன்பத்தையும் பெறுதற்குரியவனாகின்றான். இதனால்தான் இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பந்தரும் என்றார் பெரியோர். இவைகட்கு மாறாக மனத்தூய்மை யின்மையும், பகைமையும், பொருளிழப்பும், துன்பமும் பிறவும் தருவன கொடுஞ்சொற்களாமென்பது சொல்லாமலே யமையும். இக் கருத்துக்களை வைத்துத்தான் 'ஞயம்பட வுரை', 'வெட்டெனப் பேசேல்' எனக் கட்டளையிட்டார் ஒளவைப்பிராட்டியார். இன்சொல், புகழும், புண்ணியமும், பிற நலங்களும் வளரச்செய்யும் பெருமையையும், கொடுஞ்சொல் இகழ்ச்சியாதிய கேடுகளைத் தரும் சிறுமையையும் நோக்கியன்றோ.

> "இனிய வுளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

எனக் கூறினர் செந்நாப்போதார். அத்திருக் குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர், 'கனி ஒளவையுண்டநெல்லிக்கனி, காய் காஞ்சிரங்காய்' எனக் கூறியிருப்பது கருதத் தக்கது.

எவ்வளவு பொருளைத்தான் அள்ளியள்ளிக் கொடுப்பாராயினும் இன் சொற் கூறி உதவுவார்க்கு அவருதவும் பொருளளவிற்கு அதிகமான புகழும், புண்ணியமும் உளவாகும். இவ் விஷயத்தை நாம் பலரிடம் கண்கூடாகக் காண்கிறோம்.

இன்சொற் கூறுவாரும், கொடுஞ் சொற் கூறுவாரும் முறையே குயிலும், நாயும் போல்வர். குயில் கவலைப்படுங் காலத்தும் இனிய தொனியையே செய்யும். நாயோ மகிழ்ச்சிக் காலத்தும் கேட்பவர் காதில் நாராசம் நுழைத்தாற் போல ஊளையிட்டுக் குரைக்கும்.

எல்லோரும் எக்காலத்தும் யாவரிடத்தும் இன் சொற்களையே கூறவேண்டும். கொடுஞ் சொற்களை அறவே ஒழிக்க வேண்டும். வாயாற் பேசுதற்குக் கூறிய இவ் விதியையே எழுதுபவரும் கைக்கொள்ள வேண்டும். சிலர் தாம் எடுத்த காரியம் நிறைவேறாது போனபொழுது, அதற்குத் தடையாயினர் இவர் எனச் சிலரைக் கருதி அவர்களைப் பற்றிக் கண்டவாறு வசைமொழி பேசவும், எழுதவும்

தலைப்படுதல் இயல்பாயிருக்கின்றது. அது அவர்களுக்கே இகழ்ச்சியை விளைவிக்கின்றது. நூல் எழுதுவாரும் பத்திரிகைத் தொழில் நடத்துவோரும் இக்குறை யில்லாதிருப்பது சிறப்பாகும்.

"அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்(து)
இன்சொல னாகப் பெறின்"

---

# ஐந்தாம் பாரக் கட்டுரைப் பகுதி

## I உரையாடல்

(ஒரு பொருள் பற்றி இருவகைக் கருத்துக் கொண்டு விவாதித்தல்.)

### (அ) இயந்திரப் பெருக்கத்தினால் நன்மையா தீமையா?

**சுந்தரம்:**— வா! மணி, இந்த மோட்டார் சனியன் வந்தாலும் வந்தது; தெருவில் மனிதன் நடக்க முடியவில்லை.

**மணி:**—சுந்தரம், உலகில் எவ்வளவோ புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தும், அவை உன்னை யொன்றும் செய்யவில்லை போலிருக்கிறது. மோட்டார் உனக்குச் சனியனா?

**சுந்:**—எனக்குமட்டுமென்ன? எல்லாருக்குமே தான். எத்தனை பேர்களை அலட்சியமாக நசுக்கிக் கொன்றுவிடுகிறது. இதனால் சுறுசுறுப்புடன் இருக்கவேண்டிய இளைஞர்களும் கூடச் சோம்பேறிகளாய், பத்தடி தூரம் செல்வதற்குக்கூட நடந்து போகாமல், அரைமணி நேரமாயும் அறிவையும் இழந்து காத்துக் கிடக்கிறார்கள்.

**மணி:**—அது மோட்டாரின் குற்றமா?

**சுந்:**—மோட்டார் மட்டுமன்று; இந்த இயந்திரப் பிசாசுகளின் இயற்கையே அதுதான்.

**மணி:**—ஓகோ! நீ கற்கால மனிதனாக மாறிக்கொண்டு வருகிறாயோ? நீ இயந்திரங்களை இகழ்வது, அவற்றால் விளையும் சிறந்த பயன்களை உணராததுடன், அவற்றை ஆக்கிய

அறிவையும் இகழ்ந்து முற்போக்குப் பாதையை அடைத்து விடுகிறது என்பதை நீ அறியவில்லை.

சுந்:—மணி! இந்த மேடைப் பிரசங்கிகளைப் போல வெறும் பொருளற்ற சொற்களை அள்ளி வீசாதே. இயந்திரப் பெருக்கத்தால் சமுதாயத்திற்கு உண்மையில் ஆக்கமா அழிவா என்பதை ஆராய்ந்துணர்ந்து பேசு.

மணி:—மோட்டார், கப்பல், ஆகாய விமானம் போன்ற போக்கு வரவுச் சாதனங்களால் காலத்தையும், தூரத்தையும் மனிதன் எவ்வளவு சுருக்கிவிட்டான் என்பதை அறியாயா? நொடிக்குள் நூறு புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அச்சிடவல்ல அச்சு இயந்திரத்தால் ஏற்பட்ட நன்மை அளவில் அடங்குமா? நெசவு யந்திரத்தின் சிறந்த பயனே தான் இவ்வளவு அழகாக நீ ஆடை யணிந்திருக்கிறாய். உன் சட்டைகளைத் தைப்பதற்கு ஒரு யந்திரமே உதவியிருக்கிறது. இன்னும் மரங்களை அறுப்பதற்கும், வீடுகளைக் கட்டுதற்கும், பாதைகளைச் செப்பனிட்டு வைத்தற்கும், பொழுது போக்கிற்குரிய படக் காட்சி முதலியவற்றிற்கும், கிணறு தோண்டுதற்கும், தண்ணீர் இறைப்பதற்கும், பூமிக்குள் மறைந்து கிடக்கும் உலோகங்களைக் கண்டுபிடித்து எடுத்து அழகிய நகைகளாகவும், நாணயங்களாகவும், பாத்திரங்களாகவும், மற்றும் எத்தனையோ வகையான பொருள்களாகவும் நாம் பயன்படுத்துவதற்கும், இன்னும் இவை போன்ற எவ்வளவோ காரியங்களுக்கும் இயந்திரங்களில்லாமல் முடியுமா? இன்று மனிதன் அடைந்துள்ள முன்னேற்றத்தின் சின்னமாக விளங்குவது இயந்திரமல்லவா?

சுந்:—நன்றாகத்தான் பேசுகிறாய்! ஆனால் எல்லாம் ஒரே மயக்கம். மனிதனடைந்துள்ள இழிநிலையை முன்னேற்ற மென்கிறாய். இந்த இயந்திரங்களால் மனிதன் விலங்காக மாறி வருகின்றான் என்பதை நீ யுணரவில்லை. மனிதனிடமுள்ள ஒழுக்கம் இவற்றால் மறைந்துவருகிறது. அவனது தூய குணங்களை யெல்லாம் இந்த இயந்திர பூதம் அழித்துக்கொண்டு வருகிறது. மனிதன் இதனால் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றான்.

மணி:—நீ விளங்காத வேதாந்தம் பேசாதே நீ கூறியவற்றிற்கும் இயந்திரங்களுக்கும் என்ன சம்பந்தம்?

சுந் :—அப்படிக் கேள்! சொல்லுகிறேன். ஒரு நூறு பேர் செய்யும் காரியத்தை ஒரு பொறி செய்துவிடுகிறது. இதன் விளைவென்ன? அந்த இயந்திரத்தை இயக்குதற்கு வேண்டும் சிலரைத் தவிர மற்றவர் பட்டினி கிடக்கவேண்டும் அன்ரோ?

மணி :—அவர்கள் வேறு தொழிலைச் செய்தாலென்ன?

சுந் :—உன் முன்னேற்றச் சின்னம்தான் நுழையாத இடமில்லையே. மனிதன் பேசுவதற்கும் செய்வதற்கும் ஏன் நினைப்பதற்கும் கூட இயந்திரம் வந்துவிட்டதே. தவிர, பல மனிதர், ஓராண்டிற் செய்து குவிக்கும் பொருளை ஒரு இயந்திரம் ஒருநாளில் செய்து குவித்துவிடுகிறது. அதனல் நடப்பதென்ன? அவ்வாறு குவிக்கப்பட்ட பொருள் செலவாக வேண்டும். அதற்குத் தன் நாடு இடம் பற்றவில்லையானல் அயல்நாட்டவர் தலையில் அவற்றைச் சுமத்தவேண்டும். அவர்களுக்கு அவை தேவையில்லையானலும் விருப்பமில்லையானலும் வந்தது சனியன். உடனே போர்தான். ஆகவே, இயந்திரம் மனிதனது ஆசையை வளர்த்து அவனுடைய அருங்குணங்களையெல்லாம் அழித்துப் பிறரைத் தனக்கடிமையாக்கி அட்டூழியம் புரியச்செய்கிறது. உலகில் இன்று நிறைந்துள்ள துன்பங்களுக்கெல்லாம் உள்ள பல காரணங்களில் இந்த இயந்திரப் பெருக்கமும் ஒன்று என்பதை அறிந்துகொள்வாய்.

மணி :—சுந்தரம், நீ தொடர்பில்லாமல் ஏதோ புராணப் பிரசங்கம் செய்கிருய். மனிதன் இயந்திரத்தினல் கெட்டானென்ருல், அவனது ஒழுக்கத்தையும் அருங்குணங்களையுப் பாதுகாப்பதற்கென்று அமைந்த அறநூல்களெல்லாம் உறங்கிக்கொண்டிருக்கின்றனவா?

சுந் :—புதுமையைக் கண்டு மயங்குவது மனித இயல்பு. ஏன்? இப்பொழுது நீயே அதற்குத் தக்க சான்ருக இல்லையா? அந்தப் புதுப்பொருள்கள் மனிதன் நல்லியல்புகளை அட்டை இரத்தத்தை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக் கொண்டிருக்கையில் அவனைக் காப்பாற்றக் கடவுளாலுமாகாது. மேலும் பொருளாதாரத் துறையிலும் இயந்திரங்

கள் மனிதனுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையே செய்கின்றன. முன்னுளில் நம் நாட்டில் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையையோ, அதனுல் ஏற்படும் பூசல்களையோ நீ கேட்டதுண்டா? இன்று உலகெங்கும் முதலாளிவர்க்கம் தொழிலாளர்வர்க்கம் எனப் பிரிந்து நின்று பூசல் விளைப்பதேன்? இயந்திரங்கள் மக்களிடம் பரவி நின்ற செல்வத்தை ஓரிடத்தே குவிக்கின்றன. அந்த ஓரிடம் மலைபோல் உயர்ந்துவிடுகின்றது, மற்ற இடங்கள் பெரும் பள்ளமாகிவிடுகின்றன, இந்த மேடு பள்ளமான நிலையால்தான் பெரும் பூசல்கள் ஏற்படுகின்றன. நூறு வண்டிக்காரர்கள் பிழைப்பை ஒரு மோட்டார் லாரி அள்ளிக்கொண்டு போய்விடுகிறது. நூறு உழவர்கள் உழைப்பை ஒரு இயந்திரக் கலப்பையும் நீரிறைக்கும் இயந்திரமும் செய்து முடித்து விடுகின்றன. இப்படியே ஒவ்வொன்றிலும் மனித வுழைப்பு மறைந்துகொண்டே வந்தால் எளிமை நிரந்தரமாகிவிடும் என்பது கண்கண்ட வுண்மையன்றே?

**மணி:**—நீ சொல்வன யாவும் உண்மையாகத்தான் தோன்றுகின்றன. ஆனுல், அவற்றுல் ஏற்பட்டுள்ள நன்மைகளை முற்றும் மறுப்பதற்கில்லை.

சுந்:—இன்னும் பார்! இயந்திர மயக்கம் உன்னை விடவில்லை. வாகனமில்லாமல் நடந்து சென்றுல் இழிவா? நெல்லை இயந்திரத்தில் குற்றுமல் கையால் குற்றியுண்டால் உடம்புக்கும் நல்லதன்றே? இயந்திரத்தில் குற்றிச் சத்துள்ள தவிட்டைப் போக்கிக்கொள்வது நல்லதா? அந்த இயந்திரங்களுக்காக அயல் நாடுகளுக்குப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பதுதான் நல்லதா? கையால் நூற்று நம் கைத்தறியால் நெசவு செய்து ஆடைகளை நம் நாட்டவர் அணிந்துகொள்ள முடியாதா? தத்தம் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டால் போதாதா? ஏன் இந்தப் பேராசை? ஏன் இவ்வளவு அவசரம்? புதுப்புதுப் பொறிகளால் உலகம் தலைவிரி கோலமாக ஓடி என்ன நன்மை விளைந்துவிட்டது? இவற்றை எல்லாம் எண்ணிப் பார்.

**மணி:**—சரிதான். நீ சொல்வதுபோல மனிதன் இயந்திரங்களுக்கு அடிமையாகி விடாமல் அவற்றைத் தம் கைக்குள் அடக்கி வைத்து, நன்மை விளைக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

**சுந்:**—இம்மட்டிலாவது ஒப்புக்கொண்டாயே; போதும். சென்று வருகின்றேன். வணக்கம்.

## (ஆ) கடவுள் நம்பிக்கை வேண்டுமா வேண்டாமா?

**முருகன்:**—

"தீட்டுவோன் இன்றிஆமோ சித்திரம்! திகழ்பொற் பாவை
ஆட்டுவோன் இன்றித் தானே ஆடுமோ! திவ்வி யாழின்,
மீட்டுவோன் இன்றிக் கீதம் விளையுமோ! சராசரங்கள்
நாட்டுவோன் ஒருவன் இன்றி நன்குமைந் தொழுகுங் கொல்
[லோ"

ஆஹா! எவ்வளவு அழகான செய்யுள். "அவனின்றி ஓரணுவும் அசையாது" என்னுங் கருத்து, இச் செய்யுளில் மிகத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

**இராமன்:**—செய்யுள் எளிய நடையில் அமைந்திருக்கிறது. பொருளும் தெளிவாக விளங்குகின்றது. ஆனால்........

**முருகன்:**—ஆனால் என்ன?

**இராமன்:**—பொய்யை மெய் போல் காட்டுவதிலும், பொருத்தமான உபமானங் கூறுவதிலும் நம் முன்னோர்கள் மிகத் திறமை படைத்தவர்கள்.

**முருகன்:**—நீ பேசுவது வேடிக்கையாயிருக்கிறதே. உன் கருத்து யாது?

**இராமன்:**—இயற்கையாய் அமைந்தது உலகம். அதனை ஆக்கிய தலைவனொருவன் உண்டென்பது வீண் பேச்சு; காட்சிப் பிரமாணமற்றது.

**முருகன்:**—புகையைக் கண்ட விடத்தில் நெருப்புண்டு என்பது வெளிப்படையன்றோ? அதைப் போல, பொருளைக் கண்ட விடத்தில், அதனை ஆக்கிய தலைவனொருவன் உளன் என்று உணர வேண்டாமோ?

இராமன்.— பழைய கதையை மறுபடியும் கூறுகிறாய். இயற்கைப் பொருளுக்கு இறைவனேது?

முருகன்:— எப்பொருளும் தானே உண்டாகி இருக்க முடியாது. அவ்வாறு தானே உண்டான பொருள் ஏதேனும் ஒன்று கூறு.

இராமன் :— ஒன்றென்ன! எல்லாம் இயற்கைப் பொருள்களே.

முருகன்:— அப்படியானால் அதோ நிற்கும் மரம் இயற்கையாய் உண்டானதா?

இராமன்:— சந்தேகமென்ன?

முருகன்:— இம்மரம் எதிலிருந்து உண்டானது?

இராமன்:— இம்மரம் வித்திலிருந்து உண்டானது. இது என்ன கேள்வி?

முருகன்:— அந்த வித்து எதிலிருந்து உண்டாயிற்று?

இராமன்:— வித்து மரத்திலிருந்து உண்டானது.

முருகன்:— நண்பா! வித்துக்குப் பிறப்பிடம் மரம், மரத்திற்குப் பிறப்பிடம் வித்து என்று கூறினாய். உண்மையே. இவ்விரண்டில் முதலில் உண்டானது எது? மரமோ? வித்தோ? நன்கு யோசித்துச் சொல்.

இராமன் :— எது முந்தினதென்று யாராலுங் கூற முடியாது. இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?

முருகன் :— தலைவனொருவனின்றி எதுவும் தானே அமையாது. கற்றவனாகிய நீயே கடவுள் இல்லையென்று எண்ணினால், கல்லாதார் என்ன நினைப்பார்? அருட்பெருஞ் சோதியாகிய கடவுள், மக்களின் வாழ்க்கைக்கு உதவியாக எல்லாப் பொருள்களையும் உண்டாக்கி வைத்திருக்கின்றார். அவ்வுண்மையை உணர்ந்து, அவரை வணங்கி வழிபட வேண்டியது நமது முக்கியமான கடமையாகும்.

இராமன்.— உன்னுடைய வாக்குவன்மையால் கடவுள் உண்டு என்று சாதிக்கிறாய். அவ்வளவு தானே?

முருகன்:— அப்படியல்ல. கடவுள் இல்லை என்று நிச்சயமாகக் கூறிவிட முடியுமா? அதுவும் முடியாதே.

இராமன்:— அதனுல்—

முருகன்:— கடவுள் உண்டு என்றே தீர்மானிப்பது நல்லதல்லவா?

இராமன்:— அஃதெப்படி? இல்லை என்று தீர்மானிப்பது தான் நல்லது. வீண்செலவிற்கு இடமிராது?

முருகன்:— செலவு செய்துதான் கடவுளை வழிபட வேண்டுமென்பது தவறு. கடவுள் இல்லை என்பதைக் காட்டிலும், உண்டு என்று தீர்மானிப்பதே நலம்.

இராமன்:— ஏன்?

முருகன்:— கடவுளால் விதிக்கப்பட்ட காரியங்கள் இவை, விலக்கப்பட்டவை இவை என்று நூல்களில் கூறப்பட்டுள்ளன. கடவுள் நம்பிக்கையுள்ளவன் விதிக்கப்பட்டவற்றையே செய்வான். விலக்கப்பட்டவற்றைச் செய்யான். ஆனுல், தெய்வ நம்பிக்கையற்றவன் விதிவிலக்கின்றி மனம் போனவாறு நடப்பான்.

இராமன்:— கட்டுப்பாடின்றி நடப்பவன் மனநிறைவு பெறுவான் அல்லவா?

முருகன்:—அது ஒரு பொருட்டல்ல. ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை விளங்கும்.

இராமன்:—உனது சித்தாந்தந்தான் என்ன? சொல், கேட்கலாம்.

முருகன்:—இறைவன் இருப்பது உண்மையானுல், தெய்வ நம்பிக்கையுள்ளவன் நன்மையடைவான். நம்பிக்கை யில்லாதவன் தண்டிக்கப்படுவான். கடவுள் இல்லை என்பது உண்மையாயின், நம்பிக்கை உள்ளவன், இல்லாதவன் ஆகிய இருவர்க்கும் நன்மையுமில்லை, தீமையுமில்லை. ஆகையால், எந்தக் கொள்கை மேலானது? நண்பா! இப்பொழுது என்ன சொல்கிருய்.

இராமன்:—ஆம்! நீ சொல்வது முற்றிலும் உண்மை. முருகா! என் கண் திறந்தது.

## பயிற்சி

கீழ் வருவனவற்றைப்பற்றிய இருவகைக் கருத்துக்களையும் உரையாடலாக வரைக:

1 பரிக்ஷை வேண்டுமா, வேண்டாமா?

2 குடியாட்சியும் முடியாட்சியும்.

3 எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிற் போதிப்பது சிறந்தது—சிறந்ததன்று.

4 விஞ்ஞான வளர்ச்சி நல்லதா, கெட்டதா?

## II மதிப்புரை

மாணவர்களே! பத்திரிகைகளில் அவ்வப்பொழுது வெளியாகும் நூல்களைப்பற்றி மதிப்புரை எழுதப்படுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். அவ்வாறே வானொலியிலும் புத்தகங்களைப்பற்றி மதிப்புரை கூறும் நிகழ்ச்சி யிருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். நூல்கள், நாடகம், திரைப்படம் போன்ற காட்சிகள், அறிவியலறிஞர் கண்ட புதுமைகள், சொற்பொழிவு, குறிப்பிட்ட ஒரு சித்திரம், சிற்பம், இசை விருந்து முதலியவற்றைப்பற்றி ஒருவர் தம் கருத்தை வெளியிடுவது **மதிப்புரை** எனப்படும். அம் மதிப்புரையில் ஒன்றைப் பற்றிய குணங்களை விரித்தும் குறைகள் காணப்படுமேல் அக் குறைகள் நீங்கும் வகையில் ஆக்க முறையிலமைந்த கருத்துக்களைச் சுருக்கியும் கூறுதல் இயல்பு. இவ்வாறு மதிப்புரை கூறும்முறை பேச்சு வழக்கில் எல்லாரிடமும் அமைந்திருக்கிறது. வீட்டில் சமையலைப் பற்றிக்கூடச் சமயங்களில் மதிப்புரை பேசுவது மக்கள் இயல்பு. அதனை எழுத்து முறையில் எழுதப் பழகுவது சிறப்புடையது. ஒரு நூலைப் பற்றி மதிப்புரை எழுதப்புகின் நூலை நன்கு படித்து விருப்பு வெறுப்பின்றிக் கருத்துக்களை வெளியிடவேண்டும். விருப்பமுடையார் ஒன்றை ஆராயின் குறைகளை அறவே மறந்து, குணங்களை மிகப் புகழ்ந்துரைப்பர். வெறுப்புக்கொண்டார் குணங்களை அலட்சியம் செய்து குற்றங்களை மிகைப்படுத்தியுரைப்பர். ஆகவே மதிப்புரை எழுதுவார்க்கு நடுவுநிலை இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாக 'அருங்கலைச் செல்வர்' என்ற நூலைப்பற்றிய மதிப்புரையைப் பாருங்கள்!

## (அ) 'அருங்கலைச் செல்வர்' பற்றிய மதிப்புரை

'அருங்கலைச் செல்வர்' என்னும் நூல் உயர்நிலைப்பள்ளி மாணவர்க்குத் துணைப்பாடமாக வைக்கத்தகுந்த நூல். அண்மையில் அது உயர்நிலைப்பள்ளி யிறுதித் தேர்விற்குரிய நான்கு துணைப்பாட நூல்களுள் ஒன்ருக வைக்கப்பட்டிருந்தது. அது விஞ்ஞானத்துறையில் உலகப் புகழ்வாய்ந்து நோபெல் பரிசுபெற்ற ஐந்து அறிவியலறிஞர்களின் வரலாறுகளைச் சுருங்க உரைக்கின்றது. அவர்கள் கியூரியம்மையார், குக்லியல்மோ மார்க்கோனி, ஆல்பர்ட் ஈன்ஸ்டீன், சர். சி.வி, இராமன், ருதர்போர்டு பிரபு என்பவராவர்.

வரலாறுகள், பிறப்பு, கல்விப் பயிற்சி, சிறப்பியல்பு, புதுமை காணும் ஊக்கம், உழைப்பு, முயற்சியில் வெற்றி, உலகத்தார் பாராட்டு, பட்டங்களும் பரிசுகளும் பெற்றமை, செய்த உலகப் பிரயாணங்களும் சொற் பொழிவுகளும், குணதிசயங்கள், முடிவு என்ற இம்முறையில் ஒழுங்காகவும் விளக்கமாகவும் எழுதப்பட் டிருக்கின்றன. ஆங்காங்கே பொருத்தமான பல மேற்கோள்களும், உவமைகளும், பழமொழிகளும் கருத்தை அழகாக விளக்கிச் செல்கின்றன.

ஒவ்வொரு விஞ்ஞானியின் வரலாற்றின் தொடக்கத்திலும் முன்னுரை, போன்றமைந்துள்ள விளக்கம், கருத்தும் சுவையும் நிரம்பியவாய் விளங்குகின்றன. கியூரியம்மையார் வரலாற்றில் 'பெண்மையின் பெருமை,' 'பெரியோர் பிறப்பின் அருமை' என்ற தலைப்புக்களில் வரைந்துள்ள விஷயங்கள் மிகவும் பொருத்தமா யமைந்துள்ளன. அவ்வாறே மார்க்கோனியின் வரலாற்றின் தொடக்கத்தில் 'புத்தம் புதிய விந்தை' என்ற தலைப்பின் கீழுள்ள பொருளும், ஈன்ஸ்டீன் வரலாற்றிலுள்ள 'அறிவின் தனிச் சிறப்பு' என்பதும், சர். சி. வி. இராமன் வரலாற்றில் 'ஆன்ம நாற் பயிற்சியா அழிவின் காரணம்?' என்பதும், ருதர்போர்டு பிரபுவின் வரலாற்றில் 'அணுகுண்டின் அற்புத சக்தி' என்பதும் பொருந்திய கருத்தைத் திருந்திய முறையில் விளக்குகின்றன.

நூல் முழுவதிலும் இடையிடையே கொடுக்கப்பட்டுள்ள சிறு தலைப்புக்கள் அவற்றின் கீழ்வரும் கருத்துக்களைத்

தெளிவாக விளக்கிநிற்கின்றன. படித்த பாடங்கள் மறவாது நினைவில் இருத்தற்கு இத் தலைப்புக்கள் பேருதவியாயிருக்கின்றன.

கியூரியம்மையார் வரலாற்றில் நோபெல் பரிசு பற்றிய விவரம் கூறப்பட்டிருப்பது அழகாகவும் பொருத்தமாகவும் அமைந்துள்ளது. கியூரியம்மையாரின் சீரிய பண்புகளை வரலாற்றுடன் இணைத்துக் கற்பவர் உள்ளத்திற் பதியுமாறு கூறப்பட்டிருப்பது சிறந்த முறையாகும். மேரியம்மையாரும் பியரி கியூரியாரும் சந்தித்தது பற்றி ஆசிரியர் கூறியிருப்பது அவ்வளவு சுவையுடையதாக அமையவில்லை. ஆசிரியர் தம் கற்பனைத் திறனை இவ்விடத்தில் காட்டாமல் சென்றிருக்கலாம்.

ஆசிரியர் பல இடங்களில் விதியைப் பற்றிப் பேசுகிறார். அது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதன்று என்றே கருதுகிறேன். அடிமைப்பட்ட போலந்தைப் பற்றி எழுதியிருப்பது ஆசிரியரின் நாட்டுப்பற்றை நன்கு விளக்குகின்றது. ரேடியத்தின் தோற்றமும் சிறப்பும் நூலின் வரலாற்றியல்பு கெடாவண்ணம் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. மார்க்கோனியின் வரலாற்றில் வானொலியால் விளையும் நன்மைகளை அப்படியே தொகுத்துக் கூறி விடாது அவற்றை 'வானொலியால் விளையும் அறச்செயல்' 'வானொலியால் அடையும் பொருட்பேறு' 'வானொலியால் வரும் இன்பம்' 'வீட்டுநெறியும் காட்டும் வானொலி' என்ற தலைப்புக்களில் பகுத்துக் கூறியிருப்பது நூலின் பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் அழகுறக் காட்டுவதாயுள்ளது. 'ஞானியும்' 'விஞ்ஞானியும்' என்ற தலைப்பில் அவ்விருவரையும் ஒன்றுபடுத்திக் காட்டியிருப்பது அறிவிற்கு விருந்தாயுள்ளது.

சர், சி. வி. இராமன் வரலாற்றில் இந்திய விஞ்ஞானக் கழகத்தின் வரலாறும், சர், அஷுடோஷ் முகர்ஜி பற்றிய குறிப்பும், இராமனது கலைப்பற்றும், தியாக சிந்தையும், வானமும் கடலும் நீலமாயிருப்பது பற்றிய ஆராய்ச்சியும், இந்திய முன்னேற்றத்திற்கு உழைத்த பெரியார் பெயர்களும் பன்முறை படித்து மகிழத்தக்கனவாய் அமைந்துள்ளன. விஞ்ஞான ஆராய்ச்சியிலுள்ள சிரமங்கள் அத்

தலைப்பில் அமைந்துள்ள கருத்துக்களால் நன்கு தெளிவாகின்றன.

இந்நூல் சிந்தையயள்ளும் செந்தமிழ் நடையில் அமைந்துள்ளது. விஞ்ஞானிகளைப் பற்றிய வரலாற்று நூல் இவ்வாறமைந்திருப்பது தமிழின் வளர்ச்சியையே காட்டுவதாகும்.

## (ஆ) நான் பார்த்த நாடகத்தைப் பற்றிய மதிப்புரை

எங்கள் பள்ளியின் ஆண்டுவிழா அண்மையில் நடந்தேறியது. விழாவின் முடிவில் பள்ளி மாணவர்களால் இராமாயணம் நாடகமாக நடிக்கப்பட்டது. நான் நாடகத்தில் நடிப்பவருள் ஒருவனைச் சேர்ந்துகொள்ளாததால் பொதுமக்களைப்போல் வெளியே யிருந்து பார்த்து மகிழ முடிந்தது.

நாடக பாத்திரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வயதாலும் உருவத்தாலும் மிகவும் சிறியவர்கள். அதற்குமுன் அவர்களிற் பலர் மேடையேறியதே யில்லை. ஒரு கூட்டத்தில் தைரியமாக நின்று பேசும் பழக்கமுங்கூட அவர்களுக்குக் கிடையாது.

அவ்வாறிருந்தும் அவர்கள் நீண்ட நாள் பழக்கமுடைய நடிகர்களைப்போல் நடித்தனர். எள் விழ இடமின்றியிருந்த கூட்டத்தில் ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும் அளவிற்கு அமைதி நிலவியது நாடகத்தின் சிறப்பைக் காட்டியது.

நாடகம் முழுவதற்கும் பேச்சும் பாட்டும் எங்கள் பள்ளித் தமிழாசிரியராலேயே எழுதப்பட்டன. உரைநடை நல்ல தமிழில் சுவைகளுக்கேற்ற இயல்புடன் இனிமையாக இருந்தது. பாட்டுக்கள் தெளிவாக எளிய நடையில் அமைந்திருந்தன.

கண்ணைக் கவரத்தக்க திரைகளும், மின்சார விளக்குகளின் அலங்காரமும் நாடகக் காட்சியை அழகுசெய்தன. நடிகர்களுள் இராமனை நடித்த சிறுவன் முதற் பரிசுக்குரியவனை விளங்கினன். அவனது பேச்சுத் தெளிவாகவும் கம்பீரமாகவும் இருந்தது. இயல்பாக அமைந்த இனிய குரலில் அவன் பாடும்பொழுதெல்லாம் எல்லோருள்ளத்

தையும் கவர்ந்துகொண்டான். நடிப்பும் இயல்பாக இருந்தது. அவனுக்கடுத்தபடி பரதனாக நடித்த சிறுவன் மிக நன்றாக நடித்தான். இராவணனாக நடித்த மாணவன், தான் புனைந்த கோலத்துக்கேற்றவாறு துடிப்பாக நடித்தான். இந்திரசித்தாக நடித்த சிறுவன் பேச்சு வெகு மிடுக்காக இருந்தது. அவனது பேசும் திறத்தை எல்லோரும் பாராட்டினர். லக்ஷ்மணனாக நடித்த சிறுவனும் அவ்விதமே நன்றாக நடித்தான். மற்ற மாணவர்கள் எல்லோருமே தத்தமக்குக் கொடுத்த பகுதியைத் திறம்பட நடித்தனர், நாடகம் பூரண வெற்றி பெற்றது.

ஒவ்வொரு காட்சிக்கும் இடையே ஏற்பட்ட காலதாமதத்தைத் தவிர்த்திருக்கலாம். இராவணன் தர்பாரில் நடந்த நடனம் அவ்வளவு நன்றாக இல்லை. மாயச் சூர்ப்பனகையாக வந்த சிறுவன் நடனமாடியபின் அது அவ்வளவாகச் சிறந்து விளங்காதுபோனது இயல்பே. ஆகவே அதைத் தவிர்த்திருக்கலாம். சிறுவர்களிடம் இயல்பாக அமைந்துள்ள கலைத்திறமையை வெளிப்படுத்தவும் வளர்க்கவும் இத்தகைய நாடகங்கள் பெருந்துணையாயிருக்கின்றன.

## பயிற்சி

பின் வருவனவற்றைப் பற்றி மதிப்புரை வரைக:

1 எங்கள் தமிழ்ப்பாடநூல்
2 வீரத் தமிழர்
3 மறைந்த மாநகர்
4 மதுரைச் சிற்பம்
5 நான் கண்ட படக்காட்சி
6 இந்தியப் பெருமக்கள்
7 நான் கேட்ட ஒருசொற்பொழிவு
8 ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் வரலாறு.

## III இலக்கியப் பாராட்டுக் கட்டுரை.

மாணவர்களே! உங்கள் தமிழ்ப்பாடநூலைக் கருத்துடன் படித்து வருகின்றீர்களல்லவா? அப்புத்தகத்தின் செய்யுட் பகுதியில் தோத்திரப் பகுதி, அறவுரைப்பகுதி, கதைப்பகுதி, பல்சுவைப்பகுதி என்ற பிரிவுகளில் முற்கால நூல்களும், இடைக்காலச் செய்யுள் நூல்களும், இக்காலப் பாக்கள் சிலவும் தொகுக்கப்பட்டுள்ளன. புற

நானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, கம்பராமாயணம், பெரியபுராணம், நளவெண்பா, பாரதியார்பாடல், தேசிகவிநாயகம் பிள்ளை பாடல், நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை பாடல், சுத்தாநந்த பாரதியார் பாடல் முதலிய பல நூல்களையும் பாக்களையும் படிக்கின்றீர்கள். அவற்றின் சிறப்புக்களைப் பாராட்டும் முறையில் கட்டுரை எழுதப் பயிற்சிபெறுவது இன்றியமையாதது. இங்குக் கம்பராமாயணத்தைப் பற்றி ஒரு மாணவன் எழுதிய பாராட்டுக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள்.

## மணவாளன் எழுதிய கட்டுரை
## கம்பராமாயணம்

குறிப்புக்கள் :—முன்னுரை - நூலும் ஆசிரியரும் - பாக்கள் கூறும் கதைப்பகுதி - பொருட் சிறப்பு - நடைச்சிறப்பு - கற்பனைத் திறம் - முடிவுரை.

நான் படிக்கும் சுதந்திரத் தமிழ் வாசகம் என்னும் நூலில் செய்யுட் பகுதியில் பலவகைச் சுவையும் அமைந்த நூல்களும், பாக்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் கதைப்பகுதியில் கம்பராமாயணம், பாரதம், பெரியபுராணம், மணிமேகலை, சிலப்பதிகாரம், பாஞ்சாலி சபதம், புத்தர் கருணை என்ற பல நூல்கள் காணப்படுகின்றன.

அவற்றுள் கம்பராமாயணம் வடமொழியிலமைந்துள்ள இராமாயணம் என்னும் இதிகாசத்தைப் பின்பற்றி எழுதிய காவியமாகும் ; உலகப் புகழ்பெற்ற இராமகதையை விளங்கவுரைப்பது. இதன் ஆசிரியர் கவிச்சக்கரவர்த்தி என்று புகழ்பெற்ற கம்பர் ஆவர். ஏழு காண்டங்களில் யுத்த காண்டத்தைச் சேர்ந்த ‘வீடணன் அடைக்கலப் படலம்’ எங்களுக்குப் பாடமாக அமைந்துள்ளது.

வீடணன், இராவணனுக்கு அறவுரைகள் கூற, அவன் சினங்கொண்டு வெருட்டியதால் தமையனைத் துறந்து இராமனைச் சரண்புக வருகின்றான். அவனைக் கண்டதும் வானர வீரர் ஒற்றாட வந்த அரக்கன் எனக் கருதிப் பிடித்துத் துன்புறுத்த எண்ணுகையில் வீடணன் ‘இராமா நின் அபயம்’

எனக் கூவுகின்ருன். அபயம் என்ற குரல் கேட்ட இராமன் 'அது யார்?' எனக்கேட்டு, உண்மையுணர்ந்து சுக்கிரீவன், சாம்பவான், நீலன், மாருதி போன்ற முக்கியமான வானரத் தலைவர்களிடம் வீடணனுக்கு அடைக்கலம் கொடுப்பது பற்றி 'உங்கள் கருத்தென்ன' எனக்கேட்கின்ருன். சுக்கிரீவன், 'தமையனையே சமயத்தில் கைவிட்ட இவனை நம்புவது எங்ஙனம்? ஆதலால், இவனுக்கு அடைக்கலம் கொடுத்தல் கூடாது' எனக் கூறுகின்ருன்; சாம்பவானும் நீலனும் பல காரணங்களைக்காட்டிச்சுக்கிரீவன் கருத்தைப் போலவேபேசுகின்றனர். முடிவில் மாருதி அவர்கள் கருத்துக்கு மாருக வீடணன் குணச் சிறப்பை விளக்கிக் கூறி, 'அடைக்கலம் கொடுக்கலாம்' எனக் கூறுகின்ருன். அதன்பின் இராமனும் பலவாறு காரணங்களைக்காட்டியும் உதாரணங்களைக் கூறியும் 'அடைக்கலம் கொடுப்பதே தனக்குரிய கடன்' எனக் கூறிச் சுக்கிரீவனை நோக்கி வீடணனை அழைத்து வருமாறு ஏவுகின்ருன். வீடணன் அதுகேட்டு மகிழ்ந்து இராமனைப் புகழ்ந்து பணிந்து எழுகின்ருன். பிறகு அவனை இராமன் சகோதரனுகப் பாராட்டி அவ்விடத்திலேயே இலக்குவனைக் கொண்டு இலங்கைக்கு அரசனுக முடி சூட்டுகின்ருன்.

இந்நிகழ்ச்சியைக் கூறும் முறையில் அமைந்துள்ளபாக்கள் கற்பனைத் திறமும், பொருட்செறிவும் உடையனவாக விளங்குகின்றன. அடைக்கலம் கொடுப்பது பற்றிப் பலர் கூறும் கருத்துக்கள் மிகுந்த ஆராய்ச்சியும் விவாதத்திறமையும் கொண்டுள்ளன. அறப்பற்றும், கடமையைச் செய்வதில் உறுதியும், அடைக்கலம் காத்தலின் சிறப்பும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

செய்யுள் நடை கம்பீரமாக அமைந்துள்ளது. இடையிடையே வட சொற்கள் விரவியிருப்பினும் அவை தமிழாக்கம்பெற்றுத் தமிழ் நடைக்கேற்றவாறு கலந்து கொள்கின்றன. தட்டுத் தடங்கலின்றி ஓடும் நதியைப் போல் பாக்களின் நடை செல்கின்றது.

கவிகளின் கற்பனைத் திறம் வியக்கத் தகுந்தது. வீடணன் 'தனக்கும் இராமன் அடைக்கலம் தந்தானு?' எனக் கருதி மகிழும்போதும், இராமன் வீடணனுக்கு அடைக்கலம்

கொடுத்துப் பாராட்டும் பொழுதும், கம்பர் கவிதையின் கற்பனைத் திறம் மிகச் சிறந்து விளங்குகின்றது.

இத்தகைய சிறந்த காவியத்தை முழுவதும் படித்து மகிழ வேண்டும். அப்பொழுதுதான் கம்பன் கவிதைச்சிறப்பையும் காவியத்தின் பெருமையையும் நாம் நன்குணரலாம்.

### பயிற்சி

கீழ் வரும் நூல்களின் செய்யுட் பகுதிகளைப் படித்துப் பாராட்டுக் கட்டுரை வரைக :

1 திருக்குறள்
2 நாலடியார்
3 சிலப்பதிகாரம்
4 மனோன்மணீயம்
5 பழமொழி
6 புறநானூறு
7 நள வெண்பா
8 பெரியபுராணம்
9 ஆசிய ஜோதி
10 தனிப்பாடல்கள்
11 மணிமேகலை
12 பாரதியார் பாடல்

## IV தீர்மானங்களைத் தயாரித்தல்

தீர்மானங்களைத் தயாரித்தல் ஜனநாயக நாட்டில் மக்கள் தங்கள் விருப்பங்களை அடைதற்கு ஒன்றுகூடி ஆலோசனை செய்து, முடிவாகவுள்ள வேண்டுகோளை அரசியலாருக்கோ பொதுமக்களின் பிரதிநிதியாகவுள்ள தலைவருக்கோ அனுப்புவதாகும். அம்முறையில் மாணவர்களும் கல்விப்பயிற்சியில் தங்களுக்கு நன்மையாகத் தோன்றும்சில கருத்துக்களைப் பள்ளித் தலைமையாசிரியருக்குத் தீர்மானங்களாக அனுப்பலாம்.

பெரிய மகாநாடுகள் நடத்திப் பல தீர்மானங்களை நிறைவேற்றுவதை நேரிலோ அன்றிப் பத்திரிகைகளிலோ நீங்கள் பார்த்திருக்கலாம். அவ்விதமே பலவகைப்பட்ட கழகங்களும் தத்தமக்கேற்ற முறையில் தீர்மானங்களைச் செய்து குறிப்பிட்ட அதிகாரிகட்கும் அரசாங்கத்திற்கும் அனுப்பி வருகின்றன. மாணவர்களே எதிர்காலக் குடிகள் ஆதலின் அவர்கள் தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் பயிற்சி பெறுவது மிகவும் நல்லது. இங்குச் சில தீர்மானங்கள் மாதிரிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## பள்ளி மாணவர் கழகத் தீர்மானங்கள்.

தலைமையாசிரியர் அவர்கட்கு,
பி. கே. என். உயர்நிலைப்பள்ளி,
திருமங்கலம்.

அன்புமிக்க தலைமையாசிரியரவர்களே !

நமது பள்ளிமாணவர் கழகம், மாணவர் கல்விப் பயிற்சியின் நலன் கருதும் முறையில் சில தீர்மானங்களை நிறைவேற்றி யுள்ளது. தாங்கள் அன்புகூர்ந்து அவற்றைச் செயல்முறையில் நடைபெறுமாறு செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

### தீர்மானங்கள்

1. மாணவர் வாசகசாலைக்கெனத் தனியிடம் இல்லா திருப்பது பெருங்குறையாகும். ஆகவே, அதற்குத் தனி யிடம் ஒன்றும், வேண்டிய பிறவசதிகளும் செய்து தருமாறு தலைமை யாசிரியரை இக்கழகம் வேண்டிக்கொள்கிறது.

2. அயலூர்களிலிருந்து வந்து படிக்கும் மாணவர்க்கு உணவும் இருப்பிடமும் தரக்தக்க அளவில் ஒரு மாணவர் விடுதி அமைக்கவேண்டுவது மிகவும் அவசியம் எனக் கருது வதால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு இக்கழகம் வேண்டுகிறது.

திருமங்கலம்.
10—10—49

இங்ஙனம்,
கதிர்வேல்,
மாணவர் கழகச் செயலாளர்.

### பயிற்சி

பின்வருவன பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றுதல் போல் வரைக :

1 ஊர்ப் பொதுவில் ஒரு வாசகசாலை நிறுவுதல்,

2 இளைப்பாறுதற்குரிய தோட்டம் அமைத்தல்,

3 நகரப் பொதுவில் கூட்டங்களை நடத்துதற்குரிய பொது மண்டபம் கட்டுதல்.

4 சுகாதார முறையில் ஊரில் செய்ய வேண்டுவன.

5 பெண்களுக்குத் தனிப் பள்ளி அமைத்தல்.
6 உணவுப்பங்கீட்டு முறையில் கைக்கொள்ள வேண்டுவன.
7 மருத்துவச்சாலை நிறுவுதல்.
8 போக்குவரவிற்குரிய பாதைகள் சில அமைத்தல்.

## V வரவேற்புரை—பிரிவுரை வழங்கல்

புகழ்பெற்ற அரசியலறிஞர், பொதுநலத் தொண்டர், பேரறிஞர், பெரும்புலவர் முதலிய பெரியார்கள் ஒரு ஊருக்குப் புதிதாக வரும்பொழுது. பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வரவேற்புரை வாசித்தளிப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவ்விதமே ஆசிரியர்களும் அதிகாரிகளும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் பொழுதோ, ஓய்வு பெற்று விலகிக் கொள்ளும்பொழுதோ, அவர்களுடைய சிறப்பியல்புகளைப் பாராட்டி, பிரிவுரை வாழ்த்துக் கூறுவதையும் கேட்டிருப்பீர்கள். இவ் வரவேற்பையும், பிரிவுரையையும் பாக்களாகவும் வாசித்தளிப்பதுண்டு. ஆனால் அவை பெரும்பாலும் உரைநடையிலேயே அமைந்திருக்கும்.

வரவேற்பிதழையும் பிரிவுரைத் தாளையும் எவ்வாறு தயாரிப்பது என்பதை நீங்கள் அறிவது அவசியம். இங்கு மாதிரிக்காக வரவேற்புரை யொன்றும், பிரிவுரையொன்றும் கொடுக்கப்படுகின்றன.

### I வரவேற்புரை

இந்தியப் பிரதமர்

**திருவார்ந்த பண்டித ஜவஹர்லால்நேரு**
**அவர்களுக்கு மதுரை நகர மாந்தர்**
**அன்புடன் வாசித்தளித்த**

## வரவேற்பு உபசாரப் பத்திரம்

**கற்றவர் போற்றும் நற்றவத் தோன்றல் !**

வருக ! வருக ! நல்வரவாகுக ! வட கோடியில் பிறந்த தங்களைத் தென் கோடியில் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற நாங்கள் மனமகிழ்ந்து, உளம் நெகிழ்ந்து, அன்பு சுரந்து, ஆர்வமிகுந்து வரவேற்கின்றோம். மன்பதை யோம்பும் அன்புடை அமைச்சரே ! வருக ! அண்ணலே வருக ! வருக ! வருக ! வாழ்வெல்லாம் பெறுக ! !

தங்களது நிறைவுற்ற கல்வியும், குறைவற்ற செல்வமும், நிலைபெற்ற புகழும், அலைவற்ற மனமும், புவியொத்த பொறையும், கவியொத்த நயமும், பெருமை கருதாத சீர்மையும், முறைமை திறம்பா நேர்மையும், குணங்காணுந் தீரமும், குற்றங்கடியும் வீரமும், அருளொழுகு கண்ணும், அறம் பெருகு நெஞ்சும் எங்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. காந்தங் கண்ட கரும்பொன்னானோம்!

## இந்திய மக்களின் இணையற்ற தலைவரே வருக!

பரந்த நோக்கமும், பல்கலைச் சிறப்பும், சிறந்த உள்ளமும், நிறைந்த அறிவும், அருஞ்செயலாற்றுந் திறமையும் இயல்பாக அமையப் பெற்று, சென்ற இரு நூற்றாண்டுகளாக அன்னியரின் ஆதிக்கத்திற்குட்பட்டு அல்லலுற்றிருந்த பாரதத் தாயின் பலகோடி மக்களின் பரிதாப நிலைமையைக் கண்டு, பரிவுகொண்டு, பகைவரை எதிர்த்து, உரிமைப் போர் தொடுத்து, பன்முறை சிறை புகுந்து, தந்தையாரையும், மனைவியாரையுமிழந்தும் மனந்தளராமல், கொண்ட கொள்கையை விடாது, இறுதிவரை இரத்தஞ் சிதறாப் போராடி, இந்தியத்தாயின் அடிமைத் தளையை அறுத்தெறிந்த அரும் பெருஞ் செய்கையால், மனிதருள் மாணிக்கமாய் விளங்கும் முடிசூடா மன்னரே வருக!

## பாரதத் தாயின் சீரிய புதல்வரே! வாழ்க!

அன்னையின் அடிமைத்தளையை அறுத்தெறிந்தீர்; மதுவரக்கனை மாய்த்து மாண்புற்றீர்; வேற்றுமைப்பேயை வெருட்டியடித்தீர். 'இந்தியாவில் ஆங்கில ஆட்சி அறவே நீங்கினால் மக்கள் ஒற்றுமை குலைந்து ஒருவரை யொருவர் வெட்டி வீழ்த்தி வீணேயாவர்' என்று வித்தகம் பேசிய வெள்ளையர் தம்மை வியப்புறச் செய்தீர். இத்தகைய பேராற்றல் வாய்ந்த தம்பால் யாங்கள் வேண்டுவதொன்றுண்டு. தாய்நாட்டிலுள்ள கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் இந்திய மாணவர் சம்பளமின்றிக் கல்வி பயில வழி செய்து கொடுக்கும்படி தங்களை வேண்டுகின்றோம். தேச முன்னேற்றத்திற்குக் கல்விப் பெருக்கமே மூல காரணமென்பது தங்கட்குத் தெரியாததல்ல. எங்களது வேண்டுகோள் அண்மையில் நிறைவேற்றப்படுமென்ற முழு

நம்பிக்கையுடன் தங்களை வாழ்த்தி வரவேற்கின்றோம். தாங்களும், தங்களைத் தலைவராகப் பெற்றுள்ள நாடும், உண்டியும் உடையும் பெருகி உயர்வுற்று வாழ்க! வாழ்க!!

மதுரை,
5—2—1949.

தங்கள் பால்,
அன்பும் நம்பிக்கையுமுள்ள.
**நகரமாந்தர்.**

## 2 பிரிவுரை வழங்கல்

மதுரை நகராண்மை உயர்நிலைப் பள்ளி
தலைமையாசிரியர் உயர்திருவாளர்
ச. **சுந்தரம் பிள்ளை** அவர்கள்
ஆசிரியப் பணியினின்றும் ஓய்வுபெறுவது கருதி
உயர்நிலைப்பள்ளி மாணவர் வாசித்தளித்த

## பிரிவுரைத்தாள்

**தகைமையிற் சிறந்த தலைமையாசிரிய ரவர்களே!**

தங்கள் கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும், எப்பொழுதும் புன்முறுவல் தவழும் இன்முகமும் எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. எங்கள் நலமே கருதும் தங்கள் மாசற்ற உள்ளத்தாலும் அதன் பொருட்டுத் தாங்கள் வகுத்துக் காட்டிய நல்வழிகளாலும், கடமையை செய்வதிலும், ஒழுக்கப் பயிற்சியிலும் தாங்கள் காட்டிய உறுதியாலும் நாங்கள் நன்மாணவராகத் திகழ்வதுடன் எதிர்காலத்திலும் நல்ல பிரஜைகளாக வாழ்வோம் என எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம்.

எங்கள் பலதிறப்பட்ட பயிற்சிகளில் தாங்களும் இளைஞர்க்குரிய உற்சாகத்துடன் பங்குகொண்டு எங்களுக்கு ஊக்கமளித்த பேராசிரியரவர்களே! வகுப்பிற் பயிலும் பாடங்களேயன்றி மாணவர் கழகம், தமிழ்க் கழகம், சாரணர் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், நற்குடி முறைப் பயிற்சிக் கழகம், இன்கலைக் கழகம் முதலிய பல கழகங்களிலும் தாங்களும் உடனிருந்து உதவி செய்துவந்தது எங்களுக்கு எவ்வளவோ நன்மையாயிற்று.

பல ஆண்டுகள் இவ் வுயர்நிலைப்பள்ளிக்குத் தலைமை யாசிரியராக இருந்து, புகழும் பயனும் பெருகச் செய்தது, தங்கள் நிர்வாகத் திறமையை விளக்கி நிற்கின்றது. பிற ஆசிரியர்கட்குத் தோழராயும், எங்களுக்கொரு தந்தையாராயும் இருந்துவந்த தங்கள் பண்பின் உயர்வை என்னென்று புகழ்வோம்! பல்லாண்டு இடைவிடாதுழைத்த தாங்கள் இப்பொழுது ஓய்வுபெற்றுச் செல்கின்றீர்கள். தாங்கள் எங்களுக்களித்த கல்வி, பண்பு முதலிய செல்வங்களுக்குக் கைம்மாறாக யாங்கள் ஏதும் செய்ய வழி அறியோம். ஆயினும், தாங்கள் காட்டிய வழியைப் பின்பற்றி வாழ்ந்து நாட்டுக்குகந்த நன்மக்களாக வாழ்வோம் என உறுதி கூறுகின்றோம். தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு உடலுறுதியுடன் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நகராண்மை உயர்நிலைப்பள்ளி
மதுரை
10—10—49.

இங்ஙனம்,
தங்கள்பால் அன்பும் பணிவுமுள்ள
**மாணவர்கள்**

## பயிற்சி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் பெரியோர்க்கு வரவேற்புரை எழுதுக :

1 இராஜாஜியவர்கள்
2 மாகாண முதலமைச்சர்
3 சர். சி. வி. இராமன்
4 தமிழ்ப் பெரியார் ஒருவர்

கீழே குறிக்கப்படுபவர்களுக்குப் பிரிவுரைத்தாள்களை வரைக :

1 உங்கள் ஊரிலிருந்து மாற்றப்படும் மருத்துவர்
2 ஓய்வு பெற்றுக்கொள்ளும் தமிழாசிரியர்
3 மாற்றப்படும் நீதிபதி
4 மாற்றப்படும் கல்வியதிகாரி

## VI வேண்டுகோள்

### சென்னை மாகாண அரசியல் முதன் மந்திரியார் அவர்களுக்கு

### இராமநாதபுரம் ஜில்லா, பறம்புக்குடி நகரப் பொதுமக்கள் விடுக்கும் வேண்டுகோள்

ஐயா !

இந்நகரம் வையையாற்றின் தென்கரையில் அமைந்திருக்கிறது; இருபதினாயிரம் ஜனத்தொகை கொண்டது. இது, இந்த ஜில்லாவிற்கு வியாபாரம் மிகுந்த நகரங்களிலொன்று. இவ்வூருக்குச் சமீபத்தில், வையையாற்றின் வடகரையில், பதினையாயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள எமனேசுவரம் என்ற நகரமிருக்கிறது. அந்நகரமாந்தரும், கிராம மக்களும், பள்ளி மாணவரும் ஆற்றைக் கடந்து பறம்புக்குடியிலுள்ள கலாசாலைக்கும், இரயில் நிலயத்திற்கும், தாலூகாக் கச்சேரிக்கும், நீதிமன்றத்திற்கும், மருத்துவசாலைக்கும், உணவுப்பொருள் உடை முதலியன வாங்கக் கடைகளுக்கும் வரவேண்டும். அருகிலுள்ள நாகநாதர் கோவிலுக்குப் போய்வரும் ஆயிரக்கணக்கான யாத்திரிகரும் ஆற்றைக் கடந்தே போய்வரவேண்டும்.

ஆகையால், பறம்புக்குடி ஆற்றைக் கடக்கப் பாலவசதி யில்லாதது, பெருங் குறைவாகவும் பொதுமக்களுக்குச் சிரமந் தருவதாகவும் இருக்கிறது. ஆற்றில் வெள்ளம் வருங்காலங்களில், போக்குவரவு முற்றிலும் நின்றுவிடும். மனிதர்கள் ஓடங்களிலேறி ஆற்றைக் கடப்பது வழக்கமாக இருக்கிறது. அடிக்கடி ஓடங்கள் கவிழ்ந்து உயிர்ச்சேதமேற்படுகிறது. தபால் போக்குவரவும் தடையாகிறது.

இக் குறையைப் போக்குவது மிகவும் அவசியமாகும். ஆதலின், வையையாற்றில் பாலம் அமைத்து, மக்களது கஷ்டத்தைப் போக்கும்படி, தாழ்மையுடன் சென்னை மாகாண அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

பறம்புக்குடி }<br>17—3—49. }

இங்ஙனம்,<br>பறம்புக்குடி நகரப் பொதுமக்கள்,